بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 11

இதழ் 34 & 35

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1448 - ரபீயுல் அவ்வல் 06 - 13

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - ஸஹுர் 20-27 ★ 20 - 27 ஆகஸ்ட் 2026


## அல்லாஹ்வின் கட்டளை

وَ اعۡبُدُوا اللّٰہَ وَ لَا تُشۡرِکُوۡا بِہٖ شَیۡئًا وَّ بِالۡوَالِدَیۡنِ اِحۡسَانًا وَّ بِذِی الۡقُرۡبٰی وَ الۡیَتٰمٰی وَ الۡمَسٰکِیۡنِ وَ الۡجَارِ ذِی الۡقُرۡبٰی وَ الۡجَارِ الۡجُنُبِ وَ الصَّاحِبِ بِالۡجَنۡۢبِ وَ ابۡنِ السَّبِیۡلِ ۙ وَ مَا مَلَکَتۡ اَیۡمَانُکُمۡ ؕ اِنَّ اللّٰہَ لَا یُحِبُّ مَنۡ کَانَ مُخۡتَالًا فَخُوۡرَا ۔

நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்; அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். மேலும் பெற்றோர்களுடன் (மிக்க) நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும் உறவினர்கள், அநாதைகள், ஏழைகள், உறவினர்களான அண்டை வீட்டுக்காரர்கள், அந்நியர்களான அண்டை வீட்டுக்காரர்கள், உங்களுடனிருப்பவர்கள், வழிப்போக்கர்கள், உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் ஆகியவர்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்.(அந் நிஸா: 37)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நபிமொழி**

## ஆதமின் மகனே! நான் நோயுற்றிருந்தேன், நீ என்னை நலம் விசாரிக்க வரவில்லை!

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். இறைத் தூதர் (ஸல்) கூறினார்கள்:

கண்ணியமும், மேன்மையும் பொருந்திய அல்லாஹ் கியாமத் நாளன்று, ஆதமின் மகனே! நான் நோயுற்றிருந்தேன் ; நீ ! என்னை நலம் விசாரிக்க வரவில்லை! என்று கூறுவான். அப்போது, என் இறைவா! நான் உன்னை எப்படி நலம் விசாரிப்பேன்? நீயோ அகில உலகத்தையும் பராமரிப்பவன் ஆவாய்! என்று அடியான் கூறுவான். அதற்கு, என்னுடைய இன்ன அடியார் நோயுற்றிருந்தார் என்பது உனக்குத் தெரியாதா? நீ! அவரை நலம் விசாரிக்கச் செல்லவில்லையே! நீ அவனை நலம் விசாரிக்கச் சென்றிருந்தால், அங்கே என்னைக் கண்டிருப்பாய்! என்பது உனக்குத் தெரியாதா? என்று அல்லாஹ் கூறுவான். ஆதமின் மகனே! நான் உன்னிடம் உணவு கேட்டேன்; ஆனால் நீ எனக்கு உணவளிக்கவில்லை என்று இறைவன் கேட்பான்.

அதற்கு, 'என் இறைவா! நீ அகிலங்களின் இறைவன் ஆவாய்; அவ்வாறிருக்க, உனக்கு நான் எவ்வாறு உணவளிக்க முடியும்?' என்று அடியான் கூறுவான். அதற்கு அல்லாஹ் கூறுவான்: 'என்னுடைய இன்ன அடியார் உன்னிடம் உணவு கேட்டார்; ஆனால் நீ அவனுக்கு உணவளிக்கவில்லை என்பது உனக்கு நினைவில்லையா? நீ அவருக்கு உணவளித்திருந்தால், அதற்கான நற்கூலியை என்னிடம் நீ பெற்றிருப்பாய்! என்பது உனக்குத் தெரியாதா? ஆதமின் மகனே! நான் உன்னிடம் தண்ணீர் கேட்டேன்; ஆனால், நீ எனக்குத் தண்ணீர் தரவில்லை என்று இறைவன் கூறுவான். அதற்கு, 'என் இறைவா! நீ அனைத்து அகிலங்களின் இறைவன் ஆவாய்; அவ்வாறிருக்க, உனக்கு நான் எப்படி தண்ணீர் புகட்ட முடியும்?' என்று அடியான் கூறுவான்.

அதற்கு, அல்லாஹ் கூறுவான்: 'என்னுடைய இன்ன அடியார் உன்னிடம் தண்ணீர் கேட்டார்; ஆனால், நீ அவருக்குத் தண்ணீர் தரவில்லை; நீ அவருக்குத் தண்ணீர் கொடுத்திருந்தால், அதற்கான நன்மையை என்னிடம் பெற்றிருப்பாய்!

(ஸஹீஹ் முஸ்லிம்: கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா - நோயாளியை நலம் விசாரிப்பதன் சிறப்புகள் பற்றிய அத்தியாயம்)

* * * * * * * * * * *

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்**

## மனிதகுலத்திடம் அனுதாபம் கொள்ளுங்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

' அல்லாஹ்வின் இரண்டு கட்டளைகளை எப்போதும் நன்றாக நினைவில் கொள்ளுங்கள்! முதலாவது, அவனது இருப்பிலோ, பண்புகளிலோ அல்லது வணக்கத்திலோ வேறு எவரையும் அவனுக்கு இணையாக்கக் கூடாது.

இரண்டாவது, மனிதகுலத்திடம் இரக்கம் காட்ட வேண்டும். இங்கு நன்மை செய்வது என்பது உங்களது சகோதரர்கள் மற்றும் உறவினர்களுக்கு மட்டுமே செய்வதைக் குறிக்காது; மாறாக, அவர் யாராக இருந்தாலும் ஆதமின் சந்ததியாக, அல்லாஹ்வின் படைப்பாக இருந்தால் போதுமானது. அவர் இந்துவா ?அல்லது கிறிஸ்தவரா? என்று பார்க்காதீர்கள்.

நான் உங்களுக்கு உண்மையைக் கூறுகிறேன்: அல்லாஹ் உங்களுக்கான நீதியைத் தன் கையில் எடுத்துக்கொண்டான்; நீங்கள் அதைச் செய்ய வேண்டும் என்று அவன் விரும்பவில்லை. நீங்கள் எவ்வளவு மென்மையைக் கடைப்பிடிக்கின்றீர்களோ, மேலும், எவ்வளவு பணிவையும், தாழ்மையையும் மேற்கொள்கின்றீர்களோ, அந்த அளவுக்கு அல்லாஹ் உங்களிடம் மகிழ்ச்சியடைகிறான்.

உங்கள் எதிரிகளை அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுங்கள். மறுமை நாள் அருகில் உள்ளது; எதிரிகள் உங்களுக்குத் தரும் துன்பங்களைக் கண்டு நீங்கள் கலங்கக் கூடாது; நீங்கள் இன்னும் அவர்களால் பெரும் துன்பங்களைச் சந்திக்க நேரிடும்! என்று நான் காண்கிறேன். ஏனெனில், ஓர் அணை உடைந்து வெள்ளம் பெருக்கெடுத்து செல்வதைப் போன்று, நாகரிகத்தின் எல்லையைத் தாண்டிச் செல்பவர்களின் நாவானது செயல்படுகின்றது. எனவே, மார்க்கப் பற்றுள்ளவர் தன் நாவைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.'

(அல்-ஹகம், 22 ஜனவரி 1907, மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 130)

* * * * * * * * * * *

**தஃப்ஸீரே கபீர்**

## மனிதகுலம் முழுவதும் உங்களின் சொந்தக் குழந்தைகளாகத் தோன்றும் அளவிலான நன்மையின் அந்த அந்தஸ்தை அடையுங்கள்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அந்-நஹ்ல் வசனம் 91-ன் விளக்கவுரையை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

நன்மை செய்யும்போது, இன்ன நபர் என்னுடன் நல்ல முறையில் நடந்து கொண்டார்; நான் அவருக்கு அதைவிடச் சிறந்த முறையில் பதிலுதவி செய்வேன்; அதனால் எனக்கு நல்ல பெயர் கிடைக்கும்' என்றோ, அல்லது ஒரு குற்றவாளியின் குற்றத்தை மன்னிக்கும்போது, 'நான் இவரிடம் நல்ல முறையில் நடந்து கொண்டால் இவருடைய உள்ளத்தில் இருக்கும் பகைமை நீங்கி, இவர் என் நண்பராகி எனக்கு வலிமை சேர்ப்பார்' என்றோ மனிதனுக்கு எண்ணம் தோன்றுகிறது.

ஆனால், ஒரு தாய் தன் குழந்தையை நேசித்து, அதற்காகத் தியாகம் செய்யும்போது, அவளிடம் அதற்குப் பகரமாக சிறிதும் கூலி கிடைக்கும் என்ற ஆசை இருப்பதில்லை. மாறாக, அவளது அன்பின் அடித்தளமே அவளது சொந்தத் தியாகத்தில்தான் அமைந்திருக்கின்றது. ஒரு பெண்ணிற்குப் பிள்ளைகள் பிறக்காதபோது, 'எனக்கு ஒரு மகன் இருந்தால் அவன் எனக்குப் பணிவிடை செய்வான்' என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் எழுவதில்லை. மாறாக, 'நான் அவனை வளர்க்க வேண்டும், அவனுக்குப் பணிவிடை செய்ய வேண்டும், அவனுக்கு நல்ல ஆடைகளை அணிவிக்க வேண்டும்; அவனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும்; அவனது குழந்தைகளைக் கொஞ்ச வேண்டும்' என்ற உணர்வோடுதான் அவளுக்கு சந்ததிக்கான ஆசை ஏற்படுகின்றது.

சுருக்கமாகக் கூறின், சந்ததிக்கான ஆசை கொள்ளும்போது தாயின் உள்ளத்தில் பணிவிடை பெற வேண்டும் என்ற மிகச் சிறிய அளவிலான எண்ணம் கூட இருப்பதில்லை; மாறாக, சந்ததிகளுக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்ற ஆர்வம்தான் அந்த ஆசைக்கான காரணியாக திகழ்கின்றது. இந்த நன்மைக்கான உணர்வுதான் மனிதனுடைய மிகப்

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# மஜ்லிஸே இர்ஃபான் எனும் ஓர் உலகளாவிய நிகழ்ச்சி

இறைக் கட்டளையின் அடிப்படையில் அஹ்மதிய்யா ஜமாஅத் நிறுவப்பட்டதிலிருந்து, ஜமாஅத்தின் தர்பிய்யத்தில் 'மஜ்லிஸே இர்ஃபான் ஓர் அடிப்படையான பங்காற்றியுள்ளது. இந்த மஜ்லிஸே இர்ஃபான், ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்தில் தொடங்கியது. அப்போது ஹுஸூர் (அலை) அவர்களின் அருளுக்குரிய வழிகாட்டுதல்கள் உடனுக்குடன் குறிப்பெடுக்கப்பட்டு, பின்னர் அவை அல்-ஹகம் மற்றும் அல்-பத்ர் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு வந்தன. ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மல்ஃபூஸாத் என்ற வடிவில் இந்த மஜ்லிஸே இர்ஃபான் அமர்வுகள் வெளியாகியுள்ளன. பின்னர் ஹஸ்ரத் அக்தஸ் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அக்தஸ் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி), ஹஸ்ரத் அக்தஸ் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி), ஹஸ்ரத் அக்தஸ் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) ஆகியோரின் அருளுக்குரிய காலகட்டங்களின் மஜ்லிஸே இர்ஃபான் அமர்வுகளும், ஜமாஅத் பத்திரிகைகள் மற்றும் நூல்களிலும் வெளியிடப்பட்டுள்ளன ; மேலும், சமூக ஊடகங்களுக்கு அழகு சேர்த்திருக்கின்றன.

ஹஸ்ரத் அக்தஸ் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அருளுக்குரிய கிலாஃபத் காலத்தில், இந்த மஜ்லிஸ் இர்ஃபான் அமர்வுகள் ஒவ்வொரு வாரமும் MTA சேனலில் 'This Week With Huzur Anwar" எனும் தலைப்பில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன; மேலும் சமூக ஊடகங்களிலும் கிடைக்கின்றன.

ஒவ்வொரு காலகட்டத்திலும் 'மஜ்லிஸே இர்ஃபான்' என்ற நிகழ்ச்சி எப்படிப்பட்டதாக இருந்து வருகிறது என்றால், அது ஜமாஅத் உறுப்பினர்களுக்கு தர்பிய்யத், தப்லீஃக், கல்வி மற்றும் நிர்வாக கோணங்களில் பல வழிகாட்டுதல்களை வழங்கும் ஒரு நிகழ்ச்சியாக இருந்து வருகிறது. சில சமயங்களில் அரசியல் அல்லது கல்வித்துறையைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்கள் ஹுஸூர் அவர்களைச் சந்திக்கும்போது, அவர்களின் நாடு தொடர்பாகவும், கல்வி மற்றும் உலகில் பரவியுள்ள அமைதியின்மையை அகற்றுவது தொடர்பாகவும் அவர்களுக்கு ஹுஸூர் அவர்கள் வழிகாட்டல்களை வழங்குகின்றார்கள். எப்படியிருப்பினும், இந்த உலகளாவிய நிகழ்ச்சியானது கேட்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு கலங்கரை விளக்கமாகும்.

பத்ர் பத்திரிகை வாசகர்களுக்கு இந்நிகழ்ச்சியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக, மாதிரியாக ஜனவரி 02, 2026 அன்று அமெரிக்காவின் வர்ஜினியாவைச் சேர்ந்த காதிம்களுடன் ஹுஸூர் அன்வர் அவர்கள் மேற்கொண்ட சந்திப்பின் சுருக்கம் கீழே வழங்கப்படுகிறது:

**கேள்வி:** எங்களது உலகியல் கல்வியுடன் ஜமாஅத் நூல்களை எவ்வாறு படிக்க முடியும்?' என்பது இந்த சந்தர்ப்பத்தில் கேட்கப்பட்ட முதல் கேள்வியாக இருந்தது.

**பதில்:** ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

ஒரு நாளில் 24 மணிநேரம் உள்ளது. ஒரு மனிதன் ஆறு மணிநேரம் தூங்கி, இரண்டு மணிநேரம் உணவிற்கும், இரண்டு மணிநேரம் தொழுகைக்கும் செலவிட்டு, பல்கலைக்கழகக் கல்விக்கு 7 மணிநேரம் ஒதுக்கி, வீட்டிற்கு வந்த பிறகு இரண்டு மூன்று மணிநேரம் படித்தாலும், மீதமுள்ள நான்கு மணிநேரத்தில் அரை மணிநேரம் கூட ஒதுக்க முடியாதா என்ன? நீங்கள் விரும்பினால் நேரம் ஒதுக்க முடியும். 'எனக்கு சோர்வாக இருக்கிறது' என்று நீங்கள் கூறினால், உலகம் உங்கள் முதல் முன்னுரிமையாகிவிட்டது என்று அர்த்தம். எனவே உங்கள் வாழ்க்கையை சீரமைத்துக் கொள்ளுங்கள். வாசிப்பிற்கு அரை மணிநேரம் ஒதுக்கினாலும் போதும்; ஆர்வம் அதிகரிக்கும் போது அதிக நேரமும் ஒதுக்க முடியும்.'

**கேள்வி:** நான் மதிப்பிற்குரிய மௌலானா அதாவுல்லாஹ் கலீம் ஸாஹிப் அவர்களின் பேரன் ஆவேன். ஹுஸூர் அவர்களுக்கு அன்னாரைப் பற்றிய நினைவுகள் ஏதேனும் இருந்தால் எடுத்துரைக்குமாறு பணிவுடன் விண்ணப்பிக்கின்றேன் என்று ஒரு காதிம் கூறினார்.

**பதில்:** ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

' நான் அவருடன் சேர்ந்து பணியாற்றவில்லை, ஆயினும், நான் பார்த்த வரையிலும், கேள்விப்பட்ட வரையிலும் அவர் ஒரு சுயநலமற்ற வாழ்க்கையை அர்ப்பணித்தவராக இருந்தார். அவர் தினமும் தஹஜ்ஜுத் தொழுது, ஜமாஅத்திற்காக துஆ செய்து வந்தார் என்று நான் கேள்விப்பட்டுள்ளேன். அல்லாஹ் என்னையும் நல்லவராக ஆக்கட்டும்' என்று நீங்கள் துஆ செய்யுங்கள். இரண்டாவதாக, அவர் கானாவில் சேவை செய்த நாட்களில் கானாவின் நிலைமைகள் மோசமாக இருந்தன. அவர் ஒருபோதும் குறையும் கூறியதில்லை; எப்போதும் சிரித்த முகத்துடன் பேசி வந்தார். நீங்கள் இந்த நிலையில் இருப்பதற்கு அதுவே காரணமாகும். எனவே அல்லாஹ்வை முழுமையாக நம்புவதும், தொழுகைகளைப் பேணுவதும், துஆ செய்வதும் மிகவும் அவசியமாகும்.'

**கேள்வி:** எளியவன் மண்டல 'நாஸிம் வக்காரே அமல்' ஆக சேவை செய்து வருகிறேன். கடின உழைப்பு தேவைப்படுகின்ற அல்லது கைகள் அழுக்காகும் வேலைகளை சில காதிம்கள் செய்வதில்லை. அதுபோன்ற காதிம்களிடையே 'வக்காரே அமல்' செய்வதற்கான மனப்பான்மையை எவ்வாறு ஏற்படுத்துவது? என்ற மற்றொரு கேள்வி கேட்கப்பட்டது.

**பதில்:** ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

வக்காரே அமல்' என்பதற்கு ஆங்கிலத்தில் என்ன பெயர் வைக்கப்பட்டுள்ளது? அதற்கு Dignity Labour (உழைப்பின் கண்ணியம்) என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் உங்கள் கண்ணியம் (Dignity) அடங்கியுள்ளது என்று அவர்களிடம் கூறுங்கள். அஹ்ஸாப் போரின் போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மண் தோண்டினார்கள் என்றும், அன்னாரின் வயிற்றிலும் மண் படிந்திருந்தது என்றும் நிரூபணமாகியுள்ளது.

மேலும், ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: அதுபோன்ற காதிம்களுக்கு முன்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை எடுத்து வையுங்கள்; இதனால் நற்கூலி கிடைக்கிறது; ஆரோக்கியமும் மேம்படுகிறது என்று கூறுங்கள்.

**கேள்வி:** நான் எதிர்காலத்தில் மருத்துவராக ஆக விரும்புகிறேன். கல்வியிலும், தொழில்முறையிலும் வெற்றி பெறுவதுடன் மார்க்கம், மற்றும் அல்லாஹ்வுடன் வலுவான தொடர்பை எவ்வாறு ஏற்படுத்துவது? என்பது குறித்து ஹுஸூர் அவர்கள் வழிகாட்டலாமா? என்று ஒருவர் கேட்டார்.

**பதில்:** ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

பல அஹ்மதி மருத்துவர்கள் தொழுகையாளிகளாகவும், தஹஜ்ஜுத் தொழுபவர்களாகவும் இருக்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் காலத்தில் டாக்டர் அப்துஸ் ஸத்தார் ஷா அவர்கள் மருத்துவராக மருத்துவமனையில் பணியாற்றி வந்தார்கள். இவர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் தாய்வழிப் பாட்டனார் ஆவார்கள். அன்னார் மருத்துவப் பணியும் செய்வார்கள்; தப்லீஃக்கும் செய்து வந்தார்கள்.

அன்னாரைப் பற்றிய ஒரு சம்பவம் உள்ளது: ஒருநாள் அன்னார் மஸ்ஜிதில் தப்லீஃக் செய்து கொண்டிருந்தார்கள். பள்ளிவாசலிலிருந்த களிமண் கூஜாவை எடுத்து ஓர் எதிரி அன்னாரை அடித்ததில் அன்னாருடைய மண்டை உடைந்தது. அன்னார் மருத்துவமனைக்குச் சென்று கட்டுப்போட்டுக் கொண்டார்கள். அடித்த நபர் மிகவும் 'பயந்தான். மன்னிப்பு கேட்டபோது, 'நான் உன்னை மன்னித்துவிட்டேன்; இப்போது என் பிரச்சாரத்தைக் கேள்! என்று கூறினார்கள். 'நானோ அவரை அடித்தேன்; ஆனால் அவர் என்னை மன்னித்து, இன்முகத்தோடு பேசுகின்றார். நிச்சயமாக அஹ்மதிய்யத் உண்மையானதுதான்' என்று அந்த நபர் மிகவும் தாக்கத்திற்குள்ளானார்.

எனவே அவர் பைஅத் செய்து விட்டார். அதேபோன்று, நீங்களும் மருத்துவரான பிறகு உங்கள் நோயாளிகளிடம் நற்பண்புகளைக் காட்டுங்கள்.

ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோழரான ஹஸ்ரத் கலீஃபா ரஷீதுத்தீன் ஸாஹிப் அவர்களின் சம்பவத்தையும் கூறினார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அன்னார் சிவில் சர்ஜனாக இருந்தார்கள் என்று கூறினார்கள். அன்னார் எந்தளவுக்கு பொருள் தியாகம் செய்தார்கள் என்றால், 'சற்று கட்டுப்படுத்துங்கள்; உங்களுக்காகவும் கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள்' என்றும் இன்னும் கூறப்போனால், 'நீங்கள் இந்தளவுக்கு நிதித் தியாகம் செய்துவிட்டீர்கள்; இனி நீங்கள் கொடுக்காவிட்டாலும் எந்த வித்தியாசமும் ஏற்படாது என்றும் அவரிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு கூற வேண்டியதாயிற்று.

அதேபோல ஹுஸூர் அவர்கள் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'அன்னாரும் ஒரு (ஹக்கீம்) மருத்துவராக இருந்தார்கள்; மருத்துவத்தின் மூலம் ஈட்டியதை இஸ்லாத்திற்காகச் செலவிட்டார்கள்; ஏழைகளுக்குச் சேவையாற்றினார்கள்; கருணை காட்டினார்கள்' என்று கூறினார்கள். மேலும், 'நீங்களும் ஏழைகளுக்குச் சேவையாற்றினால் அல்லாஹ்வும் மகிழ்ச்சியடைவான்; ஜமாஅத்தின் சேவையும் நிறைவேறும்' என்றும் கூறினார்கள்.

'அன்பிற்குரிய ஹுஸூர்! உலகில் உள்ள அரசியல் அநீதிகளுக்கு எதிராக எவ்வாறு குரல் எழுப்புவது? என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டது:

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: 'நமது எல்லை எவ்வளவோ, அவ்வளவு நாம் செய்கிறோம். என் எல்லை எட்டக் கூடிய இடம் வரை நான் செய்கிறேன். உங்கள் எல்லை எட்டக் கூடிய இடம் வரை நீங்கள் செய்து கொண்டே இருங்கள். அமெரிக்காவில் கேப்பிட்டல் ஹில்லில் பேச எனக்கு வாய்ப்பு கிடைத்தபோது, அவர்களுக்கு அமைதியைப் பற்றிய விஷயங்களைக் கூறினேன். பிறகு அவர்களின் செனட்டர் ஒருவர், 'நீங்கள் கூறும் விஷயங்கள் மிகவும் நல்லவையாகும்; அவசியமானவையும் ஆகும்; ஆனால், எங்களால் அதன்படி செயல்பட முடியாது' என்றார்.'

கூறினார்கள்: அவர்களுக்குச் சுய அரசியல் நோக்கங்கள் உள்ளன; அதற்காகப் பணம் கொடுத்தும் தங்களுக்கு ஆதரவாகக் குரல் எழுப்பச் செய்கிறார்கள்; நீதியின் அளவுகோல் தனக்கு ஒன்றாகவும், மற்றவர்களுக்கு வேறொன்றாகவும் இருக்கும்போது, உண்மையான நீதி எவ்வாறு நிலைபெற முடியும்? எனவே, சாத்தியமான வரை உங்கள் சுற்றுப்புறத்தில் நீதியை நிலைநாட்ட முயன்று கொண்டே இருங்கள்.

தமிழாக்கம்
முரப்பி
A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

# ஜுமுஆ பேருரை

## காலத்தின் இமாம் ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பரிவு கொடை மற்றும் தாராள மனப்பான்மை தொடர்பான ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 03 ஜுலை 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **வஃபா** மாதம் **03 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۞ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِينَ ۞ الرَّحْمٰنِ الرَّحِيمِ ۞

مٰلِكِ يَوْمِ الدِّينِ ۞ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ ۞ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ ۞

صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَ ۞

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பரிவு மற்றும் வள்ளல் தன்மையின் சில நிகழ்வுகளை எடுத்து வைப்பேன். ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

அன்னாரது கொடை ஓர் எல்லையில்லா நதியாக இருந்தது. அன்னாரது கை முத்தாரம் பொழியும் முகிலாக இருந்தது. அதாவது, முத்தைப் பொழியும் மேகமாக இருந்தது. அது பொழிந்து வந்தது; தாகம் தீர்த்து வந்தது.

இந்தத் தொடர் ரமலான் மாதத்தில் மிகவும் அதிகரித்து விடும். மறைவிலும் மறைவான வழிகளில், ஹுஸுர் (அலை) அவர்கள் தேவையுடவர்களுக்கு வழங்கிக் கொண்டே இருப்பார்கள். விலையுயர்ந்ததிலும் விலையுயர்ந்த பொருளைப் பிறருக்கு வழங்கி விடுவதில் அன்னாருக்கு ஒருபோதும் தயக்கம் ஏற்பட்டது கிடையாது. இந்த நிலை அன்னாரது வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படுகிறது. இறைவனால் சீர்திருத்தவாதியாக நியமிக்கப்படுவதற்கு முன்னரும் இது தன் பெருமையில் மிளிர்கிறது. இதன்படி, காஷ்மீரைச் சேர்ந்த மியான் கஃப்பாரா ஸாஹிப் அப்துல் கஃபூர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பேருதவி, பேருதவிக்கான சந்தர்ப்பம் மற்றும் பண்பு ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிட்டவாறு, தமது அறிவிப்பை வழங்குகிறார்கள். இவர்களுக்குத் திருமணம் ஆன போது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் 2 விலையுயர்ந்த நகைகளை இவர்களுக்கு உதவி புரிய வழங்கி விட்டார்கள். இது அன்னார் (அலை) இறைவன் புறமிருந்து நியமிக்கப்படுதவற்கு முன்பு நிகழ்ந்ததாகும். அப்பொழுது அன்னார் (அலை) ஒரு தனிமை விரும்பியாக வாழ்வைக் கழித்து வந்தார்கள்.

ஹஸ்ரத் ஷேக் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: இந்த ஓர் எடுத்துக்காட்டு மட்டுமே கிடையாது. இதுபோன்ற பல நிகழ்வுகள் இருக்கின்றன. அன்னாரிடம் யாராவது ஒருவர் ஏதாவது கேட்டு, அன்னார் (அலை) வழங்காமல் இருந்த அல்லது அன்னார் (அலை) யாராவது ஒருவரின் தேவையை உணர்ந்து அவர் கேட்காமல், கோரிக்கை வைக்காமல், அவருக்கு உதவி புரியாமல் இருந்த அத்தகைய சந்தர்ப்பம் அன்னாருக்கு வந்ததே கிடையாது. அன்னார் (அலை) கருணையாளர்களிலும் கருணையாளராக இருந்தார்கள். (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதிய நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 3, பக்கம் 312) (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதிய நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 2, பக்கம் 290)

பஷீர் சாஹிப் ப(ஹ்)ட்டீ அவர்களின் தாயார் அவர்கள் கூறுகிறார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது (ரலி) அவர்களின் திருமண சந்தர்ப்பத்தில், ஒரு இசைக்குடி பெண் பறையை எடுத்துக் கொண்டு ஹுஸுர் (அலை) அவர்களின் வீட்டிற்கு வந்து வாசிக்கத் துவங்கி விட்டாள். இதனால் ஏதாவது பெறுவது அவளது நோக்கமாகும். ஏனெனில், அது திருமண சந்தர்ப்பம். இது அங்கு பொதுவான வழக்கம் ஆகும். ஹுஸுர் (அலை) அவர்கள் பறை சத்தம் கேட்டதும், உடனடியாக அதன் பக்கம் கவனத்தைத் திருப்பி, இதை வாசிக்க வேண்டாம் என்று அவளிடம் சொல்லுங்கள். நிறுத்தச் சொல்லுங்கள். இவள் என்ன கேட்கிறாளோ அதை இவளுக்குக் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். இதன்படி, அவளுக்கு 4, 5 ரூபாய் கொடுக்கப்பட்டது. பிறகு அவள், குளிர் மாதம் வந்து விட்டது. எனக்கு குளிர் அடிக்கிறது என்று சொன்னாள். அப்பொழுது அன்னார் (அலை) அவளுக்கு ஒரு ரஸாயீயும் (கடும் குளிர் போர்வையும்) கிடைக்கச் செய்தார்கள். ஆனால், பறையை நிறுத்த வைத்து விட்டார்கள். (ரிவாயத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 441)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

எல்லாவற்றிற்கும் முதலாக இந்த விஷயத்தை உள்ளத்தில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அன்னாருக்கு எந்த வித சிறப்பான ஆடைக்கான ஆர்வமும் இருக்கவில்லை. வாழ்நாளின் இறுதியின் சில ஆண்டுகளில் அன்னாரிடம் சாதாரணமான, தைத்த உடைகள் அன்பளிப்பாக நிறைய வந்தன. குறிப்பாக, மேல்சட்டை, பைஜாமா மற்றும் குர்தா போன்றவையாகும். அவற்றைப் பெரும்பாலும், லாஹோரைச் சேர்ந்த ஷேக் ரஹ்மத்துல்லாஹ் சாஹிப் ஒவ்வொரு பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் சந்தர்ப்பத்திலும், அன்பளிப்பாகத் தம்முடன் கொண்டு வருவார்கள். அதையே அன்னார் (அலை) பயன்படுத்தி வந்தார்கள். ஆனால், அவை போக, எப்பொழுதாவது, அன்னார் (அலை) தாமும் தைத்துக் கொள்வார்கள். தலைப்பாகையையோ பெரும்பாலும் தாமே விலை கொடுத்து வாங்கி அணிவார்கள். உடைகள் தைத்து, பயன்படுத்தப்பட்டு வர வர அவை உடனுக்குடன் செலவாகியும் வந்தன. அதாவது, எப்பொழுதும் நினைவுப் பொருளாகக் கேட்கக்கூடியவர்கள் வழங்குமாறு வேண்டிக் கொண்டே இருப்பார்கள். சிலவேளை நிலைமை எப்படி ஆகிவிடும்?என்றால், அன்னார் (அலை) ஓர் உடையை நினைவுப் பொருளாக வழங்குவார்கள். இன்னொன்றைத் தயாரிக்கச் செய்து அப்பொழுது அணிய வேண்டி வரும். புரிதல் உடையவர்கள் சிலர் இப்படியும் செய்வார்கள். அதாவது, தமது ஓர் உடையை அனுப்பி விட்டு அத்துடன், ஹுஸுர்! தாங்கள் அணிந்து அவிழ்த்த (அதாவது பயன்படுத்திய) ஆடையை நினைவுப் பொருளாக வழங்கிடுங்கள் என்று கேட்டுக் கொள்வார்கள்.(ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1,பாகம் 1, பக்கம் 416, அறிவிப்பு 447)

ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மத் ஸாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள். அன்னாரிடம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

என்னிடம் ஒரு சிறிய திருக்குர்ஆன் இருந்து வந்தது. அதன் எழுத்தும் மிகவும் தெளிவாக இருந்தது. அது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால், ஒருவர் என்னிடம் அதைக் கேட்ட போது, கேட்டு மறுக்கக்கூடாது என்பதற்காக நான் அவருக்கு அதைக் கொடுத்து விட்டேன் என்று கூறினார்கள். (ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மது ஸாதிக் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல், திக்ரே ஹபீப், பக்கம் 138)

ஹஸ்ரத் குரைஷீ ஷேக் முஹம்மது சாஹிப் அஞ்சலகத்தில் கடிதம் கொண்டு சேர்ப்பவராக இருந்தார்கள். காதியானைச் சேர்ந்தவராக இருந்தார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பல Money Order-களை விநியோகிப்பதற்காக எடுத்துச் சென்றேன். அவற்றின் தொகைகளை ஹுஸுர் அவர்களிடம் விநியோகித்தப் பிறகு, ஊரில் டெலிவரி வேலை செய்து கொண்டிருந்தேன். 4 மணிக்கு அருகில் தபால் நிலையத்துக்குத் திரும்பிச் சென்று, Post Master-க்கு Money Order கள் (விநியோகித்ததற்கான) கணக்கை சமர்ப்பித்தபோது, கணக்கு பார்த்ததில் நான் தவறுதலாக 6 ரூபாய் எங்கேயோ கூடுதலாக விநியோகித்து விட்டது தெரியவந்தது. மிகவும் கவலை ஏற்பட்டது. ஏனெனில், ஹுஸுர் (அலை) அவர்களிடம் விநியோகித்ததுதான் பெரிய தொகையாகும். எனவே, அல்லாஹ் தத்தா எனும் அந்த Post Master, காழ்ப்புணர்ச்சி கொண்ட அஹ்மதி அல்லாத மனிதரான அவர், நீ மிர்ஸா சாஹிபிடம் கேட்பதுதான் சிறந்தது என்றார். ஹுஸுர் (அலை) அவர்களை மீண்டும் தொந்தரவு செய்யவோ என் உள்ளம் விரும்பவில்லை. ஆனால், அவர் மீண்டும் மீண்டும் வற்புறுத்தியதன் பேரில் நான் ஹுஸுர் (அலை) அவர்களிடம் சென்று, ஹுஸுர்! இன்று நான் தவறுதலாக 6 ரூபாய் கூடுதலாக விநியோகித்து விட்டேன் என்று பணிவுடன் கூறினேன். அதற்கு, மியான்! எனக்கோ எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது? என்றே தெரியாது; நானோ இப்பொழுது அதிலிருந்து சிறிது செலவும் செய்து விட்டேன் - அதாவது, மக்களுக்கு வழங்கி விட்டார்கள் .

ஆனால், நீர் ஏழை மனிதர் ஆவீர்; நான் இந்தத் தொகையை உமக்கு வழங்கிவிடுகிறேன். ஆனால், இனி கவனமாக வேலை செய்யுங்கள்; ஏனெனில், நீர் ஏழை ஆவீர் என்று ஹுஸுர் (அலை) அவர்கள் கூறினார்கள்.

இந்த நிகழ்விலிருந்து ஹுஸுர் (அலை) அவர்களின் அழகிய நல்லொழுக்கம், வள்ளல் தன்மை மற்றும் ஏழைகளின் நலன் காத்தல்

பற்றி தெரியவருகிறது. (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 5, பக்கம் 337 - 338)

ஹஸ்ரத் மீர் மஹ்தீ ஹுஸைன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை மவ்லவி முஹம்மத் அஹ்ஸன் சாஹிப் அவர்கள் என்னிடம், சஷ்மே மஸீஹீ (கிறித்தவர்களின் நீரூற்று) எனும் நூலின் ஒரு பிரதியைக் கேட்டார். அதற்கு நான், ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் இவ்வளவு பிரதிகள் அலுவலகத்தில் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். ஏனென்றால், சில நேரம் அரசாங்கம் கேட்கும்; வெளியான நூல்களின் பிரதிகளை வரவழைத்துக் கொள்ளும்; எனவே, இப்பொழுது உங்களுக்குத் தருவதற்குக் கூடுதலாக எந்தப் பிரதியும் இல்லை. நீங்கள் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களிடம் அனுமதி பெற்று வாங்கிக் கொள்ளலாம் என்று கூறினேன். இதனால் மவ்லவி ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள்.

அந்தக் கடிதத்தின் சுருக்கம், அலுவலகத்தில் சஷ்மே மஸீஹீ (கிறித்தவர்களின் நீரூற்று) எனும் நூலின் 20 பிரதிகள் மட்டுமே எஞ்சியுள்ளன. எனக்கு ஒரு பிரதி தேவைப்படுகிறது. தடையில்லை என்றால், எனக்கு ஒரு பிரதியை வழங்கிட வேண்டும் என்பதாகும். அதற்கு ஹுஸுர் (அலை) அவர்கள், நீங்கள் ஒரு பிரதியை எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஆக, அதிலேயே எழுதி கையொப்பமிட்டு விட்டார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 479)

இங்கு ஸஹாபா பெருமக்களின் தெளிவாகப் பேசுதல் பற்றியும் தெரியவருகிறது.

பாருங்கள்! எப்படி அவர்கள் இவ்வளவு பிரதிகள் இருக்கின்றன என்று கூறிவிட்டார்கள்! எனக்குத் தேவைப்படுகிறது; அலுவலகம் இதைச் சொல்கிறது. ஆனால், தாங்கள் கருணை கூர்ந்தால் கிடைக்கலாம் என்கிறார்கள். இது அவர்களின் தெளிவான பேச்சாக இருந்தது. அன்னாரது கொடையளித்தல் பற்றியும் இங்கு தெரியவருகிறது. அதாவது, எப்பொழுதாவது தேவைப்படலாம் என்று ரிஸர்வில் வைக்கப்பட்டிருந்தனதான்; ஆயினும், அன்னார் (அலை) கேட்டவருக்கு மறுக்கவில்லை.

அந்தக் காலத்தில் ஓர் அறிவார்ந்த இளைஞராக இருந்த பண்டிதர் மோஹன்லால் என்பவர், லேக்ராம் சாஹிபின் ஏதாவது ஒரு துண்டுச்சீட்டு போன்றவற்றை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களிடம் சென்று விடுவார்.

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குடும்பத்துடன் மோஹன்லால் அவர்களின் பழைய தொடர்புகள் இருந்து வந்தன. பண்டிதர் மோஹன்லால் சாஹிப் அவர்கள் திரும்பிச் செல்லும்போது, அவர் வெறுங்கையோடு செல்வதற்கு ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். பழங்கள் போன்றவை அல்லது அந்தக் காலத்தில் மிகவும் உயர்தரமாக வந்த சர்க்கரை போன்றவை என ஏதாவது அன்பளிப்பைக் கண்டிப்பாக வழங்கி விடுவார்கள். அது ஒரு சிறப்பான அன்பளிப்பாக இருக்கும்.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

பண்டிதர் மோஹன்லால் அவர்களின் குடும்பத்துடன் எனக்கு நட்புறவு இருந்தது. அவர்களின் தந்தையார் காலத்திலிருந்து இருந்து வந்தது. என்னிடம் அந்த நாள்களின் நிகழ்வுகளை நினைவுகூர்ந்தவாறு எப்பொழுதும் இவ்வாறு கூறுவார்கள்:

ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் மிகவும் கருணை புரிகிறார்கள். எப்பொழுதும் சிரித்துக் கொண்டே சந்திப்பார்கள். ஒருபோதும் வெறுங்கையோடு வர விடமாட்டார்கள். ஒருமுறை ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் எனக்கு மிகவும் உன்னதமான ஆப்பிள்களை வழங்கினார்கள்.நான் அதை எடுத்துச் சென்றேன். நான் திரும்பிச் செல்லும்போதெல்லாம், என்ன கொண்டு வந்துள்ளாய்? என்று கண்டிப்பாகக் கேட்பது பண்டிதர் லேக்ராமுக்கும் வழக்கமாகி விட்டது. நான், ஆப்பிள் கொண்டு வந்துள்ளேன் என்று கூறியபோது, அவர் ஒருவகையில், ஆவலுடன் பார்த்துவிட்டு, கொடு! கொடு! நானும் சாப்பிடுகிறேன் என்று கூறுவார்.

பண்டிதர் மோஹன்லால் கூறுகிறார்கள்:

நான் அவரிடம் சிரித்தவாறு, எதிரியின் வீட்டுப் பொருளை நீங்கள் சாப்பிடக் கூடாது. நீங்களோ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பெரிய எதிரி ஆவீர். (அன்னாருக்கு எதிராகப்) பேசிக் கொண்டிருப்பவர். அவர்களின் வீட்டுப் பொருளை ஏன் வாங்குகிறீர்? என்று கூறினேன். அப்பொழுது அவர் உடனடியாக என் கையில் இருந்து ஆப்பிளை எடுத்துக் கொண்டார்; சாப்பிடத் துவங்கி விட்டார். பிடிங்கிக் கொண்டார்; மேலும், சாப்பிடத் துவங்கி விட்டார்.

சுருக்கமாக, அவர்கள் கூறுகிறார்கள்: இவர்கள் எப்பொழுதும் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களிடம் அன்பு மற்றும் பண்பையே பார்த்துள்ளார்கள். (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின் நூல் தொகுதி 2, பாகம் 2, பக்கம் 186-187)

ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹுஸுர் (அலை) அவர்களிடம் கஸ்தூரி நறுமணம் இருக்கும். ஒருமுறை, ஹுஸுர்! எனக்கு கஸ்தூரி வேண்டும் என்று குறிப்பிட்டேன். ஹுஸுர் (அலை) அவர்கள், இதிலிருந்து எவ்வளவு வேண்டுமோ எடுத்துக் கொள்ளுங்கள் என்று ஒரு சிமிழை என் முன் நீட்டி விட்டார்கள். நான் அதிலிருந்து சிறிதளவு எடுக்க, ஹுஸுர் (அலை) அவர்கள் புன்சிரித்தவாறு, இதுவோ ஒன்றுமே இல்லை என்று கூறினார்கள். பிறகு, ஒரு தோலா ஒன்றரை தோலா (ஏறத்தாழ 18 கிராம்) அளவுக்கு கஸ்தூரியை ஹுஸுர் (அலை) அவர்கள் தாமே எனக்கு வழங்கி விட்டார்கள். (அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 213)

இது மிகவும் விலையுயர்ந்த பொருளாகும். கஸ்தூரி இன்றும் விலையுயர்ந்தது. மருந்துகளில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், அன்னார் (அலை) எந்தவொரு பொருளும் விலைமதிப்புடையதா? இல்லையா? என்பதைப் பார்க்க மாட்டார்கள். அன்னாரோ தமது நல்லொழுக்கத்தின் மேன்மையை வெளிப்படுத்தவிருந்தார்கள். அன்னாருக்குத் தோழர்களுக்காக இருந்த வேதனை மற்றும் கொடையளித்தலுக்கான ஒரு நிகழ்வை ஹகீம் முஃப்தீ ஃபஸ்லுர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் எடுத்துரைக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: என் மனைவிக்குக் குழந்தை பிறந்தது. அதற்கு ஏழாவது நாள் மக்ரிப் தொழுகைக்கு அருகில் மனைவிக்கு வலிப்பு நோய்க்கான அறிகுறிகள் வெளிப்படத் தொடங்கி விட்டன. ஏனெனில், அந்த நாள்களில் இந்தக் கொள்ளை நோய் பரவியிருந்தது. எனவே, அவள் பக்கம் பெரும் கவனம் செலுத்தப்பட்டது.

அவர்கள் கூறுகிறார்கள்:

நான் மஃக்ரிபுக்குப் பிறகு, ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களிடம் ஓடிச் சென்றேன். என் மனைவியின் நிலை இப்படி இருக்கிறது என்று அன்னாரிடம் பணிவுடன் கூறினேன். அதற்கு அன்னார் (அலை), இதுவோ கொடிய நோயின் முன்னோடியாகும். நீங்கள் உடனடியாக அவருக்கு 10 ரத்தீ அளவு (அதாவது, 1.21 கிராம்) பெருங்காயத்தைக் கொடுங்கள் என்று கூறினார்கள். பெருங்காயத்தை மருந்தாக வழங்குமாறு கூறினார்கள். மேலும் ஒன்று, ஒன்றரை மணி நேரத்துக்குப் பிறகு, எனக்குத் தகவல் தெரிவியுங்கள் என்று கூறினார்கள். நான் இஷாவுக்குப் பிறகு, மீண்டும் ஆஜரானேன். மேலும், நோய் அதிகமாகி விட்டது என்று பணிவுடன் கூறினேன். குறைவதற்கு பதிலாக நோய் அதிகரித்து விட்டது. பிறகு, அன்னார் (அலை), 10 ரத்தீ அளவு குயினைன் (எனும் மருந்தைக்) கொடுங்கள். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, மீண்டும் எனக்குத் தகவல் தெரிவியுங்கள். நான் உறங்கியிருப்பேன் என்று கருததி விட வேண்டாம்; தயக்கமின்றி, உரத்த, கம்பீரமான குரலில் படிகட்டிலிருந்து அழைத்திடுங்கள் என்று கூறினார்கள்.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு நான் மீண்டும் சென்றேன். உடல் நலம் தேறவில்லை என்று பணிவுடன் கூறினேன். பிறகு, அன்னார் (அலை) 10 ரத்தீ கஸ்தூரியைக் கொடுங்கள் என்றார்கள். அதற்கு, இந்நேரம் எங்கிருந்து கஸ்தூரியைக் கொண்டு வருவேன்? என்று நான் கேட்டேன். ஹுஸுர் (அலை) அவர்கள் ஒரு கை நிறைய கஸ்தூரியை அள்ளிக் கொண்டு வந்தார்கள். மேலும், 10 ரத்தீ இருக்கும் என்றார்கள். அதற்கு, ஹுஸுர்! இது அதிகம் என்று நான் கூறினேன். அன்னார் (அலை), எடுத்துச் செல்லுங்கள்; பின்னர் உதவும் என்றார்கள். நான் அதை எடுத்துக் கொண்டேன்; 10 ரத்தீ அளவு நோயாளிக்குக் கொடுத்து விட்டேன். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு நான் மீண்டும் சென்றேன்; மேலும், நோய் மிகவும் அதிகமாகி விட்டது என்று பணிவுடன் கூறினேன். அன்னார் (அலை), இப்பொழுது 10 தோலா (அதாவது, 116 கிராம்) அளவுக்கு ஆமணக்கு எண்ணெய் கொடுங்கள் என்றார்கள். பல்வேறு மருந்துகளை மாற்றிக் கொண்டே இருந்தார்கள். நான் வந்து, 10 தோலா அளவுக்கு ஆமணக்கு எண்ணெய் கொடுத்து விட்டேன். அதற்குப் பிறகு, அவளுக்கு மிகவும் கடுமையான வாந்தி வந்தது. வாந்தி இந்த நோயின் இறுதி கட்டமாகும். வாந்திக்குப் பிறகு, அவளுக்கு மூச்சுத் திணறியது. கழுத்து பின்பக்கம் இழுத்துக் கொண்டது. கண்கள் இருட்டி விட்டன. பேச்சு வரவில்லை. நான் மீண்டும் ஓடிச் சென்று படிகளில் ஏறினேன். ஹுஸுர் (அலை) அவர்கள் என் குரலைக் கேட்டு கதவைத் திறந்து விட்டார்கள். மேலும், நலம் தானே! என்றார்கள். நான், இப்பொழுது நிலைமை இன்னும் இக்கட்டானதாக மாறி விட்டது; மூச்சுத் திணறி விட்டது; கழுத்து இழுத்துக் கொண்டது; இது வலிப்பு நோயின் தன்மை ஆகும். அதை meningitis என்பார்கள்.கண்களில் ஒளியில்லை;பேச்சு வரவில்லை என்று பணிவுடன் நான் கூறினேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

உலகத்தின் எத்தனை ஆயுதங்கள் இருந்தனவோ அவற்றையோ நாம் பயன்படுத்தி விட்டோம்; இனி ஓர் ஆயுதம் எஞ்சியுள்ளது; அது துஆ ஆகும். நீங்கள் செல்லுங்கள்! அவருக்கு உடல் நலமான பிறகுதான் நாம் துஆவிலிருந்து தலையைத் தூக்குவோம்!

என்ன பரிவு பாருங்கள்!

ஆக, அவர்கள் கூறுகிறார்கள்:

நான் இதைக் கேட்டதும் திரும்பி வந்து மனைவியிடம், இப்பொழுது உனக்கு என்ன கவலை! இப்பொழுதோ பெறுப்பேற்பவர் தாமே பொறுப்பேற்றுள்ளார்! என்று கூறினேன்.

அவர்கள் கூறுகிறார்கள்: அப்பொழுது இரவு 2 மணியாகியிருந்தது. நான் வீட்டுக்கு வந்தேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நான் இப்பொழுது துஆ செய்வேன் என்று கூறியுள்ளார்கள். சரி! இனி எனக்கு எந்த வேலையும் கிடையாது என்று நோயாளி மனைவியை அதே நிலையில் விட்டுவிட்டு இன்னொரு அறையில் கட்டில் போட்டு உறங்கி விட்டேன். அவர்கள் கூறுகிறார்கள்: காலையில் ஏதோ பாத்திரம் சத்தம் கேட்டு நான் கண் விழித்தேன். நான்

*திருக்குர்ஆனிலிருந்து...*

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

பார்த்தபோது, என் கட்டிலின் கால் பக்கத்தில் என் மனைவி சில பாத்திரங்களை சரி செய்து கொண்டிருந்தாள். நான் எப்படி இருக்கிறாய்? என்று கேட்டேன். அதற்கு அவள், நீங்களோ உறங்கிக் கொண்டிருந்தீர்கள். 2 மணி நேரத்துக்குப் பிறகு, அல்லாஹ் என் மீது அருள் புரிந்து விட்டான். அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் என்று கூறினாள். (குத்ரத்துல்லாஹ் ஸனோரீ ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத்தே அஹ்மது)

இந்த நிகழ்வில் தோழர்கள் மீதான வேதனை மற்றும் கொடையளித்தல் ஆகிய இரண்டின் உயர்தரம் குறித்தும் தெரியவருகிறது.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

காதியானில் ஜாட் இனத்தைச் சேர்ந்த நிஹால் சிங் எனும் ஒரு மூடர், முட்டாள் இருந்தார். தனது இளமைப் பருவத்தில் அவர் ஏதோ ஒரு இராணுவத்திலும் பணியில் இருந்தார். பென்ஷன் வாங்கிக் கொண்டிருந்தார். அவருடைய வீடு ஜனாப் கான் பஹாதுர் மிர்ஸா சுல்தான் அஹ்மத் சாஹிப் அவர்களின் வரவேற்பறையின் சுவரோடு சுவராக இருந்தது. உடன் இணைந்திருந்தது. இவர் இயக்கத்தின் மிகப் பெரும் எதிரியாக இருந்தார். இவரது தூண்டுதலின் பேரிலேயே ஹஸ்ரத் ஹக்கீமுல் உம்மத் (சமுதாயத்தின் மருத்துவர்) ஹஸ்ரத் கலீஃபா நூருத்தீன், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மற்றும் மற்ற சில அஹ்மதிகள் மீது ஒரு பயங்கரமான பொய் குடும்பவியல் வழக்கு தொடுக்கப்பட்டது. இவர் எப்பொழுதும் மற்ற மக்களுடன் இணைந்து கொண்டு அஹ்மதிகளைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தார். ஏசிக் கொண்டிருப்பதோ ஒரு வழக்கமாக இருந்தது. வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்த அந்த நாள்களில் சரியாக, அவர் சகோதரர் மகன் சான்தா சிங்கின் மனைவிக்குக் கஸ்தூரி தேவைப்பட்டது. மற்ற இடங்களில் இருந்து கஸ்தூரி கிடைக்காமல் இருந்தது மட்டுமின்றி, இது மிகவும் விலையுயர்ந்த பொருளாகவும் இருந்தது. அவர் இந்த நிலையில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வீட்டு வாசல் கதவுக்கு வந்து, கஸ்தூரி வழங்குமாறு கேட்டார்.

அதாவது, எதிரியாக இருந்த அதே நபர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அவர் அழைத்ததும் உடனடியாகவே வருகை தந்தார்கள். அவரை சிறிதும் காக்க வைக்காமல்,அவர் உதவி கேட்டதைக் கேட்டதும், உடனடியாகவே அன்னார் (அலை) உள்ளே சென்றார்கள். மேலும், இருங்கள்! நான் இதோ கொண்டு வருகிறேன்! என்று கூறிச் சென்றார்கள்.

எனவே, அன்னார் (அலை) ஒரு அரை தோலா (5.83 கிராம்) அளவுக்கு கஸ்தூரி கொண்டு வந்து அவரிடம் ஒப்படைத்து விட்டார்கள். (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 2, பக்கம் 295 -296)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

இந்த நாட்டில் பிளேக் நோய் பரவிய போது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் வஹீ மற்றும் அவன் வழங்கிய ஞானத்தைக் கொண்டு ஒரு மருந்தை உருவாக்கத் துவங்கினார்கள். ஹுஸுர் (அலை) அவர்கள் அதற்கு திர்யாக்கே இலாஹீ (இறைவனின் நச்சு நீக்கி) என்று பெயரிட்டார்கள். அந்த மருந்துக்கென நிர்ணயிக்கப்பட்ட எந்த மருந்துக் குறிப்பும் இருக்கவில்லை. மாறாக, அல்லாஹ்வின் மறைவான வஹீ வழிகாட்ட, வழிகாட்ட அன்னார் (அலை) அதற்குத் தேவையான பொருட்களை ஏற்பாடு செய்வார்கள். மேலும், இந்தக் கோட்பாட்டின் படியே, அதாவது, பொதுவாக வழக்கத்தில் இருக்கின்ற மருத்துவக் கோட்பாட்டைப் பற்றி கவலை கொள்ள மாட்டார்கள். தேவையான பொருட்களின் எடை, அளவு ஆகியவற்றை இறைவன் வழங்கிய அந்த அறிவின் கோட்பாட்டின் அடிப்படையிலேயே ஆக்கி விட்டார்கள். எவ்வாறு இறைவனிடமிருந்து அறிவு வழங்கப்பெற்றதோ அவ்வளவு அன்னார் போட்டுக் கொண்டே செல்வார்கள்.

இந்த மருந்தில் பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள இரத்தினங்கள் சேர்க்கப்பட்டன. இன்னும் பல விலையுயர்ந்த மருந்துகள் சேர்க்கப்பட்டன. இந்த மருந்து தயார் ஆனதும், ஹுஸுர் (அலை) அவர்கள் மிகவும் பரந்த மனப்பாண்மையுடன் இதை விநியோகித்தார்கள். மேலும், ஒரு ஹுப்பா, அதாவது, ஒரு தானியத்தைக் கூட எவரிடமிருந்தும் வாங்கிக் கொள்ளவில்லை. எதுவும் வாங்கிக் கொள்ளவில்லை. இன்னும் சொல்வதாயின், வெளியூரிலிருந்து கேட்டவர்களுக்கு Registered parcel-இல் தம் சொந்த செலவில் அனுப்பி வைத்து வந்தார்கள்.

டாக்டர் ஸாதிக் சாஹிப் அவர்கள் ஒருமுறை கூறினார்கள்: ஒருவர் இரண்டு மூன்று மாஷா (தோராயமாக 2, 3 கிராம்) அளவு நச்சு முறிப்பி கேட்டார். அன்னார் அவருக்குப் பெரும் அளவில் சிறிய குப்பிகளில் அடைத்து Registry செய்து அனுப்பி வைத்து விட்டார்கள். இர்ஃபானீ சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:

இந்த எளியவனும் கேட்டுக் கொண்டபோது, மிகப் பெரும் அளவை எனக்கு வழங்கினார்கள். விஷமுறிவு தொடர்பாக மட்டும் ஹுஸுர் (அலை) அவர்களின் வழிமுறை இதுவாக இருக்கவில்லை. மாறாக, மருந்துகள் தொடர்பாகவோ ஹுஸுர் (அலை) அவர்களின் முன்மாதிரி என்னவாக இருந்தது என்றால், சிலவேளை முழு பாட்டிலையுமே வழங்கி விடுவார்கள். சிலவேளை அன்னார் (அலை) மிகவும் விலையுயர்ந்த மற்றும் உயர்தர கஸ்தூரியைத் தம்முடைய கசப்பான (அதாவது, கடுமையான) எதிரிகளுக்கு வழங்கி விட்டார்கள். அதைப் பற்றிய ஒரு நிகழ்வு முன்னரும் குறிப்பிடப்பட்டு விட்டது. (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 2, பக்கம் 309- 310)

ஹஸ்ரத் ஷேக் முஹம்மத் நஸீம் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை எங்களுக்குக் கஸ்தூரி தேவைப்பட்டது. காதியானில் அந்த நாள்களில் அது கிடைப்பது அரிதாக இருந்தது. ஹஸ்ரத் சாஹிப் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன். அன்னார் (அலை) தேவைக்கும் மிக அதிகமாக வழங்கினார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 5, பக்கம் 446)

கபூர்தலாவைச் சேர்ந்த முன்ஷீ ஸஃபர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: தோழர் ஒருவர் மிகவும் கடினமாக உழைத்து, முயற்சி செய்து, பெருந்தொகை செலவு செய்து ஒருவரிடம் உலோக பஸ்பம் தயாரிப்பதற்கான மருத்துவக் குறிப்பைப் பெற்றார். உலோக பஸ்பம் தயாரித்து ஹுஸுர் (அலை) அவர்களிடம் சமர்ப்பித்தார். தயாரிக்கும் குறிப்பையும் வழங்கி விட்டார். இன்னொரு தோழர் என்னிடம் அந்தக் குறிப்பைப் பெறுமாறு கூறினார். ஆனால், அந்தத் தோழர் யாருக்கும் சொல்லாமல் இருந்தார். நான் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களின் மேலான அவைக்குச் சென்றேன். இன்ன நண்பர் ஹுஸுர் (அலை) அவர்களுக்கு ஏதாவது உலோக பஸ்பம் கொடுத்தாரா? என பணிவுடன் கேட்டேன். அன்னார் (அலை), அதோ அந்தக் கண்ணாடிக் குடுவை இருக்கிறது பாருங்கள்! அதை எடுத்துக் கொள்ளுங்கள்! என்று கூறினார்கள்.அதன் குறிப்பு? என்று நான் கேட்டேன். அதுவும் அங்கேயே பக்கத்திலேயே இருக்கிறது! என்று கூறினார்கள். இதன்படி, குறிப்புடன் சேர்த்து அந்த உலோக பஸ்பத்தை நான் கொண்டு வந்தேன். அந்த நண்பரிடம், பாருங்கள்! நீங்கள் சொல்லவில்லை. நான் கொண்டு வந்திருக்கிறேன்; இதோ இருக்கிறது என்று கூறினேன். அவர் ஹுஸுர் (அலை) அவர்களின் சமூகத்துக்குச் சென்று, ஹுஸுர், அதை வழங்கி விட்டீர்களா? என்று பணிவுடன் கேட்டார். அன்னார், அவர் எம்மிடமிருந்து எடுத்துச் சென்று விட்டார். கேட்க வந்திருந்தார்; நாம் வழங்கி விட்டோம் என்றார்கள். பிறகு, ஹுஸுர் (அலை) அவர்கள் என்னிடம் இதையும் கூறினார்கள்: மிர்ஸா சாஹிப் அவர்களின், அதாவது - ஹுஸுர் (அலை) அவர்களின் தந்தையார் மர்ஹூம் அவர்களின் - குறிப்பேடு எம்மிடம் உள்ளது. உங்களுக்கு மருத்துவக் குறிப்புதானே வேண்டும்? சரி, எம் தந்தையார் அவர்களின் குறிப்பேட்டை உங்களுக்கு வழங்குகிறேன். அதில் மிகவும் உன்னதமான மருத்துவக் குறிப்புகள் உள்ளன. அதையும் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். பிறகு, எனக்கு அந்தக் குறிப்பேட்டைப் பெறுவது குறித்து நினைவிருக்கவில்லை.

எனினும், ஹுஸுர் (அலை) அவர்கள் எனக்கு அருள விரும்பியிருந்தார்கள். (அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 214 - 215)

ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மத் ஸாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் தமது கடிதத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இவ்வாறு எழுதுகிறார்கள்: மனைவி கருவுற்றிருப்பதன் காரணமாக சில காலமாக என் வீட்டில் எத்தகைய சிரமம் இருக்கிறது என்றால், வீட்டில் உணவு தயாரிக்க முடியவில்லை. ரொட்டியோ தந்தூரி அடுப்பில் சமைத்து எடுத்துக் கொள்கிறோம். ஆனால், குழம்பு விஷயத்தில் சிரமம் இருக்கிறது. இதனால் சில காலம் லங்கரிலிருந்து குழம்பு உணவு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு விடையாக ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் லங்கரின் பொறுப்பாளரான மியான் நஜ்முத்தீன் சாஹிப் அவர்களுக்கு எழுதினார்கள். அதில், முஃப்தீ சாஹிப் (ரலி) அவர்களுக்கு இரண்டு வேளை லங்கரிலிருந்து மிகச் சிறந்த குழம்பு வழங்கி வாருங்கள்! இது வலியுறுத்தல் ஆகும்! என்று அன்னார் (அலை) வழிகாட்டல் வழங்கியிருந்தார்கள். (ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மது ஸாதிக் (ரலி) அவர்களின் நூல், திக்ரே ஹபீப், பக்கம் 281)

ஹஸ்ரத் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் நிலைமைகளைக் குறித்து விசாரித்து வருவதற்காக ஒரு பயணக்குழுவை நஸீபைனுக்கு அனுப்பி வைக்க நினைத்தார்கள். அதில் மிர்ஸா குதா பக்ஷ் சாஹிப் மற்றும் மவ்லவி குதுப்புத்தீன் சாஹிப் ஆகியோர் இருந்தார்கள்.

இவர்கள் கூறுகிறார்கள்: மூன்றாவது உறுப்பினராக என் தந்தையார் மியான் ஜமாலுத்தீன் சாஹிப் அவர்கள் இருந்தார்கள். சீட்டு குலுக்கிப் போட்டு இவர்கள் அனைவரும் தேர்வானார்கள். ஹுஸுர் (அலை) அவர்கள் உடைகள் போன்றவற்றைத் தயாரித்துக் கொள்வதற்காக, மூவருக்கும் தலா 50 ரூபாய் வழங்கி விட்டார்கள். பிறகு, ஹுஸுர் (அலை) அவர்கள் ஒரு வழியனுப்பும் கூட்டம் நடத்தினார்கள்.

எவ்வாறாயினும், அதில் சில காரணங்களால் பின்னர் இந்தப் பயணக் குழு நிறுத்தப்பட்டது. பயணக்குழு செல்வது நிறுத்தப்பட்டதும், என் தந்தையார் 50 ரூபாயை ஹுஸுர் (அலை) அவர்களின் மேலான சமூகத்தில் திருப்பிக் கொடுத்தார்கள். ஹுஸுர் (அலை) அவர்கள், நாம் எதை யாருக்காவது வழங்கி விடுகிறோமோ அதைத் திருப்பி வாங்கிக் கொள்வதில்லை என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: தந்தையார் வீட்டுக்குத் திரும்பி வந்ததும், இந்த நிகழ்வை அவர்கள் எனக்கும் கூறினார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 2, பக்கம் 140)

*நபிமொழியிலிருந்து...*

**சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)**

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

ஹஸ்ரத் மலிக் குலாம் ஹுஸைன் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 1894 அல்லது 1895 இன் ஆண்டு மாநாட்டில் நடந்த விஷயம் ஆகும். சியால்கோட்டைச் சேர்ந்த ஹுஸ்ஸாமுத்தீன் சாஹிப் அவர்கள் உணவு சமைப்பதிலும், உண்பதிலும் பெரும் ஆர்வம் கொண்டவராக இருந்தார்கள். அப்பொழுது ஜல்ஸாவுக்கு வந்திருந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களின் மேலான சமூகத்தில் ஷப் தேக் (எனப்படும் இரவு நேரத்தில் வேக வைக்கப்படும்) உணவைப் பற்றி பெரிதும் புகழ்ந்தார்கள். அவர்கள் பணிவுடன் கூறினார்கள்:

ஹுஸூர்! ஷப் தேக் எனும் உணவு மிகவும் சுவையாகத் தயாரிக்கப்படுகின்றது;ஷப் தேக் உணவில் பல்வேறு பொருட்கள் இருக்கும்; இறைச்சியும் இருக்கும்; பல்வேறு வகையான பழங்களும், காய்கறிகள் போன்றவையும் அதில் சேர்க்கப்படும்; இரவு முழுக்க சமைக்கப்படும்.

ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் என்னை அழைத்து, ஷாஹ் சாஹிப் என்ன விரும்புகிறார்களோ, எவ்வளவு பொருட்கள் வேண்டும் என்கிறார்களோ அவ்வளவு அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுங்கள் என்று கூறினார்கள்.

ஆக, இறைச்சி இங்கே கிடைத்து விடும். இங்கிருந்து வாங்கப்பட்டது. நூல்கோல் பட்டாலாவிலிருந்து வரவழைக்கப்பட்டது. மாலை வேளைக்கு அருகில் 4 தேக்சாக்கள் வைக்கப்பட்டன. அரிசியும் அங்கிருந்து. கடையிலிருந்து-நல்ல பிரபலமான கடை இருந்தது. அங்கிருந்து இரண்டரை மன் அளவு (அதாவது, 80 முதல் 100 கிலோ வரை) அரிசி வாங்கிக் கொண்டார்கள். காலையில் விருந்தினர்களுக்கு சய்யித் ஹுஸ்ஸாமுத்தின் சாஹிப் அவர்களின் விருப்பப்படி உணவு வழங்கப்பட்டது. (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 30)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எனக்கு இவ்வாறு எழுதிக் கொடுத்தார்கள்: ஒருமுறை ஜல்ஸா சாலானாவின் போது, செலவுக்குப் பணம் இருக்கவில்லை. அந்த நாள்களில் ஜல்ஸா ஸாலானாவுக்காக சந்தா வசூலாகிப் போகாது.

அதாவது, முறையாக சந்தாவுக்கான ஏற்பாடு கிடையாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம் புறமிருந்தே செலவுக்கான தொகையை செலவழித்து வந்தார்கள்.

லங்கரின் இன்சார்ஜ் ஆக இருந்த மீர் நாஸிர் நவாப் சாஹிப் மர்ஹூம் அவர்கள் வந்து, இரவு விருந்தினர்களுக்காக எந்தப் பொருளும் இல்லை. அதாவது, செலவுக்கான தொகை தீர்ந்து விட்டது. பணம் தீர்ந்து விட்டது. உணவு தானியம் தீர்ந்து விட்டது. இப்பொழுது விருந்தினர்களுக்கு உண்பதற்கான எந்தப் பொருளும் இல்லை என்று பணிவுடன் கூறினார்கள். அப்போது, (பொருள் வாங்க) போதுமான அளவு ஏதாவது நகையை மனைவி அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்.

அதாவது, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களிடம் நகையை வாங்கிக் கொள்ளுங்கள். அது போதுமானதாக இருக்க வேண்டும்; அதை விற்று பொருள் வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள்.

இதன்படி, நகை விற்கப்பட்டது. அல்லது அடமானம் வைத்து, மீர் சாஹிப் அவர்கள் பணம் வாங்கி வந்தார்கள். விருந்தினர்களுக்காகப் பொருள்களைக் கொண்டு வந்து சேர்த்து விட்டார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: 2 நாள்களுக்குப் பிறகு, மீண்டும் மீர் சாஹிப் அவர்கள் இரவு நேரத்தில் நான் இருக்கும் போது, நாளைக்கு மீண்டும் எதுவுமில்லை. அந்த நகையை விற்றதனால் இரண்டு நாள்களோ கழிந்து விட்டன. இனி எஞ்சிய நாள்களுக்கு என்ன செய்யட்டும்? என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நாம் வெளிப்படை காரணிகளைக் கொண்டு ஏற்பாடு செய்து விட்டிருந்தோம். எம்மிடம் என்ன இருந்ததோ அதை நாம் கொடுத்து விட்டோம். இப்பொழுது நமக்குத் தேவையில்லை. யாருடைய விருந்தினர்களோ - அதாவது, இவர்கள் அல்லாஹ்வுக்காக வரக்கூடிய மக்கள் ஆவார்கள். அல்லாஹ்வின் விருந்தினர்கள் ஆவார்கள் - அவனே இப்பொழுது ஏற்பாடு செய்திடுவான் என்று கூறினார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: அடுத்த நாள் காலை 8 அல்லது 9 மணிக்குக் கடிதம் கொடுப்பவர் வந்தபோது, மீர் ஸாஹிப் அவர்களையும் என்னையும் ஹுஸூர் (அலை) அவர்கள் அழைத்தார்கள். கடிதம் கொண்டு வந்திருந்தவரின் கையில் ஏறக்குறைய 10, 15 Money Order கள் இருந்திருக்கும். அவை பல்வேறு இடங்களில் இருந்து வந்திருந்தன. அவை 50, 50, 100, 100 ரூபாய்களைக் கொண்டிருந்தன. அதில், எங்களால் வர முடியவில்லை. விருந்தினர்களின் செலவுக்காகப் பணம் அனுப்பி வைக்கிறோம் என்று எழுதியிருந்தது. அதை அன்னார் (அலை) வாங்கிக் கொண்டு தவக்குல் (இறை நம்பிக்கை) என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: அப்பொழுது இன்னும் சில மனிதர்கள் அங்கே இருந்தார்கள்; அங்குள்ளவர்கள்.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஓர் உலகவாதிக்குத் தனது இரும்புப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கும் ரூபாய்களின் மீது எவ்வாறு நம்பிக்கை இருக்கிறதோ, விரும்பும் போது எடுத்துக் கொள்வேன் என்று நினைக்கிறாரோ அதை விட அதிகமாக அல்லாஹ்வின் மீது தவக்குல் கொள்பவர்களுக்கு, அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கை கொள்பவர்களுக்கு இவ்வாறே நடக்கிறது. அதாவது, தேவை இருக்கும் போது, உடனடியாக இறைவன் அனுப்பி விடுகிறான். ஆக, அல்லாஹ்வின் விருந்தினர்கள். அவனுக்காக வந்துள்ளார்கள் என்று அன்னாரும் கூறியபோது, பிறகு, நிச்சயமாக அன்னார் (அலை) துஆவும் செய்திருப்பார்கள். இறை நம்பிக்கையும் முழுமையாக இருந்தது. பிறகு, அல்லாஹ் ஏற்பாடு செய்து விட்டான். (ஸீரத்துல் மஹ்தி தொகுதி 2, பாகம் 4, பக்கம் 07 -98, அறிவிப்பு எண்: 1124)

ஹஸ்ரத் மியான் ரஹ்மத்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:-

பஞ்சமும், கொள்ளை நோயும் ஒன்றாக வருகின்றன. பிறகும் மக்கள் தவ்பா செய்வதில்லை. பட்டினியால் இறந்து விடுகிறார்கள் என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறி வந்தார்கள். அதற்கு 3 ஆண்டுகளுக்குப் பிறகு, கொடூரமான பிளேக் நோய் நாட்டில் பரவி விட்டது. பஞ்ச நாள்களில் ஹுஸூர் (அலை) அவர்கள், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தில் பஞ்சம் ஏற்படும் என்று ஹதீஸ்களில் இது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. கண்ணியத்திற்குரிய நபி பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்று மற்றும் அல்லாஹ்வின் வாக்குறுதி நிறைவேறியது என்று கூறி வந்தார்கள். மறுபுறம், மவ்லவி சாஹிப் ஆகிய முதல் கலீஃபா அவர்களுக்கு இயன்ற அளவுக்குத் தானியங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் எனக் கட்டளையிட்டார்கள். லங்கருக்கான ஏற்பாடு அப்பொழுது ஹுஸூர் (அலை) அவர்களின் கையில் இருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஏற்பாட்டைத் தம் கையில் வைத்திருந்தார்கள். உணவுத் தானியங்கள் போன்றவற்றின் பஞ்சத்திற்கான அபாயம் இருந்தது.

எனவே, அன்னார் (அலை), உணவுத் தானியங்கள் போன்றவற்றிற்கான ஏற்பாட்டை முதலில் செய்திடுங்கள்! என்று கூறினார்கள். உடனடியாக வாங்குங்கள்! என்று இந்தப் பொறுப்பை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் மவ்லவி சாஹிப் அவர்களிடம் கூறிவிட்டார்கள். ஹுஸூர் (அலை) அவர்களின் கட்டளையின் பேரில் மவ்லவி சாஹிப் அவர்கள் லங்கர் கானாவுக்கான 3 மூட்டையை என்னிடமிருந்து வாங்கினார்கள். சந்தா பற்றாக்குறை இருந்தது. வீட்டில் எவ்வளவு நகைகள் இருந்தனவோ அவை அனைத்தையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விற்று விட்டார்கள். கோதுமை வாங்குதவற்காக 700 ரூபாய் மவ்லவி சாஹிப் அவர்களிடம் வழங்கினார்கள். அந்தக் காலத்தில் 700 ரூபாய் பெரிய தொகையாகும்.

ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் (ரலி) அவர்கள் மியான் நஜ்முத்தீன் சாஹிப் மர்ஹூம் அவர்களை கோதுமை வாங்குவதற்காகக் கிராமத்துக்கு அனுப்பி வைத்து விட்டார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: அவர்களுடன் மிர்ஸா இஸ்மாயீல் சாஹிப் அவர்களும் சென்றார்கள். தானியம் வாங்கப்பட்டது. இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தின் ஒரு பகுதியான பேகானீர் என்ற இடத்திலிருந்து இடம் பெயர்ந்து மக்கள் எங்கள் ஊருக்கு வந்து விட்டார்கள். அங்கு பஞ்சம் அதிகம் ஏற்பட்டு விட்டது. அங்கிருந்து மக்கள் வந்து விட்டார்கள். ரொட்டி! ரொட்டி! எனும் குரல் எல்லாப் பக்கத்திலிருந்தும் வந்து கொண்டிருந்தது. லங்கரில் எப்பொழுதும் மாவை சமைத்துக் கொண்டே இருக்க வேண்டும்! எந்நேரமும் ரொட்டி தயாராக இருக்க வேண்டும்! என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கட்டளையிட்டார்கள். மியான் நஜ்முத்தீன் சாஹிப் அவர்களிடம், ரொட்டி கேட்பவருக்கு ரொட்டி வழங்கப்பட வேண்டும்; எவரும் வெறுங்கையோடு செல்லக் கூடாது என்று கூறினார்கள். சில நாள்களில் வாங்கிய கோதுமை தீர்ந்து போனது. பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அதன் சொற்கள் இவையாகும்:

இது தற்காலிக விஷயம் ஆகும். நிரந்தரமாக இதுபோன்ற தியாகம் செய்ய வேண்டி வருவதுமில்லை.இது போன்ற நற்கூலியும் கிடைப்பதில்லை. இவை நம்பிக்கை கொண்டவர்களுக்கான சிறப்பான நாள்கள் ஆகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு அல்லாஹ் தோழர்களுக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! இந்த உரையினால் சிறிது பணம் சேர்ந்து விட்டது. சிறிது வெளியே இருந்து வந்தது. தானியம் வாங்கப்பட்டது. இவ்வாறு பஞ்ச நாள்களில் இந்த முறை தொடர்ந்து நடைபெற்றது. வருபவர்களுக்கு உடனடியாக உணவு ஏற்பாடு செய்து தரப்படும். ஹுஸூர் (அலை) அவர்கள், நான் இன்ன பத்திரிகையில் பார்த்தேன். ஒரு நாட்டில் இவ்வளவு பிள்ளைகள் பசியால் இறந்து போய் விட்டார்கள். இவ்வளவு ஆட்கள் இறந்து போய் விட்டார்கள். தானியம் கிடைப்பதில்லை. இது அல்லாஹ்வின் கடுமையான தண்டனையாகும். தானியம் கிடைக்காமல் இருப்பது இறைவனின் சினமாகும் என்று கூறி வந்தார்கள். மேலும், அல்லாஹ் கருணை புரிவானாக! என்று மீண்டும் மீண்டும் கூறி வந்தார்கள். மிகவும் பதற்றமடைந்த நிலையில் மியான் நஜ்முத்தின் சாஹிப் அவர்களிடம் கேட்பார்கள். மவ்லவி சாஹிப் அவர்களிடம் தானியம் பற்றி பேசுவார்கள். (அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 3, பக்கம் 73-74)

இன்றும் உலகின் சில நாடுகளில் இந்த நிலைமைகள் உள்ளன. மிகவும் சிரமம் உள்ளது. பஞ்சம் உள்ளது. தானியம் கிடைப்பதில்லை. அல்லது விலைவாசி அதிகமாக இருக்கிறது. வாங்க முடியாது. ஏழ்மையினால் பசியினால் மக்கள் இறக்கிறார்கள். அல்லாஹ்வின் அருளால் எங்கெல்லாம் தெரிய



வருகிறதோ, ஜமாஅத் அவர்களுக்கு உதவுவதற்காகத் தொகைகளையும் அனுப்பி விடுகிறது. தேவைகளையும் நிறைவேற்றுகிறது. அதில் மக்களும் தமது பங்களிப்பை செலுத்துகிறார்கள். இந்த ஏழைகளுக்கு உதவி செய்வதற்காக, பஞ்சத்தில் சிக்கிய மக்களுக்கு உதவி செய்வதற்காக, மேற்கொண்டு முயற்சி செய்து வருவதற்கு அல்லாஹ் அந்த மக்களுக்கும் மேற்கொண்டு நல்வாய்ப்பு வழங்குவானாக!

ஹஸ்ரத் காஸீ நூர் முஹம்மத் சாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: எனக்கு ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் அவர்களுடன் - இது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்து விஷயம் ஆகும். (காஸீ சாஹிப்) அவர்கள் கூறுகிறார்கள்: (இரண்டாவது கலீஃபா) அவர்கள் எனது வகுப்பைச் சேர்ந்தவர் ஆவார்கள். அவர்களுடன் சேர்ந்து தாருல் மஸீஹில் இரவில் படிப்பதற்கு வாய்ப்பு கிடைத்து வந்தது. ஹஸ்ரத் மவ்லவி ஷேர் அலீ சாஹிப் (ரலி) அவர்கள் படித்துக் கொடுப்பார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பெண்களுக்கு நல்லுபதேசம் செய்து கொண்டிருப்பார்கள். அப்பொழுதோ உரை நிகழ்த்தும் குரல் எங்கள் காதுகள் வரை நன்றாக எட்டியது. ஆனால், அதிலிருந்து எதுவும் ஞாபகம் இல்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம் ஆகும். லங்கரின் மாவுக்காக பொதுவாக முல்லா(ன்) அஹ்மத் நூர் சென்று வந்தார்கள். கழுதை மீது மாவு வரும்போது, எனக்கு மாவு மூட்டை சுமந்து கொண்டு, தாருல் மஸீஹில் கொண்டு சேர்ப்பதற்கான சந்தர்ப்பத்தையும் அல்லாஹ் வழங்குவான். ஒருமுறை ஹுஸூர் (அலை) அவர்களைப் பார்த்தேன், அன்னார் குர்தாவில் போட்டு தம் மடியில் நிறைய ரூபாய் கொண்டு வந்தார்கள். அதை எண்ணாமலேயே முல்லா(ன்) அஹ்மத் நூர் அவர்களின் மடியில் போட்டு விட்டார்கள். ஏனெனில், (விருந்தினர் இல்லமான) லங்கர் கானாவிற்கான ஏற்பாடு செய்ய வேண்டி இருந்தது. எனவே செல்லுங்கள்! பொருள்களை வாங்கி வாருங்கள்; இவ்வாறு லங்கர் அமைப்பு இயங்கிக் கொண்டே இருக்கட்டும்! என்றவாறு எண்ணிப் பார்க்காமலேயே பணத்தைக் கொடுத்து விட்டார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 75)

ஹஸ்ரத் மியான் சிராக் தீன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை நடந்த நிகழ்வு, எனது தொண்டை எப்படி அடைத்துக் கொண்டது என்றால், குரல் வருவது நின்று போனது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களிடம், சிராகின் தொண்டைக்கு சிகிச்சை அளித்திடுங்கள். எதனால் அவருக்குக் குரல் வரவில்லை எனப் பாருங்கள்! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் (ரலி) அவர்கள் சிகிச்சை அளித்து வந்தார்கள். ஆனால், எந்தப் பலனும் ஏற்படவில்லை. பிறகு, ஒரு சந்தர்ப்பத்தில் டாக்டர் முஹம்மத் ஹுஸைன் ஷாஹ் சாஹிப், டாக்டர் யஃகூப் பேக் சாஹிப் மற்றும் லாஹூரைச் சேர்ந்த டாக்டர் புடே கான் சாஹிப் ஆகியோர் ஒன்று சேர்ந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு முன்னாலும், ஹுஸூர் (அலை) அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். என்ன காரணத்தினால், சிறுவனின் குரல் அடைப்பட்டுள்ளது? என்று கேட்டார்கள். இதனால் டாக்டர் சாஹிப், யஃகூப் பேக் சாஹிப் (ரலி) அவர்கள் எனது தொண்டையைப் பார்த்து விட்டு, ஹுஸூர், தாங்கள் ஆணையிட்டால், இவரது தொண்டையை உட்புறமாக வெட்டி விடலாம். அதாவது, tonsils காரணமாக இருக்கும் எனத் தெரிகிறது. இவ்வாறு செய்வதனால் குரல் திறந்து விடும் என்று கூறினார்கள். இதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் எதுவும் சொல்லவில்லை. மௌனமாகி விட்டார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு, சில நாள்களுக்குப் பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள், சிராக், இப்பொழுது நாம் உனக்கு சிகிச்சை அளிப்போம்! என்றார்கள். அந்த நேரமே பார்த்து விட்டு, நாம் உனக்காக மருத்துவக் குறிப்பு தயாரிப்போம் என்று கூறினார்கள். இறைவனின் நுட்பமான செயலால், அன்றைய நாளே அமிர்தசரஸின் ஒரு நறுமணப் பொருள் விற்பனையாளர் எருக்கு இலையின் ஊறுகாய் நிறைந்த சாடியைக் கொண்டு வந்தார். ஹுஸூர் (அலை) அவர்கள் அதைத் திறந்து பார்த்து விட்டு, இது உனக்கான சிகிச்சையாகும் என்று கூறினார்கள். அன்னார் (அலை) முதலில், மருந்துக் குறிப்பைத் தயாரிப்பேன் என்று கூறினார்கள் அல்லவா? பிறகு, அவ்வாறே குறிப்பைத் தயாரிப்பவர் ஒருவர் அல்லது ஊறுகாய் போன்றவற்றைத் தயாரிப்பவர், நுட்பமான பணிகளையும் செய்து வந்தவர், அவர் எருக்கு இலையின் அந்த ஊறுகாயை எடுத்துக் கொண்டு வந்தார். அப்பொழுது, இது உனக்கான சிகிச்சையாகும் என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

ஆக, உணவு உண்ணும்போது, ஃபுல்கா ரொட்டியில் 2, 3 இலைகளை வைத்து எனக்கு வழங்கி விடுவார்கள். அது மிகவும் சுவையானதாக இருந்தது. ஹுஸூர் (அலை) அவர்களும் அதிலிருந்து உண்டார்கள். இவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு அதனால் நிம்மதி கிடைத்து விட்டது. இதனால் ஹுஸூர் (அலை) அவர்கள், நீ சாப்பிடு! என்று அந்த முழு சாடியையும் எனக்கு வழங்கி விட்டார்கள். இதன்படி, நான் சாப்பிட்டதும் எனக்கு முழுமையாக உடல் நலமாகி விட்டது. (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 2, பக்கம் 72)

ஹஸ்ரத் மிர்ஸா அஃப்ஸல் பேக் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் முதன்முறை 1898 இல் காதியானுக்கு வந்தேன். நீதிமன்ற அதிகாரியாகிய என் தந்தையார் மிர்ஸா ஃபஸல் பேக் ஸாஹிப் என்னை கல்வி பயில்வதற்காக, தஃலீமுல் இஸ்லாம் உயர்நிலைப் பள்ளியில் சேர்த்து விட்டார்கள். விடுதியில் சில மாணவர்கள் இருந்தார்கள். அப்பொழுது விடுதியில் இருக்கும் மாணவர்களின் உணவுக்கான ஏற்பாடு லங்கரின் உணவோடு சேர்ந்து இருந்தது. உணவு தொடர்பாக ஏதோ முறையீடு வந்ததும், என் தந்தையார் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம், பிள்ளைகளுக்கு உணவுக்கான சிரமம் இருக்கிறது என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹுஸூர் (அலை) அவர்கள் பரிவுகூர்ந்து, பிள்ளைகளுக்கு வீட்டிலிருந்து உணவு கிடைக்கும் என்று கூறினார்கள். இதன்படி, பல மாதங்கள் வரை உணவு ஹுஸூர் (அலை) அவர்களின் வீட்டிலிருந்து எங்களுக்கு வந்து கொண்டிருந்தது. சிலநேரம், ஹுஸூர் (அலை) அவர்கள் வீட்டிலிருந்து மாம்பழம் மற்றும் இனிப்புகள் போன்றவற்றையும் கூட உண்பதற்காகக் அனுப்பிக் கொண்டிருந்தார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 167)

ஹாஃபிஸ் ஹாமித் அலீ சாஹிப் (ரலி) அவர்கள் தம்மிடம் எடுத்துக் கூறியதாக, காஷ்மீரைச் சேர்ந்த காஜா அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களிடம் இதைக் கூறினார்கள்:

ஹுஸூர் (அலை) அவர்களிடம் எங்கிருந்தாவது பணம் வரும்போது, ஹுஸூர் (அலை) அவர்கள் என்னை அழைத்து, எண்ணாமல் பணம் வழங்கி விடுவார்கள். மேலும், இப்பொழுது பணம் வாங்கிக் கொள்ளுங்கள். பிறகு, எப்பொழுது கையில் பணம் வரும்? என்று தெரியாது என்று கூறுவார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்: எளியவன் பணிவுடன் தெரிவிக்கிறேன்; ஹாஃபிஸ் ஹாமித் அலீ சாஹிப் மர்ஹூம் அவர்கள் ஹஸ்ரத் சாஹிப் அவர்களின் சிறப்பான தொண்டராக இருந்தார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் வீட்டின் தேவைகள் மற்றும் விருந்தினர்கள் போன்றோரின் விருந்தோம்பலுக்காகப் பணம் கொடுத்து வந்தார்கள். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பாகம் 3, பக்கம் 529 - 530, ரிவாயத் 530)

ஹஸ்ரத் கான் சாஹிப், ஸய்யித் குலாம் ஹுஸைன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஒருமுறை ஹுஸூர் (அலை) அவர்கள் பார்சல் சீட்டு வந்துள்ளது; தொடரியில் வரும் ஒரு பார்சலை பட்டாலாவிலிருந்து வாங்கிக் கொண்டு வரும்படி என்னைக் காதியானிலிருந்து அனுப்பி வைத்தார்கள். 5 ரூபாயும் எனக்கு வழங்கினார்கள். தொடருந்து மூலமாக பார்சல் வருகிறது. அதை பட்டாலாவிலிருந்து கொண்டு வாருங்கள் என்று அனுப்பினார்கள். அந்த பார்சல் ஒரு திராட்சைக் கூடையாகும். அதில் வெறும் நாலணா மட்டுமே செலவானது. நான் அந்தக் கூடையைக் கொண்டு வந்து சமர்ப்பித்த போது, ஹுஸூர் (அலை) அவர்கள் கூடையின் சணல் துணியை வெட்டி, இரண்டு கைகளிலும் திராட்சை பழத்தை எடுத்து என்னிடம், இது உங்களுடைய பங்காகும் என்று வழங்கி விட்டார்கள். நான் மீதி தொகை 4 ரூபாய் 75 பைசாவைத் திருப்பிக் கொடுக்கப் பார்த்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள், நாம் எம் தோழர்களுடன் கணக்கு வழக்கு வைப்பதில்லை என்று கூறியவாறு கூடையை உள்ளே தூக்கிச் சென்றார்கள். இவர்கள் கூறுகிறார்கள்: அப்பொழுது எனக்கு 15 வயதாகும். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 5, பக்கம் 120)

ஹஸ்ரத் முன்ஷீ காஸீ மஹ்பூப் ஆலம் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மவ்லவி முஹம்மத் அலீ சாஹிப் மற்றும் காஜா கமாலுத்தீன் சாஹிப் ஆகியோர் பெஷாவரில் ஒன்று சேர்ந்து வகீல் பணி செய்து வந்தார்கள். இருவரும் சேர்ந்து வேலை பார்த்தார்கள். அதாவது, அவர்கள் ஒருவர் மற்றவரோடு சேர்ந்து செய்யும் வேலையாக இருந்தது. மவ்லவி முஹம்மத் அலீ சாஹிப் அவர்கள் காதியானுக்கு வந்து விட்டார்கள். காஜா சாஹிப் அங்கேயே இருந்தார். அப்பொழுது ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்குகளில் அநேகமாக, இது கரம் தீன் உடைய வழக்குகள் பற்றிய குறிப்பாகும். வழக்கு விசாரணைக்காக காஜா சாஹிப் பேஷாவரிலிருந்து வந்தார்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மஸ்ஜித் முபாரக்குக் வருகை தந்தார்கள். காஜா சாஹிப் மிகவும் அழகுகூடிய தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு, ஹுஸூர்! இங்கு எப்படி வந்து சேர்ந்தேன்? என்பதை இறைவனும், தூதருமே அறிவார்கள். மனைவியின் நகையை அடமானம் வைத்து விட்டு பயணச் செலவுக்காகத் தொகையைப் பெற்று இங்கு வரை வந்து சேர்ந்துள்ளேன். மிகவும் மோசமான நிதி நிலைமை இருக்கிறது என்றார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள், காஜா சாஹிப், உங்களுக்குப் பணம் தேவைப்படுகிறதா? வாருங்கள்! என்றார்கள். பிறகு, ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் உள்ளே சென்றார்கள். காஜா அவர்களும் உடன் சென்றார்கள். அன்னார் ஒரு இரும்புப் பெட்டியைத் திறந்தார்கள். 2,3 பிடி அளவை அள்ளி, அவை அதில் வந்திருக்கும். காஜா சாஹிப் அவர்களின் மடியில் போட்டு விட்டார்கள். மேலும், காஜா சாஹிப்! போதுமா இன்னும் வேண்டுமா? எனக் கேட்டார்கள். போதும் ஹுஸூர்! இப்பொழுதோ மிகவும் அதிகம் ஆகி விட்டது என்று காஜா சாஹிப் கூறினார். காஜா சாஹிப் அந்தப் பணத்தைப் பின்னர் மஸ்ஜித் முபாரக்கில் எண்ணினார். அது ஏறக்குறைய 300 ரூபாயாக இருந்தது. காஜா சாஹிப் அடுத்த நாள் குர்தாஸ்பூருக்குச் சென்று விட்டார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் அந்தப் பணத்தை எண்ணாமலேயே அவர்களுடைய மடியில் போட்டார்கள். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களுக்கு இந்தவொரு பொதுவான வழக்கம் இருந்தது. அதாவது, பணியாளர்களுக்குக் கூட பணத்தை எண்ணிக் கொடுக்க மாட்டார்கள். முழு நம்பிக்கையும், நம்பகத்தன்மையும் கொண்டிருந்தார்கள். எனக்கு (உடன்) இருப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்த வரை ஹஸ்ரத்

சாஹிப் (அலை) அவர்கள் ஒருபோதும் எந்தப் பணியாளரிடமும் கணக்கு கேட்டதில்லை. மாறாக, எவரேனும் (உதவி) கேட்டால், ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் அவருக்கு வழங்கி விடுவார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 277)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் காஜா சாஹிப் அவர்களிடம் காட்டப்பட்ட பரிவைப் பற்றி குறிப்பிட்டவாறு எழுதுகிறார்கள்: இன்று இயக்கத்தை விட்டுத் தன்னைத் துண்டித்துக் கொண்ட காஜா கமாலுத்தீன் சாஹிப் - அதாவது, ஜமாஅத்திலிருந்து பிரிந்து சென்று விட்டார் - பேருதவி புரிந்த தந்தையின் சந்ததியுடன் எதிர்ப்பையும், பகைமையையும் கொண்டிருக்கிறார். அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவர்களுக்குப் பேருதவி புரிந்தார்கள். அன்னாருடைய சந்ததி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் இவர்கள் பகைமை பாராட்டுகிறார். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அன்பளிப்புகள், கொடை மற்றும் வள்ளண்மை ஆகியவற்றின் மிகப் பெரும் அனுபவசாலி ஆவார். இவருக்கோ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அன்பளிப்புகள் பற்றி அதிக அனுபவம் உள்ளது. பெரும் தொகைகளை இவர் வாங்கினார். வாங்கியும் கூட ஒருபோதும் ஒப்புதல் அளித்ததில்லை. ஒருபோதும் வாங்கியபிறகும்கூட ஒருபோதும் கூறியதுமில்லை; பேருதவிக்கு நன்றி செலுத்தியதும் இல்லை. தனது தொண்டுகளைப் பற்றி பெருமையடித்துக் கொண்டே இருந்தார். நான் இயக்கத்துக்கு மிகப் பெரும் தொண்டு செய்கிறேன் என்றே சொல்லிக் கொண்டிருந்தார்.

அவர்கள் எழுதுகிறார்கள்: அவரை நன்றி கொன்றவராகவும், நன்றி மறந்தவராகவும் கருதுகிறேன். குர்தாஸ்பூரில் மவ்லவி கரம்தீன் வழக்குகள் நடந்து கொண்டிருந்த நாள்களில், ஒருமுறை வழக்கின் போது, அவர் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களுக்கு ஒரு கடிதத்தைக் காட்டினார். அது அவருக்கு அவருடைய வீடான பெஷாவரிலிருந்து வந்திருந்தது. அதில் செலவு நெருக்கடி பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் உடனடியாக 500 ரூபாய் ரொக்கப் பணத்தை அவரிடம் வழங்கி விட்டார்கள். பிறகு, மாதாமாதம் 100 ரூபாய் வழங்கி வாருங்கள்! என்று கூறினார்கள்.

பிறகு, அவர் மாதாமாதம் 100 ரூபாய் வழங்கி வந்தார். குறிப்பாக, ஜமாஅத் மக்கள் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களின் அறிவிப்பிற்கிணங்க மிகப் பெரும் தொகையை வழக்கு செலவுகளுக்காக அனுப்பியிருந்தார்கள். அது காஜா சாஹிபிடம் இருந்து வந்தது. ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் ஒருபோதும் கணக்குக் கேட்டதில்லை. இது போன்ற பொருளாதார அணுகுமுறை மற்றும் கொடையளித்தல் மட்டுமின்றி, ஹஸ்ரத் சாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்காக ஆஃப்கானிய பாணியில் இருந்த ஒரு விலையுயர்ந்த கோட்டைக் கொண்டு வந்திருந்தார்கள். ஹுஸுர்! இந்தக் கோட்டை எனக்கு வழங்கிடுங்கள்; நான் இதை அணிந்து கொண்டு நீதிமன்றத்தில் நுழைகிறேன்; இதன் பரக்கத்தால் எதிர்த்தரப்பின் வழக்குரைஞர் மற்றும் நீதிமன்றத்துக்கு என் மீதான மதிப்பச்சம் ஏற்படட்டும்! என்று கூறி காஜா சாஹிப் கேட்டு விட்டார். ஹுஸுர் (அலை) அவர்கள் சிரித்தவாறு வேலைப்பாடுகள் நிறைந்த இந்த விலையுயர்ந்த அங்கியை காஜா சாஹிபுக்கு வழங்கி விட்டார்கள். (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின் நூல், ஸீரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 3, பக்கம் 311 - 312)

தோலால் அதாவது Leather ஆல் செய்யப்பட்ட coat ஒன்று கொண்டு வந்திருந்தார்கள் என்று கடந்த குத்பாவிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. நல்ல உயர் வகையான தோலால் செய்யப்பட்ட Leather Coat ஆகும். இன்றும் Leather உடை மிகவும் விலையுயர்ந்ததாகக் கருதப்படுகிறது. அந்தக் காலத்திலும் அவ்வாறே இருந்தது. அந்த coat ஐயும் அன்னார் காஜா சாஹிப் கேட்டுக் கொண்டதனால் அவருக்கு வழங்கி விட்டார்கள்.

ஷேக் ஹாமித் அலீ சாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: வயதின் இறுதி வரை என்னிடம் ஒருபோதும் கணக்கும் கேட்டதில்லை; என்னிடம் கோபித்துக் கொண்டதும் இல்லை. மாறாக, ஒருமுறை நான் லாஹூருக்குச் சென்றேன். மவ்லவி நூருத்தீன் சாஹிப் அவர்கள் 700 ரூபாய்க்கான உறுதிச் சீட்டு அனுப்பி வைத்தார்கள். அதை வாங்கிக் கொண்டு வந்து விட்டேன். பணம் இருந்தது; Money Order அல்லது Voucher ஏதோ இருந்தது. சில பொருட்களை வாங்கி வந்தேன். பொருளும் வாங்கினார்கள். ஏறத்தாழ 50 ரூபாய் மீதம் கொண்டு வந்தேன். பொருள் வாங்கிய பிறகு அதிலிருந்து மீதமாகி விட்டன. அதற்கான கணக்கை நான் ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களிடம் கொடுத்தேன். அதற்கு அன்னார், நான் எப்பொழுது கணக்கு கேட்டேன்? என்று கூறினார்கள். (குத்ரத்துல்லாஹ் ஸனோரீ ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் அஹ்மது (அலை) அவர்கள்)

ஹஸ்ரத் ஷேக் அஹ்மதுத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அடியானுக்கு, கிழிந்த துணிகளை தைத்து சரி செய்து கொடுப்பவரான மியான் நபி பக்ஷ் சாஹிப் அவர்களிடம் நீங்கள் அமிர்தசரஸுக்கு செல்லுங்கள் என்று ஆணையிட்டார்கள். மேலும் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்து, இதை அவரிடம் கொடுத்து விடுங்கள். அவர் வாங்கிக் கொடுக்கும் பொருள்களை உடனடியாகக் கொண்டு வாருங்கள்; நாளைக்குள் திரும்பி வந்து விடுங்கள்! என்று கட்டளையிட்டார்கள்.

அடுத்த நாள் நான் சற்று தாமதமாக சென்றடைந்தேன்.ஹுஸுர் (அலை) அவர்களின் ஒரு பணியாளர் மியான் கரம் தாத் சாஹிப் இருந்தார்.

விரைவாக செல்லுங்கள்; அஹ்மத்தீனை அமிர்தசரஸுக்கு அனுப்பியிருந்தேன்; அவர் இதுவரை திரும்பி வரவில்லை; நலம்தானா? என்பதை அறிந்து வாருங்கள் என்று அவருக்கு கட்டளையிட்டார்கள். வழியில் நான் மியான் கரம்தாத் சாஹிப் அவர்களை சந்தித்து விட்டேன். அவர், ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் உன்னைப் பற்றி மிகவும் கவலைப்படுகிறார்கள் என்று கூறினார். நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேலான அவையை அடைந்த போது, எடுத்தவுடனேயே ஹுஸுர் (அலை) அவர்கள், உங்களுக்கு சிரமம் ஏதும் ஏற்படவில்லையே? என்று கேட்டார்கள். நான், ஹுஸுர், எந்த சிரமமும் ஏற்படவில்லை என்று பணிவுடன் கூறினேன். இவ்வாறு என்னை நலம் விசாரித்ததனால், அன்னார் என்னை நலம் விசாரித்திருக்கிறார்கள் என்று எனது உள்ளம் பூரிப்படைந்தது. நான் ஒரு கணக்குச் சீட்டையும் சிறிது பணத்தையும் திருப்பிக் கொடுக்கப் பார்த்தேன். ஹுஸுர் (அலை) அவர்கள், இது என்ன காகிதம்? என்று கேட்டார்கள். நான், அந்தப் பொருள்களுக்கான கணக்கு வழக்கும், இது மீதமுள்ள பணமுமாகும் என்று பணிவுடன் கூறினேன். அன்னார் மிகவும் அன்போடு, எமக்கும் உங்களுக்கும் இடையே கணக்கு என்ன! இந்தப் பணத்தை நீங்கள் உங்கள் தேவைக்கு செலவு செய்து கொள்ளுங்கள்! என்று கூறினார்கள். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 95 - 96)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: ஹக்கீமுல் உம்மத் (சமுதாயத்தின் மருத்துவர்) மவ்லானா நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் ஒருமுறை அன்னாரிடம் சிறிது கடன் வாங்கினார்கள். அவர்கள் அந்தப் பணத்தை ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களின் சமூகத்தில் திருப்பி செலுத்திய போது, ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் அதை விரும்பவில்லை. அதைத் திருப்பி அனுப்பி விட்டு, தாங்கள் எமது பணத்தை உமது பணத்தை விட்டு வேறானதாகக் கருதுகிறீர்களா! எனக் கூறினார்கள். (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின் நூல், ஸீரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பாகம் 3, பக்கம் 307)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களே எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் இறைவனால் நியமிக்கப்பட்டதற்கான அறிவிப்பை செய்ததிலிருந்து, இறைவன் அன்னாருக்கு அரசர்கள் உமது ஆடையிலிருந்து அருளைத் தேடுவார்கள் என்று நற்செய்தி வழங்கியுள்ளான் என்பதும் மக்களுக்குத் தெரியவந்ததிலிருந்து மக்கள் பொதுவாக அன்னாரிடம் ஆடைகள் வழங்குமாறு கேட்டுக் கொள்வார்கள். அன்னார் (அலை) ஒருபோதும் எவருக்கும் மறுக்க மாட்டார்கள். சிலவேளை நிலைமை எப்படி ஆகி விடும் என்றால், அன்னாரது உடலில் மட்டுமே ஆடை இருந்து விடும். மற்றவை அனைத்தும் வழங்கப்பட்டிருக்கும்.(ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின் நூல், ஸீரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பாகம் 3, பக்கம் 290)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: மீர் அப்பாஸ் அலீ சாஹிப் அவர்களுக்கு அவர்களிடம் வந்த பராஹீனே அஹ்மதிய்யாவின் விலையை செலவு செய்து கொள்வதற்கு அன்னார் (அலை) அனுமதி வழங்கி விட்டார்கள். இது பரந்த மனப்பாண்மை மற்றும் தயாள குணத்தின் ஓர் அற்புதமான சான்றாகும். (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின் நூல், ஸீரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பாகம் 3, பக்கம் 200)

ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மத் சாஹிப் அவர்கள் கூறினார்கள்: மிர்ஸா நிஸாமுத்தீன் சாஹிப் மற்றும் மிர்ஸா இமாமுத் தீன் சாஹிப் ஒரு கடும் எதிரிகளாக இருந்தும், இவர்கள் இருவரும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கடும் எதிரிகளாகவும் இருந்தார்கள்; உறவினர்களாகவும் இருந்தார்கள். ஆனால், எதிரிகளாக இருந்தார்கள்தான்; எனினும், தேவையின் போது அவர்கள் உதவி கேட்டபோதெல்லாம் ஹுஸுர் (அலை) அவர்கள் அதை நிறைவேற்றி விடுவார்கள். இதன்படி, அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை மிர்ஸா நிஸாமுத்தின் சாஹிப் அவர்கள் என் கண் முன் 50 ரூபாயோ அல்லது அதற்கு சற்று கூடவோ குறையவோ ஹுஸுர் (அலை) அவர்களிடம் வேண்டினார். ஹுஸுர் (அலை) அவர்கள் உடனடியாக ஹாஃபிஸ் ஹாமித் அலீ அவர்களிடம் கொடுத்து அனுப்பி விட்டார்கள். (அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 215 - 216)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:- டாக்டர் மீர் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் அவர்கள் என்னிடம் இதை அறிவித்தார்கள்: அரேபியரான அப்துல் முஹ்யீ சாஹிப் அவர்கள், என்னிடம் ஒருநாள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலத்தைப் பற்றியே இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் சாஹிப் அவர்களின் வள்ளல் தன்மையைப் பற்றி என்ன சொல்ல!

அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

மஸீஹ் (அலை) அவர்களின் வள்ளல் தன்மையைப் பற்றி என்ன சொல்ல! அவர்கள் கூறுகிறார்கள்: எனக்கு அன்னாரது காலத்தில் ஒருபோதும் எந்தத் துன்பமும் ஏற்பட்டதில்லை. என்ன தேவைப்படுகிறதோ தயக்கமின்றி கேட்டு விடுவேன். ஹுஸூர் (அலை) அவர்கள் எனது தேவைக்கும் அதிகமாக வழங்கி விடுவார்கள்; மேலும், தாமாகவும் வழங்கிக் கொண்டே இருப்பார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் வஃபாத் ஆன பிறகு, ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களால் எனது தேவையை நிறைவேற்ற முடியவில்லை. இத்தனைக்கும் அவர்கள் மிகப் பெரும் வள்ளல் என்று பேர் போனவர்கள் ஆவார்கள். கடைசியில், நான் நொந்து போய் அவர்களுக்கு, தாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கலீஃபாகவோ ஆகிவிட்டீர்கள். ஆனால், எனது தேவையை நிறைவேற்றுவதிலோ தாங்கள் அன்னாருக்குப் பிரதிநிதியாக இருக்கவில்லை. ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்களோ என்னுடன் இப்படி நடந்து கொள்வார்கள் என்று கடிதம் எழுதினேன். இதனால் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எனக்குப் பொருளுதவி செய்தார்கள்.

ஆனால், அவர்கள் கூறுகிறார்கள்: ஆனால், இறைவன் மீது ஆணையாக! ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் எங்கே! இவர் எங்கே! அவர்களுக்கு எதிரில் ஒன்றுமே இல்லை. (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பாகம் 3, பக்கம் 545, அறிவிப்பு எண்: 562)

ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்லத்தில் ஓர் ஏழை பெண் சிறிது அரிசி திருடி விட்டாள். மக்கள் அவளைப் பார்த்து விட்டார்கள். கூச்சல் ஏற்பட்டு விட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அப்பொழுது தமது அறையில் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். சத்தம் கேட்டு வெளியே வருகை தந்தார்கள். அப்பொழுது இந்தக் காட்சியைக் கண்டார்கள். அதாவது, மோசமான நிலையில் இருந்த ஓர் ஏழை பெண் நின்று கொண்டிருக்கிறாள். அவள் கையில் கொஞ்சம் அரிசி இருக்கின்ற மூட்டை இருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு நிகழ்வைப் பற்றித் தெரியவந்தது. அந்த ஏழைப் பெண்ணின் தோற்றத்தைக் கண்டதும் அன்னாரது உள்ளம் உருகி விட்டது. அன்னார், இவள் பட்டினியாகவும், பரம ஏழையாகவும் தெரிகிறாள். இவளுக்கு சிறிது அரிசி கொடுத்து அனுப்பி விடுங்கள். அதாவது, இன்னும் கொஞ்சம் கொடுங்கள். மேலும், இறைவனின் திரையிடுதல் எனும் பண்பை மேற்கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இந்த நிகழ்வை எடுத்துரைத்து விட்டு எழுதுகிறார்கள்: இந்த நிகழ்வைக் கண்டு அவசரக்காரர் ஒருவர், இந்த விஷயமோ திருட்டில் துணிச்சலை உருவாக்கக்கூடியதாகும். அல்லது ஒருத்தி திருடி ஆவாள். அன்னார் அவளைத் துணிச்சல் கொள்ள வைக்கிறார்களே என்று கூறலாம். ஆனால், அறிவார்ந்தவர்கள் புரிகிறார்கள். அறிவுடையவர் புரிகிறார்.

அதாவது, பொருள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு சொந்தமானதாக இருந்தது. மேலும் அதனை எடுத்த பெண் பசி, பட்டினியால் இறந்து கொண்டிருந்த பரம ஏழைப் பெண் ஆவார்.

ஆக, இது திருட்டுக்கு உதவி செய்வதல்ல; மாறாக, உண்மையில், மிஸ்கீன்களுக்கு வழங்குவதைச் சேர்ந்ததாகும். ஹதீஸ்களில் இருந்து நிரூபணமாகிறது, அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்களும் இது போன்ற நிலைமைகளில், திருடும் மனிதன் மிகவும் ஏழையாக இருக்கும்போது, பசியின் உச்சத்தில் இருக்கும்போது, ஏதாவது உணவுப் பொருளை எடுத்து விட்டால், அவரைத் திருடனாகக் கருதவில்லை. மாறாக, கண்டும் காணமல் விட்டு விட்டார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம். ஏ (ரலி) அவர்களின் நூல், ஸீரத்தே தய்யிபா, பக்கம் 64,65)

இவைதான் தம் எஜமானருக்கு முழுமையாகக் கட்டுப்படுவதற்கான முன்மாதிரிகள் ஆகும்.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்
வ அலா அப்திகல் மஸீஹுல் மவ்வூத் வ
பாரிக் வ ஸல்லிம்
தமிழாக்கம்
முரப்பி
அத்தாவுல் முஃமினீ

* * * * * * * * * * *

## 1-ம் பக்கத் தொடர்ச்சி
## (தஃப்ஸீரே கபீர்)......

பெரிய நன்மையாக இருக்கின்றது. சந்ததிகளை அடைந்த பிறகே மனிதனின் ஒழுக்க நெறி முழுமை பெறுகிறது. அல்லாஹ் கூறுகின்றான்:

அதாவது, இஹ்ஸான் எனும் நன்மையின் அந்தஸ்தை அடைந்து விட்டப் பிறகு, அப்போது, பிறரிடமிருந்து பெறுவதை விடக் கொடுப்பதிலேயே உங்களுக்கு அதிக விருப்பம் ஏற்படும். எனவே மனிதகுலம் முழுவதும் உங்களின் சொந்தக் குழந்தைகளாகத் தோன்றும் அளவிலான நன்மையின் அந்த உயர் அந்தஸ்தை அடையுங்கள்; மேலும் ஒரு தாயின் உள்ளத்தில் தன் குழந்தையின் மீது அன்பு பொங்குவது போன்று, மனிதகுலத்திற்குச் சேவை செய்யும் உணர்வு உங்கள் உள்ளத்தில் பொங்கி வழிய வேண்டும்.'

(தஃப்ஸீரே-கபீர், தொகுதி 6, பக்கம் 169, யூ.கே பதிப்பு)

* * * * * * * * * * *

## ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம். ஏ (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

அரபியர்களின் போர்களில் பொதுவாக ஸார் எனும் பழிவாங்குதல் மிகப் பெரிய பங்கு வகித்து வந்தது. ஸார் எனும் பழிவாங்கல் ஒருவகையில் அரேபிய மார்க்கத்தின் பெரும் அங்கமாக இருந்தது. பழிவாங்காத வரை கொலையுண்டவரின் ஆன்மா ஒரு விலங்கின் உருவத்தை மேற்கொண்டு காற்றில் ஒப்பாரி வைத்துக் கொண்டே இருக்கும் என்பது அரேபியர்களின் ஈமானாக இருந்தது. அரபியர்கள் அந்த விலங்கினை 'ஸூதா' என்று கூறி வந்தனர். ஒரு கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு நபர் கொல்லப்பட்டால், அவரது உறவினர்களும், கோத்திரத்தாரும், கொலையாளியையோ அல்லது அவனது உறவினரையோ அல்லது அவனது கோத்திரத்தைச் சேர்ந்த யாராவது ஒருவரையோ கொலை செய்வது கடமையாக இருந்து வந்தது. கொலையுண்டவருக்குப் பதிலாக 'தீத்' அதாவது கொலைக்கான இழப்பீடு கொடுக்கும் வழக்கமும் இருந்தது. ஆயினும், இதில் நிதி அம்சம் அவ்வளவு பெரிதாகக் கருதப்படவில்லை; கொலையாளியின் கோத்திரம் இழிவடைந்து தலைகுனிந்து கொலையுண்டவரின் இரத்தத்திற்கு இழப்பீட்டை செலுத்த வேண்டுமே என்பதே முக்கியமாக இருந்தது. அது வரை அவரது உறவினரின் உள்ளங்களில் ஒரு வகையில் தீ எரிந்து கொண்டிருந்தது. அந்த நெருப்பை கொலையாளியின் ரத்தம் மட்டுமே தணித்து வந்தது. ஆனால், ஒரு பக்கம் இந்தத் தீ தணியும் போது மறுபக்கம் மற்றொரு தீ மூண்டெழும். இவ்வாறு இந்தச் சங்கிலித் தொடர் விரிவடைந்துகொண்டே சென்று, சில நேரங்களில் பல கோத்திரங்கள் அதில் அழிந்து போய் விடும்.

கொலையாளியைக் கொலை செய்வதால் மட்டுமே கொலையுண்டவருக்கான பழிவாங்கும் உணர்ச்சி முடிந்துவிடுவதில்லை. மாறாக, ஆண்களின் கை, கால், மூக்கு, காது போன்றவற்றை துண்டித்துத் தங்களது உள்ளத்தை அமைதிப்படுத்திக் கொள்வார்கள். இந்த முறைக்கு அரபியர்கள் 'முஸ்லா' என்று கூறிவந்தனர். அரேபியர்களின் போர்களில் இது ஒரு பொதுவான வழக்கமாக இருந்தது. ஆக, நாம் முன்னால் சென்று இதற்கான உதாரணத்தை விரிவாக காண்போம்; அதாவது, பத்ர் போரில் தன் தந்தை உத்பாவை கொலை செய்திருந்த பெருமானார் (ஸல்) அவர்களின் சிறிய தந்தையாரான ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களைப் பழிவாங்கும் விதமாக உஹூத் போரில் அபூ ஸுஃப்யானின் மனைவி ஹிந்தா, அன்னாரின் உடலை, மிகவும் இரக்கமின்றிச் சிதைத்து, அன்னாரின் கல்லீரலை எடுத்து மென்றாள். போரில் பெண்களும், குழந்தைகளும் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்டு கொண்டு வரப்பட்டனர். அவர்களை கொலை செய்வதற்கும் அரேபியர்கள் தயங்கியதில்லை. பழிவாங்குதலைத் தீர்த்துக் கொள்வதற்காக ஆண்களின் மண்டையோடுகளில் மது அருந்துவது, கர்ப்பிணிப் பெண்களின் வயிற்றைக் கிழிப்பது, கவனக்குறைவாக இருக்கும்போது தூங்கிக்கொண்டிருக்கும் மனிதர்களைத் தாக்குவது போன்ற செயல்களை அரேபிய சமூகம் ஆகுமற்றதாகக் கருதவில்லை.(தொடரும்......)

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம். ஏ (ரலி) அவர்கள், நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) பக்கம் 55 -59)

* * * * * * * * * * *

## 15-ம் பக்கத் தொடர்ச்சி
## (குத்பா பேருரை 10.7.26)......

விபரத்தை ஹஸ்ரத் சாஹிப் அவர்களே என்னிடம் எடுத்துக் கூறினார்கள்; வீட்டுக்குள் அழைத்து இவ்வாறு கூறப்பட்டபோது, நான் இவ்வாறு செய்தேன்; அல்லாஹ் அதில் பரக்கத்தை ஏற்படுத்தினான் என்று கூறினார்கள். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பாகம் 1, பக்கம் 133 - 135, அறிவிப்பு எண்: 144)

எவ்வித பகட்டுமின்றி நண்பர்களுக்குப் பருவகாலப் பழங்கள் போன்றவற்றை உண்ணக் கொடுப்பதும், அவைகளை பரிமாறுவதும் அன்னாருடைய வழக்கமாக இருந்தது; அதில் எவ்வித பகட்டும் இருக்கவில்லை. அன்னார் (அலை) எப்போதும் வழங்கி கொண்டே இருப்பார்கள்.

ஹஸ்ரத் மும்தாஸ் அலி சாஹிப் ஸித்தீக்கி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: தோட்டத்தில் ஷஹே நஷீன் எனும் ஓர் இருக்கை இருந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது; அது மீண்டும் சீரமைக்கப்பட்டுள்ளது. அதில் ஹுஸூர் அவர்கள் தமது நண்பர்களுடன் வந்து அமர்வதுண்டு. சில நேரங்களில் இங்கு அமர்ந்து பருவகாலப் பழங்களையும் உண்பார்கள். ஒருமுறை நடந்த சம்பவம் எனக்கும் நினைவிருக்கிறது; ஹுஸூர் (அலை) அவர்கள் தமது பரிவான கரங்களால் இரண்டு மாம்பழங்களை எனக்கு வழங்கினார்கள்; அதேபோல் ஏனைய நண்பர்களுக்கும் தலா இரண்டு மாம்பழங்களைக் கொடுத்தார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 2, பக்கம் 384, அறிவிப்பாளர்: ஹஸ்ரத் மும்தாஸ் அலீ ஸித்தீக்கீ ஸாஹிப் (ரலி) அவர்கள்)

இவை அன்னாருடைய கொடை மற்றும் பேருதவி குறித்த சில சம்பவங்களாகும்; இவற்றின் முன்மாதிரியை அன்னார் (அலை) தமது எஜமானரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வெளிப்படுத்திக் காட்டினார்கள். இந்த பேருதவி மற்றும் தாராள தன்மையின் மூலம் அன்னாரைச் சார்ந்தவர்களும், அந்நியர்களும் இன்னும் கூறுவதென்றால் எதிரிகளும் கூட பயனடைந்து வந்தனர்.

தமிழாக்கம்
முரப்பி
A.P.A தாரிக் அஹ்மது

* * * * * * * * * * *

# ஜுமுஆ பேருரை

## காலத்தின் இமாம் ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பரிவு கொடை மற்றும் தாராள மனப்பான்மை தொடர்பான ஈமானை வலுவூட்டும் சம்பவங்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 10 ஜுலை 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**5** ஆண்டு **வஃபா** மாதம் **10 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஹுஸூர் (அலை) அவர்களின் வாழ்வில் வாரி வழங்கும் வள்ளல்தன்மையின் மற்றோர் உன்னதமான பண்பும் வெளிப்பட்டது; அது பரிந்துரை மற்றும் சிபாரிசு எனும் வடிவில் இருந்தது. சில நேரங்களில், அன்னாரின் சமூகத்திற்கு ஏதேனும் ஒரு கேட்பவர் வருவதுண்டு; அவரது தேவையை நிறைவு செய்வது அன்னாரின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்காது. மாறாக, அது மற்றவர்களோடு தொடர்புடையதாக இருக்கும். இத்தகைய சூழலில், தமது சொந்தத் தேவைக்காக ஒருபோதும் எதையும் கேட்காத மனிதர்களிடம் கூட (கேட்டு வந்த) அந்த நபரது நலனுக்காக அன்னார் (அலை) பரிந்துரை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அதாவது, மற்றவர்களுடைய காரியங்களைச் செய்து கொடுப்பதற்காக, வேறொருவரின் உதவியைப் பெறுவார்களே தவிர, தமது சொந்தப் பணிக்காக அந்த மனிதரிடம் அன்னார் (அலை) ஒருபோதும் உதவி கோரியதில்லை.

அவர்கள் எழுதுகிறார்கள்: மேலும், இது உலகிலேயே மிகவும் அரிதாகக் காணப்படக்கூடிய ஒரு கண்ணியமான, தூய்மையான பண்பாகும்.

மேலும், அவர்கள் மிர்ஸா இமாமுத்தீன் சாஹிபைப் பற்றிக் குறிப்பிடும்போது இவ்வாறு எழுதுகிறார்கள்:

மிர்ஸா இமாமுத்தீன் சாஹிப் இந்த இயக்கத்தின் கடும் எதிரியாக இருந்தார் என்பதும், ஹுஸூர் (அலை) **அவர்களின் குடும்பத்துடன் அவருக்குப் பகை இருந்தது என்பதும் மறைவான விவகாரம் ஒன்றுமல்ல;** இருப்பினும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், உலக விஷயங்களில் அவரது பகைமையை ஒருபோதும் பொருட்படுத்தியதில்லை. **மார்க்க விவகாரங்களில் பகைமையை அன்னார் (அலை) சகித்துக் கொள்ள மாட்டார்கள்.** ஆனால், உலக நடைமுறைகளில் அன்னார் (அலை) அதைப் பற்றி ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. அதாவது, அவரிடம் நல்லொழுக்கத்துடன் நடந்துகொள்வதில் அன்னார் (அலை) ஒருபோதும் எந்தவொரு வேறுபாட்டையும் காட்டியதில்லை. அவர் பலமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நிதி உதவி பெற்றுக் கொள்வார். இத்தகைய பேருதவிகளைப் பெற்ற போதிலும் அன்னாரை எதிர்ப்பதிலும் ஈடுபட்டிருந்தார்; அந்த அளவுக்கு அவர் ஒரு கடும் எதிரியாக இருந்தார்.

ஒருமுறை, அவர் ஒரு குதிரையை விற்பனை செய்ய வேண்டியிருந்தது; அதற்காக, அந்தக் குதிரையை ஜம்முவிற்கு கொண்டு சென்று, ஹஸ்ரத் ஹக்கீமுல் உம்மத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மூலமாக சமர்ப்பித்தால் அதற்கு ஒரு நல்ல தொகை கிடைக்கும் என்று அவர் ஒரு சிறந்த வாய்ப்பைத் திட்டமிட்டார். அதாவது, அங்கே இருக்கும் ராஜாக்கள், மகாராஜாக்களுடன் மவ்லவி சாஹிபிற்கு அறிமுகம் இருந்ததால், அந்த ராஜா மகாராஜாக்கள் அதனை வாங்கிக் கொள்வார்கள் என்று கருதினார். இந்தத் திட்டத்தை மனதில் கொண்டு, மிர்ஸா நிஸாமுத்தீனே நேரடியாக வந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம், ஹஸ்ரத் ஹக்கீமுல் உம்மத் (ரலி) அவர்களின் பெயருக்கு ஒரு பரிந்துரைக் கடிதம் எழுதித் தருமாறு வேண்டினார். அன்னார் (அலை) இந்த வேண்டுகோளை நிராகரிக்கவில்லை; எவ்விதத் தயக்கமுமின்றி ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் (ரலி) அவர்களின் பெயருக்கு ஒரு பரிந்துரைக் கடிதத்தை வழங்கினார்கள். மிர்ஸா இமாமுத்தீன் சாஹிபின் பகையும், விரோதமும் மறைவான ஒன்றல்ல என்பது தெளிவான விஷயம்; ஆனால் நன்மை செய்வதற்கும் பேருதவி செய்வதற்குமான சூழல் வரும்போதெல்லாம், அந்தப் பகையைப் பற்றிய எண்ணம் கூட ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வந்ததில்லை; மேலும் அவருக்கு நன்மை பயப்பதில் அன்னார் (அலை) ஒருபோதும் தயங்கியதில்லை. (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) - பாகம் 2, பக்கம் 297)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களுக்கு எழுதிய அந்த கடிதம் பின்வருமாறு இருந்தது;

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹிம். நஹ்மதுஹு வ நுஸல்லி அலா ரஸூலிஹில் கரீம்.**

மதிப்பிற்கும்,மரியாதைக்கும் உரிய எனது சகோதரர் மவ்லவி ஹக்கீம் நூருத்தீன் சாஹிப் (ஸல்லமஹு தஆலா) அவர்களுக்கு, அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு. இந்தக் கடிதத்தை எழுதுவதன் நோக்கம் தங்களுக்கு ஒரு சிரமத்தைத் தருவதாகும். தங்களது கவனத்தையும், முயற்சியையும் இதற்காக வழங்குவதில் தாங்கள் தயங்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அதாவது, மிக்க கவனத்துடன் வலியுறுத்திக் கூறுவது என்னவென்றால், எனது தந்தை வழிச் சகோதரரான மிர்ஸா இமாமுத்தீன் சாஹிப் அவர்களிடம் மிக உயர்ந்த மதிப்புள்ள குதிரை ஒன்று உள்ளது; அது நன்கு ஓடக்கூடிய குதிரையும், ராஜாக்கள் மற்றும் செல்வந்தர்கள் சவாரி செய்வதற்கு ஏற்ற தகுதியையும் கொண்டது. தற்போது அவர் அதனை விற்க விரும்புகிறார். இத்தகைய அதிக விலை மதிப்புள்ள குதிரைகளைச் சாதாரண மக்களால் வாங்க முடியாது, மேலும் செல்வந்தர்களே இத்தகையப் பொருட்களைத் தேடிக் கொண்டிருப்பார்கள். எனவே, தாங்கள் தயவுசெய்து ஜம்முவின் அரசர் அல்லது அவரது சகோதரர்களில் ஒருவரிடம் இதனைப் பற்றி எடுத்துரைத்து, அவர்கள் தகுந்த விலைக்கு அந்தக் குதிரையை வாங்கிக் கொள்ளும் பொருட்டு முழு முயற்சி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். வாங்கும் எண்ணம் அவர்கள் தரப்பில் உறுதியாகிவிட்டால், குதிரை தங்களிடம் அனுப்பி வைக்கப்படும். கண்டிப்பாகத் தகுந்த முயற்சிக்குப்பிறகு எனக்குத் தகவல் தெரிவியுங்கள். மிகுந்த முயற்சி செய்யுங்கள். வஸ்ஸலாம். எளியவன், மிர்ஸா குலாம் அஹ்மத்.(ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) - பாகம் 2, பக்கம் 297- 298)

இது 1888 ஆம் ஆண்டின் சம்பவமாகும். அந்த நேரத்தில் மிர்ஸா இமாமுத்தீனின் பகை இருந்தது. ஆனால் அப்போது அன்னார் இன்னும் வாதம் செய்திருக்கவில்லை. எவ்வாறிருப்பினும், இத்தகைய சூழலிலும் அன்னார் (அலை) தமது எதிரியான அந்தச் சகோதரருக்கு உதவினார்கள்.

ஹஸ்ரத் ஷேக் மஹ்மூத் நஸீப் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எடுத்துரைக்கிறார்கள்:

நான் ஒரு காலகட்டத்தில் சீக்கிய தச்சர்களின் இல்லத்தில் வாடகைக்கு வசித்து வந்தேன்; அது ஊராட்சித் தலைவரான மிர்ஸா நிஸாமுத்தீன் சாஹிபின் இல்லத்திற்கு மிக அருகிலேயே இருந்தது. ஏதோ ஒரு விஷயம் தொடர்பாக அந்த வீட்டு உரிமையாளரான பெண்மணி என்னிடம் வீணாக சண்டை போட்டு, என்னை வீட்டை காலி செய்யுமாறு கூறினார். அதற்கு, முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதப்பட்டிருக்கிறது; மீதமுள்ள வாடகையையும் நான் செலுத்தி வருகிறேன். எனவே நான் வீட்டை காலி செய்ய மாட்டேன் என்று நான் கூறினேன். அவளோ இந்த விஷயத்தில் மிர்ஸா நிஸாமுத்தீன் சாஹிபிடம் உதவி பெற விரும்பினாள். அவர் காவல் பணியில் இருந்த கைருத்தீன் சாஹிப் என்பவரின் மூலமாக என்னை அடிக்கடி அழைத்துக் கொண்டிருந்தார். சில நேரங்களில் நான் அங்குச் செல்வதுண்டு, சில நேரங்களில் நான் செல்ல மாட்டேன்.

எவ்வாறிருப்பினும், என்னை அச்சுறுத்தி, அங்கு கலவரம் ஏற்பட்டுவிடும்! என்று கூறி வீட்டை காலி செய்ய வைக்க அவர்கள் விரும்பினார்கள். ஆனால் நான் காலி செய்யவில்லை.

இதன் காரணமாக, மிர்ஸா நிஸாமுத்தீன் சாஹிப், ஷேக் யஃகூப் அலி சாஹிபிடம் இதனைப் பற்றிக் கூறி உதவி கோரினார். அப்போது ஷேக் சாஹிப் என்னிடம் வந்து, நீ வீட்டை காலி செய்து விடுவதுதான் நல்லது என்று கூறினார். அந்நாட்களில் எனது வீட்டில் ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தது; எனவே வீட்டை மாற்றுவது மிகவும் கடினமாக இருந்தது. நான் இந்த விஷயத்தை ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிபிடம் எடுத்துரைத்தேன். மவ்லவி சாஹிப் அவர்கள் ஷேக் யஃகூப் அலி சாஹிப் மீது கோபமடைந்து, இவருக்கு முதலில் வேறொரு வீட்டை ஏற்பாடு செய்து கொடுங்கள்; அதற்குப்

பிறகு வீட்டை காலி செய்ய வையுங்கள் என்று எழுதினார்கள். மவ்லவி சாஹிபின் கோபத்தைக் கண்டு ஷேக் சாஹிப் முற்றிலும் மௌனமாகிவிட்டார். ஆனால் மிர்ஸா (நிஸாமுத்தீன்) சாஹிப் தனது வற்புறுத்தலைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

இறுதியாக, ஒரு நாள், நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சமூகத்தில் இந்த விபரங்கள் அனைத்தையும் எழுதி அனுப்பினேன்; அதைப் பார்த்து அன்னார் (அலை) மிகுந்த வருத்தமடைந்து, இதைப் படித்து எனது உள்ளம் மிகுந்த வேதனையடைந்தது; என்னிடம் ஏதேனும் வீடு காலியாக இருந்திருந்தால் நான் கண்டிப்பாக உனக்குக் கொடுத்திருப்பேன்; எதிர்காலத்தில் இதைக் கவனத்தில் கொள்கிறேன் என்று கூறினார்கள். மேலும், இன்று நான் ளுஹர் தொழுகைக்காக வரும்போது ஷேக் அலீ சாஹிபும் அங்கு வந்திருந்தால் எனக்கு இதனை நினைவுபடுத்து என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

அந்நாட்களில் மஸ்ஜித் முபாரக்கின் விரிவாக்கப் பணிகள் நடந்து கொண்டிருந்தன; எனவே தொழுகை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிபின் வீடாக இருந்த அந்த கட்டடத்தில் தொழ வைக்கப்பட்டு வந்தது. நான் ளுஹர் தொழுகைக்காகச் சென்றபோது ஹுஸூர் (அலை) அவர்கள் வருகை தந்தார்கள். நான் இன்னும் எதுவும் கூறவில்லை; என்னைப் பார்த்ததும், மிர்ஸா நிஸாமுத்தீனின் இல்லத்திலிருந்து ஒரு பெண்மணி வந்திருந்தாள். நான் அவர்களுக்கு ஒரு செய்தியை அனுப்பி வைத்துள்ளேன்; இனி உமக்கு எந்தத் துன்பமும் ஏற்படாது என்று அன்னாரே கூறினார்கள். அதன்படியே, அதற்குப் பிறகு யாரும் என்னிடம் எதுவும் கூறவில்லை. நான் நீண்ட காலம் அந்த வீட்டிலேயே வசித்து வந்தேன். அதன் பின்னர் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா எனக்கு ஒரு வீடு ஒதுக்கீடு செய்யும் வரை நான் அங்கேயே இருந்தேன்; அஞ்சுமன் சார்பாக வீடு கிடைத்ததும் நான் அந்த வீட்டை காலி செய்தேன். அந்த நேரத்தில் அந்தப் பெண்மணியின் நிலை முற்றிலும் தலைகீழாக மாறியிருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அவளுக்கு ஏதோ ஒரு பேருதவி செய்திருந்தார்கள்; அதனால் அவள் இப்போது என்னை வீட்டை விட்டுப் போக அனுமதிக்கவில்லை; ஏன் போகிறீர்கள்? என்று கூறி தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

ஆரம்பத்தில் சண்டை போடும் நிலை இருந்தது. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அணுகுமுறையின் காரணமாகவும், அன்னார் (அலை) அவளுக்குச் செய்த பேருதவியின் காரணமாகவும் அவள் முற்றிலும் மாறிப் போனாள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஓர் எளிய ஊழியரிடம் காட்டிய இந்த அன்பும் கனிவும் வியக்கத்தக்கதாகும்; ஏனெனில் மிர்ஸா நிஸாமுத்தீன் சாஹிபுடன் அன்னாருக்கு எந்தவொரு பேச்சுவார்த்தையோ, வந்துபோவதோ இருக்கவில்லை. முற்றிலும் உறவு துண்டிக்கப்பட்டிருந்ததை அனைவரும் அறிவர். இருப்பினும், அன்னாரின் இந்த பேருதவி என் மீது உண்டானது என்று அவர்கள் எழுதுகிறார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 5, பக்கம் 445, அறிவிப்பு எண்: 446 - ஹஸ்ரத் ஷேக் முஹம்மது நஸீப் ஸாஹிப் (ரலி) அவர்கள்)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹோஷியார்பூரைச் சேர்ந்த மிர்ஸா அஹ்மத் பேக் சாஹிபின் மகனான மிர்ஸா முஹம்மது பேக்கின் சம்பவத்தையும் நான் இங்குப் பதிவு செய்கிறேன். மிர்ஸா முஹம்மது பேக்கின் குடும்பத்துடனும் (அன்னாருக்கு) நல்லுறவு இருக்கவில்லை; மேலும், இத்தகைய உறவை இனிமையாகப் பேணுவது என்பது முற்றிலும் அல்லாஹ்வின் திருப்திக்காக மட்டுமே இருந்தது. இது அஹ்மத் பேக் மற்றும் முஹம்மதி பேகமின் குடும்பமாகும். அவர்கள் முற்றிலும் மார்க்கப்பற்றில்லாதவர்களாகவும், இந்த இயக்கத்தின் கடும் எதிரிகளாகவும் இருந்தனர். மிர்ஸா முஹம்மது பேக் ஜம்முவிற்குச் சென்று வேலை செய்ய விரும்பினார். அதற்காக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம், ஹஸ்ரத் ஹக்கீமுல் உம்மத் (ரலி) அவர்களின் பெயருக்கு ஒரு பரிந்துரைக் கடிதம் எழுதித் தருமாறு வேண்டினார். அன்னார் (அலை) எந்தவொரு நியாயமான கோரிக்கையையும் நிராகரிக்காத காரணத்தால், எவ்விதத் தாமதமுமின்றி ஒரு கடிதத்தை எழுதிக் கொடுத்தார்கள்.

அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததாவது: தங்களிடம் வந்திருக்கும் முஹம்மது பேக் என்ற இந்த இளைஞனின் தந்தை மிர்ஸா அஹ்மத் பேக், தனது அறியாமை மற்றும் உலகப் பற்றின் காரணமாக இந்த எளியவன் மீது கடும் பகையும், விரோதமும் கொண்டுள்ளார் என்பதைத் தாங்கள் அறிவீர்கள்! இத்தகைய மக்களின் கடுமையான போக்குக்கு எதிராக நாம் மென்மையைக் கடைப்பிடித்து,

அதாவது, எது மிகச் சிறந்த வழிமுறையோ அதன் மூலம் அகற்றுவீராக! என்ற நன்மையின் கூலியை ஏன் பெறக்கூடாது? நான் சிறந்த முறையில் அவருக்குப் பதிலளித்து, அவருக்கு நன்மை செய்வேன்; அல்லாஹ்வின் இந்த கட்டளையைப் பின்பற்றி நடப்பதன் மூலம் அதன் நற்கூலியை நான் ஏன் பெறக்கூடாது? இந்த இளைஞன் முஹம்மது பேக்கிடமிருந்து,

மவ்லவி சாஹிப்! என்னை காவல் துறையில் வேலைக்குச் சேர்த்து விட வேண்டும் என்று கோரி எத்தனையோ கடிதங்கள் வந்துள்ளன (என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதியிருந்தார்கள்).

இக்கடிதத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் மவ்லவி சாஹிப் அவர்கள் அந்த இளைஞனை காவல் துறையில் வேலைக்குச் சேர்த்து விட்டார்கள்.

இந்தச் சம்பவங்களிலிருந்து, அல்லாஹ்வின் படைப்புகளுக்குப் பயனளிப்பதற்காக அன்னார் எல்லா வகையிலும் எப்போதும் ஆயத்தமாக இருந்தார்கள் என்பதும், வாரி வழங்குவதிலும்,பரிந்துரை சிபாரிசு செய்யும் விஷயத்திலும் அன்னார் (அலை) ஒருபோதும் தயங்கியதில்லை என்பதும் தெளிவாகிறது. இத்தகைய விஷயங்கள் இருந்தபோதிலும், ஏதேனும் கொடுப்பது வீண்விரயமான முறையில் அமைகிறது என்று அன்னார் கண்டால், அதிலிருந்து அன்னார் (அலை) விலகியும் இருந்தார்கள்; வீண்விரயம் இருக்கக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) - பாகம் 2, பக்கம் 298-299)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் (ரலி) அவர்களே எழுதுகிறார்கள்: காதியானில் நிஹால் சந்த் பஹாரோ ராஜ் என்ற ஒரு பிராமணர் இருந்தார். அவரை நிஹாலா என்றும் அழைப்பார்கள். நிஹால் சந்த் பஹாரோ ராஜ் என்ற அந்தப் பிராமணர், தனது இளமைக் காலத்தில் இந்துவாக இருந்தார். அவர் ஒரு பிரபலமான வழக்குவாதியாக இருந்தார். அவரது இறுதி ஆயுள் காலம் வரை ஏறத்தாழ அவரது நிலை இவ்வாறே இருந்தது; அவர் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் குடும்பத்தினருடன் பொதுவாகப் போட்டியிடுவதிலும், விஷமத்தனம் செய்வதிலும் ஈடுபட்டிருந்த மக்களைச் சேர்ந்தவராக இருந்தார். மேலும், இந்த இயக்கத்தின் எதிரிகளுடனும் அவர் சேர்ந்திருந்தார். அவரது இறுதி காலத்தில் அவரது நிதி நிலைமை மிகவும் மோசமடைந்தது; எந்தளவுக்கு என்றால், சில நேரங்களில் அவருக்குத் தனது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதற்குக் கூடச் சிரமங்கள் ஏற்பட்டன. உணவுக்குக் கூட கடினமாகிப் போனது. அவர் ஒருமுறை ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் வாசலுக்கு வந்து, சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்துச் செய்தி அனுப்பினார். அவர் எதிரியாகத்தான் இருந்தார்.

ஆனால் எவ்வாறிருப்பினும், இத்தகைய மனிதர்களுக்கு வெட்கம் என்பது இருப்பதில்லையே! எவ்வாறிருப்பினும், அவர் அன்னாரது வாசலில் வந்து நின்று சந்திப்பதற்கான விருப்பம் தெரிவித்து தகவல் அனுப்பியபோது ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் உடனடியாக வெளியே வருகை தந்தார்கள். அவர் ஸலாம் கூறித் தனது கதையைக் கூறத் தொடங்கினார். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் அவருக்கு ஆறுதல் அளித்தது மட்டுமன்றி, இருபத்தைந்து ரூபாய் தொகையைக் கொண்டு வந்து அவரது கையில் கொடுத்து, தற்போதைக்கு இதைக்கொண்டு தேவைகளை நிறைவேற்றுங்கள். பிறகு தேவைப்படும்போது எனக்குத் தகவல் கொடுங்கள் என்று கூறினார்கள். அதற்குப் பிறகு அந்த மனிதருக்கு அது ஒரு வழக்கமாகவே ஆகிவிட்டது; அவர் ஓரிரு மாதங்களுக்குப் பிறகு வருவார்; தனது தேவைகளுக்காக அன்னாரிடமிருந்து ஒரு கணிசமான தொகையைப் பெற்றுச் செல்வார். அவர் ஹஸ்ரத் அக்தஸ் அவர்களிடம் வாங்கியதோடு மட்டுமில்லாமல் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடமிருந்தும் கூட ஒரு கணிசமான தொகையை ஒரு குறிப்பிட்ட வாக்குறுதியின் அடிப்படையில் கடனாக பெற்றிருந்தார். அந்த வாக்குறுதி அளித்த காலம் கடந்துவிட்டபோது, ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அவரிடம் அதனைக் கேட்டு ஆள் அனுப்பினார்கள்; ஆனால் அவரோ மேலோட்டமாக ஒரு பதிலை கூறி மழுப்பிவிட்டார். இறுதியாக, ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் என்னிடம் கூறியபோது, அதாவது தாம் அவரிடம் சென்று கடனைத் திரும்பக் கேட்க வேண்டும் என்று தம்மிடம் கூறியதாக அறிவிப்பாளர் கூறுகிறார் - நான் அவரிடம் அதனைக் கேட்டபோது, அவர், நான் மேலே இப்போது எடுத்துரைத்த இந்த சம்பவத்தைக் கூறி, மவ்லவி சாஹிப் அடிக்கடி ஆள் அனுப்புகிறார். ஆனால் மிர்ஸா ஜி அவர்களோ எப்போதும் எனக்குப் பணம் கொடுக்கிறார்கள்; அதன் மூலமே எனது வாழ்வாதாரம் நடந்து கொண்டிருக்கிறது என்று கூறினார். நான் வந்து ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் இந்த விபரங்களை எடுத்துக் கூறியபோது, ஆகட்டும்! இனி அவரிடம் கேட்க வேண்டாம் என்று கூறிவிட்டார்கள். ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களும் அதற்குப் பிறகு அவரிடம் அதனைக் கேட்கவில்லை. இதேபோல், பண்டிட் பேஜ் நாத் என்ற ஒரு நபரும் இருந்தார்; ஹஸ்ரத் (அலை) அவர்கள் அவரிடமும் நல்ல முறையில் நடந்துகொண்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அவரது அணுகுமுறை நன்றாக இல்லாதபோதிலும் அன்னார் (அலை) அவ்வாறு செய்தார்கள்.(ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) - பாகம் 2, பக்கம் 289-290)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: YMCA-வின் செயலாளராக இருந்த பாதிரியார் வால்டர் M.A. அவர்கள், அஹ்மதிய்யா மூவ்மென்ட் என்ற தனது ஆங்கில நூலில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி பதிவு செய்துள்ள கருத்து என்னவென்றால், மிர்ஸா சாஹிப் அவர்கள் தமது பழக்கவழக்கங்களில் எளிமையானவராகவும், தாராள மனப்பான்மை கொண்டவராகவும் இருந்தார் என்பது எல்லா வகையிலும் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். தமது எதிரிகளின் தரப்பிலிருந்து வந்த

திருக்குர்ஆனிலிருந்து...

**அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன (13:29)**

A. Khaleel Ahmad
( Melapalayam)

கடுமையான எதிர்ப்புகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் எதிராக அவர் காட்டிய ஒழுக்க நெறி சார்ந்த துணிச்சல் நிச்சயமாகப் பாராட்டத்தக்கதாகும். ஈர்க்கக்கூடிய ஒரு காந்த ஆற்றலும், மிகுந்த நற்பண்புகளும் கொண்ட ஒரு மனிதரால் மட்டுமே இத்தகைய மக்களின் நட்பையும், விசுவாசத்தையும் பெற முடியும்; அவர்களில் இருவர் ஆஃப்கானிஸ்தானில் தங்களது கொள்கைக்காக உயிரையே தியாகம் செய்துள்ளனர்.

ஆஃப்கானிஸ்தானின் அந்தச் ஷஹீதுகளைப் பற்றி அவரும் இங்குப் பதிவு செய்துள்ளார்.அவர் கூறுகிறார்: இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அனுகுமுறையின் காரணமாகவே இருந்தது. அவர்கள் மிர்ஸா சாஹிபை ஒருபோதும் விடவில்லை. நான் சில பழைய அஹ்மதிகளிடம் அவர்கள் அஹ்மதியாக மாறியதற்கான காரணத்தைக் கேட்டபோது, அவர்களில் பெரும்பாலார் மிக முக்கியக் காரணமாக மிர்ஸா சாஹிபின் தனிப்பட்டத் தாக்கத்தையும், மக்களைத் தம்பால் ஈர்த்து கொள்ளும் அன்னாரது ஆளுமையையுமே எடுத்துக் கூறினார்கள். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பக்கம் 268 - 269, அறிவிப்பு எண்: 297)

எதிரிகளாக இருந்தாலும் சரி! அவர்கள் இங்கு வந்து தங்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்காக என்னிடம் கேள்வி கேட்பார்களேயானால், அவர்களது செலவுகளையும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று பொது சபைகளிலும் அன்னார் (அலை) இவ்வாறு கூறுவதுண்டு.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இது குறித்து எழுதுகிறார்கள்:

மியான் ஃபக்ருத்தீன் சாஹிப் முல்தானி அவர்கள் என்னிடம் கூறினார்கள்; ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் ஒருமுறை எனது தந்தையார் இங்கு வந்திருந்தார். அவர் ஒரு கடுமையான எதிரியாகவும், அவதூறு பேசுபவராகவும் இருந்தார். இங்கு வந்த பிறகும் கூட அவர் மிகவும் ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தார். அவர் முல்தானில் இருந்தபோது, நான் எப்போதாவது மிர்ஸாவைச் சந்தித்தால், நவூதுபில்லாஹ், அவரது முகத்திற்கு நேராகவே சாபமிடுவேன். அதாவது, இங்கு என்ன பேசுகிறேனோ அதையே அவரது முன்னிலையிலும் பேசுவேன் என்று கூறுவார். எவ்வாறிருப்பினும், நான் அவரை ஹுஸூர் (அலை) அவர்களிடம் அழைத்துச் சென்றேன். ஹுஸூர் அவர்கள் வெளியே வருகை தந்த போது, எனது தந்தையார் அந்த நேரத்தில் மிகுந்த மரியாதையுடன் எழுந்து நின்றார். பிறகு அச்சமடைந்து பின்னோக்கிச் சென்று அமர்ந்து கொண்டார். அந்நேரத்தில் சபையில் மற்ற மக்களும் இருந்தனர். ஹுஸூர் அவர்கள் அமர்ந்தபடியே எவ்வித கேள்வியும் இன்றி உரை நிகழ்த்தத் தொடங்கினார்கள். 'மக்கள் நம்மிடம் வர வேண்டும், நமது வார்த்தைகளைக் கேட்க வேண்டும், நம்மிடம் கேள்வி கேட்க வேண்டும் என்று பலமுறை நாம் விரும்புகிறோம்; அவர்களுக்காகச் செலவு செய்யவும் நாம் தயாராக இருக்கிறோம். ஆனால், முதலாவதாக, மக்கள் வருவதில்லை, அப்படியே வந்தாலும் மௌனமாக அமர்ந்திருக்கிறார்கள். பிறகு பின்னால் சென்று பேசுகிறார்கள் என்று அன்னார் கூறினார்கள்.

சுருக்கமாக, ஹுஸூர் அவர்கள் தெளிவாக உரை நிகழ்த்தி தப்லீக் செய்தார்கள். அவரைப் பேச வைப்பதற்காகப் பலமுறை தூண்டினார்கள்.

எனது தந்தை மிகவும் சாமர்த்தியமாகப் பேசக் கூடியவர். ஆனால் அவரது வாயில் முத்திரை குத்தப்பட்டது போல் ஆகிவிட்டது, அவரால் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. அங்கிருந்து எழுந்த பிறகு நான் அவரிடம், நீங்கள் ஏன் அங்கே பேசவில்லை என்று கேட்டேன்; அதற்கு அவர் எதுவும் கூறவில்லை; பேச்சுவாக்கில் அதனைத் தட்டிக்கழித்துவிட்டார்.

எவ்வாறிருப்பினும், மியான் ஃபக்ருத்தீன் சாஹிப் கூறுகிறார்: ஹுஸூர் (அலை) அவர்கள் தமது உரையில் எனது தந்தையை நோக்கிப் பேசவில்லை; மாறாகப் பொதுவாகவே உரை நிகழ்த்தியிருந்தார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, மியான் ஃபக்ருத்தீன் சாஹிப் அவர்களும் கூட இரண்டாவது கிலாஃபத்தின் கால கட்டத்தில் ஜமாஅத்தை விட்டு விலகிவிட்டார். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 1, பக்கம் 54 - 55, அறிவிப்பு எண்: 54)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்:

லூதியானாவைச் சார்ந்த மர்ஹூம் மவ்லவி அப்துல் காதிர் சாஹிப் அவர்களின் மகளும், நுஸ்ரத் ஹை ஸ்கூல் ஆசிரியை ஆகவும் இருந்த ஸஃபிய்யா பேகம் அவர்கள் என்னிடம் எடுத்துக் கூறியது என்னவென்றால்; ஒருமுறை ஒரு யாசகர் ஜன்னல் வழியாக ஒரு குர்தா (மேல் ஆடை) கேட்டார். ஹுஸூர் (அலை) அவர்கள் தமது குர்தாவைக் கழற்றி ஜன்னல் வழியாக அந்த ஏழைக்குக் கொடுத்துவிட்டார்கள். இதைக் கவனித்துக் கொண்டிருந்த எனது மர்ஹூம் தந்தையார், 'அல்லாஹ்! அல்லாஹ்! என்னவொரு தாராள குணத்தைக் காட்டுகிறார்கள்! என்று கூறினார்கள். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 2, பாகம் 5, பக்கம் 311, அறிவிப்பு எண்: 1565)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்: மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் ஃபாஸில் ஜட் அவர்களின் மாமியாரும், மர்ஹூம் ஹாஃபிஸ் ஹாமித் அலி (ரலி) சாஹிபின் மனைவியுமான ரசூல் பீபி சாஹிபா அவர்கள் எடுத்துரைத்ததாவது; எங்களது உணவு, உடை போன்ற அனைத்துச் செலவுகளையும் ஹுஸூரே வழங்கி வந்தார்கள். ஒருமுறை ஹுஸூர் அவர்கள் தமக்காகவும், ஹாஃபிஸ் ஹாமித் அலி (ரலி) சாஹிபிற்காகவும் ஒரு துணியிலான ஒரே மாதிரியான வாஸ்காட் (சட்டைக்கு மேல் அணியும் அரை ஜாக்கெட்) தைக்கச் செய்தார்கள். அது குளிர்காலமாக இருந்தது. நான் ஹாஃபிஸ் சாஹிபிடம், நான் காலையில் தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழும்போது, ஸஹ்ரி சமைக்கும்போது எனக்குக் குளிர்கிறது என்று கூறினேன். அப்போது ஹாஃபிஸ் சாஹிப் அவர்கள், ஹுஸூர் தமக்குத் தைத்துக் கொடுத்திருந்த அந்த வெதுவெதுப்பான வாஸ்காட்- ஐ என்னிடம் கொடுத்து, நீ இதனை அணிந்து கொள்! என்று கூறினார்கள். நான் அதனை அணிந்து கொண்டு, அடுப்பில் நெருப்பு மூட்டிக் கொண்டிருந்தபோது ஹுஸூர் (அலை) அங்கு வந்தார்கள். அன்னார் என்னிடம், ரஸுல் பீபி! என்ன! எனது வாஸ்காட்டைத் திருடி விட்டாயா?என்று நகைச்சுவையாகக் கேட்டார்கள். அதற்கு, ஹுஸூர்! அனைத்தும் தங்களுடையதுதான்; தங்களுடையதைத்தான் உண்கிறோம்; தங்களுடையதைத்தான் அணிகிறோம் என்று நான் கூறினேன். இதைக் கேட்டு ஹுஸூர் (அலை) அவர்கள் சிரித்தார்கள். மேலும், நன்றாக உண்டு மகிழுங்கள்! என்று அன்னார் (அலை) கூறினார்கள். (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 2, பாகம் 5, பக்கம் 288, அறிவிப்பு எண்: 1517)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பழக்கம் எவ்வாறானதாக இருந்தது என்றால், அன்னார் (அலை) யாருக்கு எதைக் கொடுத்தாலும் அது எவ்வித விளம்பரத்திற்காகவும் இருக்காது; மாறாக, முற்றிலும் அல்லாஹ்வின் திருப்திக்காகவும், அல்லாஹ்வின் படைப்புகள் மீதான பரிவு என்ற நோக்கத்தின் அடிப்படையிலுமே இருக்கும்.

எனவே, பொதுவாகவே அன்னார் (அலை) மிகவும் மறைமுகமான வழிகளிலேயே இந்த கொடைகளை வழங்கி வந்தார்கள்; சில நேரங்களில் மற்றவர்களைத் தூண்டுவதற்காகவும், செயல்முறைப் பயிற்சியை கற்பிப்பதற்காகவும்,வெளிப்படையாகவும் செய்வதுண்டு. மறைமுகமாகச் செய்வதில் அன்னாருடைய ஒரு வழிமுறை எவ்வாறிருந்தது என்றால், சில நேரங்களில் வாங்குபவருக்குக் கூட அது மிக அரிதாகவே தெரியவரும் வகையில் கொடுப்பார்கள்.

இது குறித்து நான் ஒரு சம்பவத்தை கூறுகிறேன். தற்போது காதியானுடன் தொடர்பைத் துண்டித்துக் கொண்டு பின்வாங்கிவிட்ட முன்ஷி முஹம்மது நஸீப் சாஹிப் (ரலி) அவர்கள், ஆரம்பத்தில் ஓர் அனாதையாக காதியானுக்கு வந்தார். ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் கருணை மற்றும் தயவிலேயே காதியானில் தங்கி கல்வி கற்றார். அவரது செலவுகள் மற்றும் தேவைகளின் முழுச் சுமையும் இயக்கத்தின் மீதே இருந்தது. அவர் வளர்ந்து இளைஞராகித் திருமணம் செய்து கொண்டபோது, லாகூர் செய்தித்தாள் அலுவலகத்தில் எழுத்தராக சேர்ந்தார். பின்னர், காதியானில் உள்ள பத்ர் அலுவலகத்திற்கு வந்து பன்னிரண்டு ரூபாய் மாதச் சம்பளத்தில் ஊழியராகச் சேர்ந்தார்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுக்கு அல்லாஹ் முதலாவது ஆண் குழந்தையாக நஸீர் அஹ்மத்-ஐ வழங்கியபோது இக்குழந்தை பின்னர் வஃபாத்தாகிவிட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு மர்ஹூம் நஸீர் அஹ்மதைக் கவனித்துக் கொள்வதற்காக ஒரு வளர்ப்புத் தாயின் தேவை ஏற்பட்டது. இத்தகையதொரு சூழலில்,நீ! உனது மனைவியின் சேவையை முன்வைக்கலாம் என்று கவனமூட்டினேன்; இது இன்பமும், நன்மையும் ஒன்றாகக் கிடைக்கும் வாய்ப்பாகும்; இது உனக்கு இருமடங்கு பயன் தரும் என்று நான் ஷேக் மஹ்மூத் நஸீபிடம் கூறினேன். எனது ஆலோசனையை ஷேக் சாஹிப் மதிப்புடனும், மரியாதையுடனும் ஏற்றுக் கொண்டார்; அவருக்கும் அந்த வாய்ப்பு கிடைத்தது. அவரது மனைவி, சாஹிப்ஸாதா நஸீர் அஹ்மது சாஹிபிற்குப் பாலூட்டும் பணியில் நியமிக்கப்பட்டார்.

இந்த விஷயத்தில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பேச்சுவாக்கில், ஷேக் மஹ்மூத் நஸீப் சாஹிபிற்கு என்ன சம்பளம் கிடைக்கிறது? என்று விசாரித்தார்கள். அவருக்கு வெறும் பன்னிரண்டு ரூபாய் மட்டுமே கிடைக்கிறது என்பதை அறிந்தபோது, இவ்வளவு குறைவான சம்பளத்தில் வாழ்வாதாரத்தை நடத்துவது கடினமாக இருக்கும் என்று அன்னார் (அலை) உணர்ந்தார்கள்.

அது மிகவும் விலைவாசி குறைவாக இருந்த காலகட்டமாகவும், பொருட்கள் எளிதாகக் கிடைத்த நாட்களாகவும் இருந்தபோதிலும், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் இதனை உணர்ந்து, ஒரு நாள் கடந்து செல்லும்போது அவரது அறையில் இருபது அல்லது இருபத்தைந்து ரூபாய் அடங்கிய ஒரு சிறிய பொட்டலத்தை வீசிவிட்டுச் சென்றார்கள். இந்தப் பணம் எங்கிருந்து வந்தது? என்று தெரியாமல் ஷேக் சாஹிப் யோசித்துக் கொண்டிருந்தார். இறுதியாக, ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள் அவரது நெருக்கடியை உணர்ந்து, அவருக்கு சிரமம் இன்றி நிம்மதியாக வாழ்வாதாரத்தை நடத்திக் கொள்வதற்காகவே இதனை வைத்துள்ளார்கள் என்பது தெரியவந்தது. அதன்படி, அவர் அந்தப் பணத்தை நகைகள் செய்வதற்குப் பயன்படுத்தினார்; ஏனெனில், அந்த நேரத்தில் அவரது உணவுக்கான தேவைகள் ஹஸ்ரத் சாஹிபின் விசாலமான உணவுக் கூடத்திலிருந்தே நிறைவேற்றப்பட்டு வந்தன. (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ சாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 2, பக்கம் 294- 295)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களே கூறுகிறார்கள்: யாசகரை ஒருபோதும் வெறுங்கையோடு திருப்பி அனுப்புவதில்லை என்ற பழக்கம் அன்னாரிடம் இருந்ததைப் போலவே, சில மனிதர்களின் தேவைகளை உணர்ந்து அவர்கள் கேட்பதற்கு முன்னரே அவர்களுக்கு உதவுவதும் அன்னாரது நடைமுறைகளில் ஒன்றாக இருந்தது.

1904 ஆம் ஆண்டு அக்டோபர் 28 ஆம் தேதியன்று நடந்த ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகிறார்கள்; ஃபஜ்ர் தொழுகைக்கு முன்னதாக அன்னார் (அலை), ஹிஜ்ரத் செய்து

வந்த ஒரு கலப்பற்ற நபரிடம் சுமார் எட்டு அல்லது பத்து ரூபாய் தொகையை வழங்கி, இது குளிர்காலம், உங்களுக்கு ஆடைகள் தேவைப்படும் என்று கூறினார்கள். அந்த முஹாஜிர் தரப்பிலிருந்து எவ்விதக் கோரிக்கையும் இருக்கவில்லை; ஹஸ்ரத் (அலை) அவர்களே தாமாகவே அவரது தேவையை உணர்ந்து இந்தத் தொகையை வழங்கினார்கள். இத்தகைய சம்பவம் ஏதோ ஒரு முறை மட்டும் நடந்ததல்ல; மாறாகப் பலமுறை இவ்வாறு நிகழ்ந்துள்ளது. மறைமுகமான முறையில் தேவையுடைய மக்களிடம் இவ்வாறு நன்னடத்தையுடன் நடந்து கொள்வதை அன்னார் (அலை) வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்; இதில் நண்பன், எதிரி, இந்து, முஸ்லிம் என்ற எந்தவொரு பாகுபாடும் இருந்ததில்லை. (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 2, பக்கம் 288- 289)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பழக்கத்தில் இன்னொரு விஷயமும் சேர்ந்திருந்தது; அது என்னவென்றால், சில நேரங்களில் அன்னார் (அலை) ஒருவரது தேவையையும் அவசியத்தையும் உணர்ந்து, அவரது கோரிக்கைக்காகவோ அல்லது அவர் அதனை வெளிப்படுத்துவதற்காகவோ காத்திருக்காமல், தாமாகவே முன்வந்து கொடுத்துவிடுவார்கள். இது குறித்து, காஷ்மீர் மாநிலத்தின் ஓய்வுபெற்ற ஆய்வாளரும் (பென்ஷனர் இன்ஸ்பெக்டர்), ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சமூகத்திற்கு நீண்ட காலமாக வந்து செல்பவருமான மதிப்பிற்குரிய ஷேக் ஃபதஹ் முஹம்மது சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: நான் எப்போதெல்லாம் ஹஸ்ரத் சாஹிபை சந்திக்க வருகிறேனோ, அப்போதெல்லாம் அன்னார் (அலை) எனது பயணச் செலவை செலுத்துவதற்கு எப்போதும் ஆயத்தமாக இருப்பார்கள். ஆனால் எனக்குத் தேவை இல்லாத காரணத்தால் நான் அதனை ஒருபோதும் வாங்கியதில்லை; ஆயினும், ஹஸ்ரத் அவர்களின் கொடைத்தன்மையின் ஆன்மா எந்தளவுக்கு மகத்தானதாக இருந்தது என்றால், கேட்காமலேயே அன்னார் எப்போதும் கொடுத்துவிடுவார்கள். இந்த நடைமுறை என்னிடம் மட்டும் இருந்ததல்ல; மாறாகப் பெரும்பாலானோருக்கு அன்னார் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். சிரியா மற்றும் அரபு நாடுகளிலிருந்து சில மக்கள் வருவதுண்டு; அவர்கள் தூர தேசங்களிலிருந்து வந்திருக்கிறார்கள் என்பதை ஹுஸூர் (அலை) அவர்கள் அறிந்திருந்த காரணத்தால், சில நேரங்களில் அவர்களுக்கு பயணச்செலவிற்காக பெருந்தொகையை வழங்கி வந்தார்கள். (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 3, பக்கம் 309)

இதேபோல் ஷேக் யஃகூப் அலி சாஹிப் (ரலி) எழுதுகிறார்கள்: பெரும்பாலும் எத்தகைய யாசகர்கள் வருவார்கள் என்றால், அவர்கள் பொதுவாக வாய் திறந்து கேட்க மாட்டார்கள், மாறாக ஒரு சீட்டு எழுதித் தருவார்கள். அவர் ஏதேனும் உதவி கேட்டுள்ளார் என்பது யாருக்கும் தெரியாது; ஆனால், ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள் உள்ளிருந்து அந்த யாசகருக்காக ஏதேனும் அனுப்பும்போதுதான் அது தெரியவரும். அல்லது சில நேரங்களில் உள்ளே செல்லும் சமயத்தில், நீ அமர்ந்திரு, நான் வருகிறேன் என்று கூறிச் செல்வார்கள். சில மனிதர்கள், ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் வருவார்கள் என்ற எண்ணத்தில் அங்கேயே காத்திருப்பார்கள்; அப்போதுதான் அன்னார் அந்த யாசகருக்காக அவர் கோரிய பொருளையோ, ரொக்கப் பணத்தையோ அல்லது ஆடையையோ எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பது தெரியவரும். (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி சாஹிப் (ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 2, பக்கம் 294- 294)

ஹஸ்ரத் முன்ஷி ஸஃபர் அஹ்மத் சாஹிப் (ரலி) கூறுகிறார்கள்: கபூர்தலாவைச் சேர்ந்த மியான் ஜி நிஸாமுத்தீன் அஹ்மதி மிகவும் ஏழை மனிதராக இருந்தார். அவர் நடந்தே காதியானுக்குச் சென்று, இரண்டு அணாக்களை ஹுஸூரிடம் அன்பளிப்பாக சமர்ப்பித்தார். ஹுஸூர் (அலை) அவர்கள் ஜஸாக்குமுல்லாஹ் என்று கூறி அந்த இரண்டு அணாக்களைப் பெற்றுக் கொண்டார்கள். சில நாட்களுக்குப் பிறகு நிஸாமுத்தீன் சாஹிப் விடைபெறத் தொடங்கியபோது, ஹுஸூர் (அலை) அவர்கள், சற்று நில்லுங்கள் என்று கூறினார்கள். அன்னார் (அலை) உள்ளே சென்று ஏழு அல்லது எட்டு ரூபாயை கொண்டு வந்து, மியான் ஜி நிஸாமுத்தீன் அவர்களுக்கு வழங்கினார்கள். (அஸ்ஹாபே அஹ்மது தொகுதி 4, பக்கம் 215)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: முன்ஷி ஸஃபர் அஹ்மத் சாஹிப் கபூர்தலவி (ரலி) அவர்கள் எழுத்துப்பூர்வமாக என்னிடம் எடுத்துரைத்ததாவது; முன்ஷி அலி கோஹர் ஸாஹிப் கபூர்தலாவில் தபால் நிலைய அலுவலகத்தில் ஊழியராக இருந்தார். அவருக்கு இரண்டரை ரூபாய் பென்ஷன் கிடைத்தது. ஓய்வு பெற்ற பிறகு அவரது வாழ்வாதாரம் மிகவும் நெருக்கடியாக மாறியது. அவர் ஜலந்தரில் உள்ள தமது சொந்த இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டார். எங்கு அவரது வீடு இருந்ததோ அங்குச் சென்றுவிட்டார். அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார்; நீ காதியானுக்குச் செல்லும்போது என்னையும் உன்னுடன் அழைத்துச் செல் என்று குறிப்பிட்டிருந்தார்.

அவர் ஒரு கலப்பற்ற அஹ்மதியாக இருந்தார்.

அவர்கள் கூறுகிறார்கள்: அதன்படி, நான் காதியானுக்குச் செல்ல புறப்பட்ட போது, அவரை உடன் அழைத்துச் செல்வதற்காக ஜலந்தர் சென்றேன். அவர் மிகுந்த உபசரிப்பு குணமுடைய மனிதராக இருந்தார். எனக்காக அவர் மிகவும் பிரத்யேகமான உணவுகளைச் சமைக்கச் செய்தார்; அவர் ஏதோ ஒரு பாத்திரத்தை விற்றுத்தான் இந்த விருந்திற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார் என்று பின்னர்தான் எனக்குத் தெரியவந்தது.

ஹுஸூர் (அலை) அவர்கள் மூலமாக தர்பியத் கிடைத்த அந்த ஸஹாபிகளின் நிலை இவ்வாறாக இருந்தது!

அவர்கள் கூறுகிறார்கள்: முன்ஷி அலீ கோஹர் சாஹிபின் டிக்கெட்டை நானே வாங்கிவிட்டேன். அவர் தமது பயணக் கட்டணத்தை வாங்குவதற்கு என்னை வற்புறுத்தத் தொடங்கினார்; அதற்கு நான், இதனை தாங்கள் ஹுஸூர் (அலை) அவர்களின் சமூகத்தில் சமர்ப்பித்து விடுங்கள் என்று கூறினேன். எனக்கு அவரது சூழ்நிலை தெரிந்திருந்தது. பயணச் சீட்டை நான் எனது சொந்தப் பணத்திலிருந்து வாங்கியிருந்தேன்; அவர் மிகவும் வற்புறுத்தியபோது, அப்படியானால் ஆகட்டும்! இந்த ரூபாயை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சமூகத்தில் சமர்ப்பித்து விடுங்கள் என்று நான் கூறினேன். அதன்படி, அவர் இரண்டு ரூபாயை ஹுஸூர் (அலை) அவர்களின் சமூகத்தில் சமர்ப்பித்தார். எட்டு அல்லது பத்து நாட்கள் தங்கியிருந்துவிட்டு, நாங்கள் திரும்புவதற்காக அனுமதி பெறச் சென்றபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் அனுமதி வழங்கினார்கள். மேலும், முன்ஷீ சாஹிபிடம் நீங்கள் சற்று நில்லுங்கள் என்று கூறினார்கள். பின்னர், அன்னார் (அலை) பத்து அல்லது பதினைந்து ரூபாயைக் கொண்டு வந்து முன்ஷி சாஹிபிடம் கொடுத்தார்கள். முன்ஷீ சாஹிப் அழத் தொடங்கினார்கள், ஹுஸூர்! நான் அல்லவா? தங்களுக்குச் சேவை செய்ய வேண்டும், நான் ஹுஸூரிடமிருந்து பெற்றுக் கொள்வதா? என்று கூறினார். அப்போது, ஹுஸூர் (அலை) அவர்கள் என்னை நோக்கி, இவர் உங்களது நண்பர்; நீங்கள் இவருக்குப் புரிய வையுங்கள் என்று கூறினார்கள். பின்னர் நான் புரிய வைத்த பிறகு, இதில் பரக்கத் இருக்கிறது; ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொடுத்ததனை நீ பெற்றுக் கொள் என்று நான் கூறியதன் பேரில் அவர் அதனைப் பெற்றுக் கொண்டார். நாங்கள் புறப்பட்டு வந்தோம். உண்மையில், ஹுஸூர் (அலை) அவர்களுக்கு முன்ஷீ சாஹிபின் சூழ்நிலையைப் பற்றி எவ்வித விபரமும் தெரிந்திருக்கவில்லை. (ஸீரத்துல் மஹ்தி,தொகுதி 2, பாகம் 4, பக்கம் 96 - 97, அறிவிப்பு எண்: 1123)

ஹஸ்ரத் முன்ஷி ஸஃபர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களே எழுதுகிறார்கள்: ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுக்கு தமது தொண்டர்களின் மனமகிழ்ச்சியிலும், அவர்களை அரவணைப்பதிலும் மிகுந்த கவனம் இருந்தது. அதற்காக ஹுஸூர் (அலை) அவர்களே தமது சொந்த விஷயத்தில் அனைத்து வகையான தியாகங்களையும், அர்ப்பணிப்புகளையும் நடைமுறையில் வெளிப்படுத்தி வந்தார்கள். ஒருமுறை அது பெருநாள் தினமாக இருந்தது; எனது தலைப்பாகை தூய்மையாக இருக்கவில்லை. ஏனெனில், நாங்கள் எப்போதெல்லாம் வருகிறோமோ, அப்போது ஒன்றிரண்டு நாட்கள் நேரம் ஒதுக்கி வருவோம்; ஆனால் இங்கு காதியானுக்கு வந்ததும் ஹுஸூர் (அலை) அவர்கள், இங்கே சில நாட்கள் தங்குங்கள் என்று கட்டளையிடுவார்கள். பிறகு எங்களுக்கு வேலைக்குத் திரும்ப வேண்டும் என்ற எண்ணம் கூட வராது; நாங்களும் அங்கேயே தங்கிவிடுவோம். இவ்வாறாக ஒருமுறை நாங்கள் வந்திருந்தபோது பெருநாள் வந்தது; நான் தலையில் கட்டும் தலைப்பாகை துணி ஒன்றை மட்டும்தான் கொண்டு வந்திருந்தேன். அது அழுக்காகிவிட்டது. நான் கடைவீதிக்குச் சென்று புதியதொன்றை வாங்கி வர விரும்பினேன். நான் கடை வீதிக்குச் சென்று கொண்டிருந்தபோது அன்னார் என்னைப் பார்த்து விட்டார்கள். அன்னாருடைய அகப்பார்வையோ இறைவனால் வழங்கப்பட்ட அகப்பார்வையாக இருந்தது. எங்கே செல்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான், இது பெருநாள், எனது தலைப்பாகை துணி அழுக்காக இருக்கிறது; நான் கடை வீதிக்குச் சென்று வாங்கப் போகிறேன் என்று கூறினேன். அதே கணத்தில், அங்கேயே தமது கண்ணிய மிக்க தலைப்பாகையைக் கழற்றி எனக்குக் கொடுத்துவிட்டார்கள்; தமது தலைப்பாகையைக் கழற்றிக் கொடுத்துவிட்டு, இது உங்களுக்குப் பிடித்திருந்தால் நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்; நான் வேறொன்றைக் கட்டிக் கொள்கிறேன் என்று கூறினார்கள். என் மீது காட்டிய அந்த அன்பு மற்றும் பரிவின் தாக்கத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. நான் மிகுந்த மரியாதையுடன் அந்த தலைப்பாகையைப் பெற்றுக் கொண்டேன். அன்னார் (அலை) எவ்விதத் தயக்கமுமின்றி வீட்டுக்குச் சென்று அங்கே பின்னர் வேறொரு தலைப்பாகையைக் கட்டிக் கொண்டு வெளியே வந்தார்கள். (அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 225 - 226)

ஹஸ்ரத் மியான் கைருத்தீன் (ரலி) சாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஒருமுறை நடந்த ஒரு சம்பவம். அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் இன்னும் வாதம் செய்யவில்லை. ஹுஸூர் (அலை) அவர்களின் மூத்த சகோதரருக்குத் திருமணம் நடக்கவிருந்தது. அதற்காக அவர்கள் சில ஆடுகளை கொண்டு வரச் செய்திருந்தார்கள்; அவைகளை நங்கல் பாங்பானாவைச் சேர்ந்த ஒரு மனிதர் மேய்த்து வந்தார். ஒரு நாள் ஹுஸூர் (அலை) அவர்கள் உலாவுவதற்காகச் சென்று கொண்டிருந்தபோது, வழியில் அவர் அந்த ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்; அவருடன் அவரது மகனும் இருந்தான். அந்தப் பையன் வெறும் காலோடு இருந்தான். ஹுஸூர் (அலை) அவர்கள் அவனை நோக்கி, சிறுவனே! நீ வெறும் காலோடு அலைந்து கொண்டிருக்கிறாயே! உனக்கு முட்கள் குத்தவில்லையா? என்று கேட்டார்கள். அதற்கு, ஹுஸூர்! என்னிடம் செருப்பு இல்லை; எனது தந்தை ஏழை, அவரால் வாங்கித் தர முடியாது என்று அவன் கூறினான்.

ஹுஸூர் (அலை) அவர்கள் தமது

காலிலிருந்து ஒரு செருப்பைக் கழற்றி, இதனை அணிந்து பார், சரியாக இருக்கிறதா? என்று கேட்டார்கள். அவனோ, நான் எவ்வாறு தங்களது செருப்பை அணிந்து கொள்வது என்று கூறி மறுத்தான். ஹுஸூர் (அலை) அவர்களோ, அவனை வற்புறுத்தி அணியச் செய்தார்கள். அவன் ஒரு காலில் அணிந்தபோது, உனக்குச் சரியாகப் பொருந்திவிட்டது என்று ஹுஸூர் (அலை) அவர்கள் கூறி, பின்னர் அன்னார் (அலை) மற்றொரு காலின் செருப்பையும் கழற்றி, இதனையும் அணிந்து கொள்! என்று கூறினார்கள். அவன் அதனையும் அணிந்து கொண்டபோது ஹுஸூர் (அலை) அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, ஆகட்டும்! இப்போது சரியாக இருக்கிறது; எனவே நீ இதனைப் பயன்படுத்து என்று கூறினார்கள். இவ்வாறு, அன்னார் (அலை) வெறும் காலோடு வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். இது, ஹுஸூர் (அலை) அவர்கள் அநேகமாக இருபது அல்லது முப்பது வயதுடையவராக இருந்தபோது நடந்த சம்பவமாகும். (ரிவாயத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 380)

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது தலைவரும் பேரருள் புரிந்தவருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, கொடை மற்றும் தாராளத்தன்மையின் இலக்கணமாகத் திகழ்ந்த போதிலும், சில நேரங்களில் ஏதேனும் ஒரு நுட்பம் மற்றும் நலனை முன்னிட்டு, அன்னார் யாசகருக்குக் கொடுப்பதைத் தவிர்த்துக் கொண்டதையும் நாம் காண்கிறோம்.

உதாரணமாக, ஷேக் யஃகூப் அலி ஸாஹிப் (ரலி) அவர்களே இதை எழுதுகிறார்கள்:

பைஅத் (வாங்கப்பட்ட) ஆண்டான 1889 இல் அன்னார் லுதியானாவில் தங்கியிருந்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் அன்னாரிடம் ஒரு யாசகர் வந்து, எனது உறவினர் ஒருவர் இறந்துவிட்டார் என்று குறிப்பிட்டு தன்னிடம் கஃபன் மற்றும் அடக்கம் செய்வதற்கான எவ்வித ஏற்பாடும் இல்லை என்று கூறி, எவ்வளவு சந்தா கிடைத்துள்ளது என்பதைக் காட்டுவதற்காக ஒரு கிண்ணத்தில் சில வெள்ளி மற்றும் செப்பு நாணயங்களை வைத்திருந்தார்; இறந்தவரின் கஃபன் மற்றும் அடக்கச் செலவிற்காக இவ்வாறு கேட்டுக் கேட்டு வாழ்வாதாரம் நடத்துவதாகவும், இன்னும் தேவை இருப்பதாகவும் கூறினார். மிகவும் கலப்பற்றவரும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவருமான மதிப்பிற்குரிய காஸீ காஜா அலி சாஹிப் (ரலி) அவர்களிடம், காஸீ சாஹிப்! நீங்கள் இவருடன் சென்று கஃபனுக்கான ஏற்பாடு செய்து கொடுங்கள்! என்று அன்னார் (அலை) கூறினார்கள்.

மேலும், கஃபனுக்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கூறுகிறார் அல்லவா? ஆகவே, கஃபனுக்கான பொருட்கள் எதுவாக இருந்தாலும் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்து கொடுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இவ்வாறான பழக்கம் பொதுவாக இருந்ததில்லை; வழக்கமாக யார் எதைக் கேட்டாலும் கொடுத்துவிடுவார்கள். ஆனால், இங்கு அந்த வழக்கத்திற்கு மாறான ஒரு புதிய விஷயத்தை நாங்கள் கண்டோம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

பொதுவாக, எதனைப் பொருத்தமாக கருதுகிறார்களோ அதனை வழங்கி விடுவார்கள். இந்த உத்தரவைக் கேட்டு தொண்டர்கள் வியப்படைந்தனர். காஸீ சாஹிப் அவர்களும், நான் என்ன கொடுக்க வேண்டும் என்று கேட்காமல், உடனே அந்த நபருடன் புறப்பட்டுச் சென்று, சகோதரரே! நான் நேரில் வந்து அனைத்து ஏற்பாடுகளையும் செய்கிறேன் என்று கூறினார். அந்த யாசகர் காஸீ சாஹிபை அழைத்துக் கொண்டு விடைபெற்றார். சற்று நேரத்திற்குப் பிறகு காஸீ சாஹிப் அவர்கள் சிரித்துக் கொண்டே திரும்பி வந்து, ஹஸ்ரத்! அவன் ஒரு மிகப்பெரிய ஏமாற்றுக்காரன் என்று கூறினார். வழியில் அவன் என்னிடம், அல்லாஹ்விற்காக நீங்கள் நேரில் வர வேண்டாம்; எதனைக் கொடுக்க வேண்டுமோ அதனைக் கொடுத்துவிடுங்கள் என்று கெஞ்சவும், முகஸ்துதி செய்யவும் தொடங்கினான். அதற்கு, எனக்கு நேரில் செல்லத்தான் கட்டளை இடப்பட்டுள்ளது. உன்னிடம் என்ன இருக்கிறதோ அதைக் கொடு; என்ன செலவு ஏற்படுகிறதோ அதனை நான் செய்கிறேன் என்று நான் கூறினேன். இறுதியாக, நான் எதற்கும் அசைந்து கொடுக்காமல் இருப்பதைக் கண்ட அவன், கைகளைக் கூப்பி வெட்கத்துடன், யாரும் இறக்கவும் இல்லை; கஃபன் மற்றும் அடக்கத்திற்கான தேவையும் இல்லை; இது எனது பிழைப்பு. இப்போது என்னை இழிவுபடுத்தி விடாதீர்கள். நீங்கள் திரும்பிச் செல்லுங்கள், என்னை விட்டுவிடுங்கள்; இனி நான் இந்த வேலையைச் செய்ய மாட்டேன் என்று கூறினான் என்றார்கள்.'

ஆக, யாசகர்களின் சிலரின் நிலையும் இவ்வாறாக இருந்தது. காஸீ சாஹிப் இந்தச் சம்பவத்தை எடுத்துரைத்தபோது, அதனைக் கேட்டு இயல்பாகவே சிரிப்பு வந்தது; ஆனால், அன்னாருடைய இறை நம்பிக்கை எனும் அகப்பார்வையும் நல்லொழுக்கமும் வியக்கத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்தின; ஏனெனில் அன்னார் (அலை) நல்லெண்ணம் கொண்டு அந்த நபருக்கு எவ்வித மறுப்பும் கூறவில்லை. ஆனால் அவன் சீர்திருத்தம் பெறும் வகையிலான ஒரு வழிமுறையைக் கையாண்டார்கள். மேலும், தேவையற்ற ஓரிடத்தில் அன்னாருக்கு செலவு செய்ய வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 2, பக்கம் 287 - 288)

இந்தச் சம்பவம் அல்லது இது போன்ற மற்றொரு சம்பவத்தை ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே எடுத்துரைத்துள்ளார்கள்:

லூதியானாவில் ஒரு யாசகர் என்னிடம் வந்து, ஒரு மனிதர் இறந்துவிட்டார்; அவருக்குக் கஃபனுக்கான பொருட்களை ஏற்பாடு செய்ய வேண்டும்; நான்கு அணாக்கள் பற்றாக்குறையாக உள்ளது என்று தெரிவித்தார். அப்போது ஒரு மனிதர், முதலில் அந்த ஜனாஸா எங்குள்ளது என்று பார்க்க வேண்டும்; அதற்குப் பிறகு இவருக்கு முழுமையாக உதவ வேண்டும் என்று கூறினார். அதன்படி, அந்த நபர் அவருடன் சென்றபோது, சிறிது தூரம் சென்றதும் அந்த யாசகர் ஓடிவிட்டார்; ஏனெனில், அவர் எடுத்துக் கூறிய கதைகள் அனைத்தும் முற்றிலும் பொய்யானவையாக இருந்தன. (மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 15. 2022-ம் ஆண்டு பதிப்பு)

இதேபோல் ஒருமுறை எங்கிருந்தோ ஒரு கடிதம் வந்தது; அதில், நாங்கள் ஒரு பள்ளிவாசல் கட்ட விரும்புகிறோம்.பரக்கத்திற்காக தங்களிடமிருந்தும் சந்தா வேண்டுகிறோம் (என்று எழுதப்பட்டிருந்தது). அதற்கு ஹஸ்ரத் அக்தஸ் அவர்கள், நம்மால் கொடுக்க முடியும். இது ஒன்றும் பெரிய விஷயமல்ல; ஆனால், நம்மிடமே ஏற்கனவே பல பெரிய, முக்கியமான அவசியமான, இயக்கத்தின் செலவினங்கள் இருக்கும்போது,அவற்றுக்கு மத்தியில் இத்தகைய செலவுகளில் பங்கெடுப்பது வீண்விரயமாகத் தோன்றும் நிலையில், நாம் எவ்வாறு இதில் பங்கெடுக்க முடியும்? இங்கே இறைவன் உருவாக்கிக் கொண்டிருக்கும் இந்த பள்ளிவாசல்தான் அக்ஸா பள்ளிவாசல் ஆகும்; அதுவே அனைத்தையும் விட முதன்மையானதாகும். இப்போது மக்கள் இதற்காகப் பணத்தை அனுப்பி நற்கூலியில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். நமது பேச்சை ஏற்று நடப்பவரே நமது நண்பராவார். தமது பேச்சை முதன்மையாக வைப்பவர் அல்ல என்று கூறினார்கள்.

பின்னர் அன்னார் ஓர் உதாரணத்தைக் கூறினார்கள்:

ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீஃபா அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, நாங்கள் ஒரு பள்ளிவாசல் கட்டப் போகிறோம். தாங்களும் இதில் ஏதேனும் சந்தா கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள், தம்மால் கொடுக்க முடியாது; இந்நேரத்தில் தம்மால் இதில் எதுவும் கொடுக்க இயலாது என்று காரணத்தை கூறினார்கள். உண்மையில் அவர்கள் நினைத்திருந்தால் எவ்வளவோ கொடுத்திருக்க முடியும்! அந்த மனிதரோ, நாங்கள் உங்களிடமிருந்து அதிகமாக எதையும் கேட்கவில்லை; பரக்கத்திற்காக மட்டும் கொடுங்கள் என்று கேட்டார். இறுதியாக, (இமாம் அபூ ஹனீஃபா) அவர்கள் ஒரு துவானிக்கு நிகரான (அதாவது, இரண்டு அணா நாணயத்திற்கு நிகரான) ஒரு சிறிய நாணயத்தைக் கொடுத்தார்கள். மாலை நேரத்தில் அந்த மனிதர் அந்தத் துவானியை எடுத்துக் கொண்டு திரும்பி வந்து, ஹுஸூர்! இது செல்லாத நாணயமாகி விட்டதே! என்று கூறினார். இதைக் கேட்டு இமாம் அபூ ஹனீஃபா அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, மிக நன்று! உண்மையில் நீங்கள் பள்ளிவாசல் கட்டும் விதம் இருக்கிறதே! அதற்காக, உமக்கு ஏதேனும் கொடுக்க வேண்டும்? என்ற எண்ணம் என் உள்ளத்தில் இருக்கவில்லை. பள்ளிவாசல்கள் பல உள்ளன. எனக்கு இதில் வீண்விரயம் இருப்பதாகவே தோன்றுகிறது. தொழுகைகளை நீங்களோ தொழுவதில்லை; ஆனால், பிறருக்குக் காட்டுவதற்காகப் பள்ளிவாசல்களைக் கட்டுகிறீர்கள் என்று கூறினார்கள்.

குழந்தைகளுக்கும் கூட, குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்ப அன்னார் வழங்குபவர்களாக இருந்தார்கள். உதாரணமாக, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: காதியானைச் சேர்ந்த ஹகீம் முஹம்மது உமர் சாஹிபின் மனைவியான அஸீஸா பேகமின் தாயாரும், வசிய்யத் செய்தவருமான பீபி ரானி அவர்கள் கூறியதென்னவென்றால்; நான் 1901 இல் கடிதம் மூலமாக பைஅத் செய்திருந்தேன். அதன்படி, காதியானைச் சேர்ந்த ஹகீம் முஹம்மது உமர் சாஹிபின் மனைவியான எனது மகள் அஸீஸா பேகம் காதியானில் இருந்தாள். இதன் காரணமாக எனக்கும் 1902 இல் காதியானுக்கு வர வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. என்னுடன் எனது சிறிய மகளும் இருந்தாள். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் காலையில் ஏதேனும் ஒரு நேரத்தில் உலாவுவதற்காக வெளியே தோட்டத்தை நோக்கிச் செல்லும்போது, நானும் பெரும்பாலான நேரங்களில் உடன் செல்வதுண்டு. வயது முதிர்வின் காரணமாகவும், காலம் கடந்துவிட்டதாலும் பல விபரங்கள் நினைவில் இல்லை. ஆனால், ஒரு விஷயம் எனக்கு நினைவிருக்கிறது. ஒருமுறை காலை நேரத்தில் ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் உணவு உட்கொண்டிருந்தபோது நானும் அங்கு வந்தேன்.எனது சிறிய மகள் அழத் தொடங்கினாள். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள், என்ன காரணம்? என்று விசாரித்தார்கள்; அதற்கு, இவள் ரொட்டி கேட்கிறாள் என்று கூறப்பட்டது. அன்னாரும் அவளுக்காக ரொட்டியை வரவழைத்துக் கொடுத்தார்கள்; ஆயினும், அவள் அழுகையை நிறுத்தவில்லை. தொடர்ந்து அழுது கொண்டே இருந்தாள். ஹுஸூர் (அலை) அவர்கள் மீண்டும் கேட்டபோது, ஹுஸூர் அவர்கள் எதனை உண்கிறார்களோ, அந்த ரொட்டியைத்தான் இவள் கேட்கிறாள் என்று கூறப்பட்டது. அப்போது ஹுஸூர் அவர்கள், தாம் சாப்பிட்டுக் கொண்டிருந்த அந்த ரொட்டியைக் கொடுத்துவிட்டார்கள்; அவளும் கொஞ்சமாக இருந்த அந்த ரொட்டியைப் பெற்றுக் கொண்டு, அழுகையை நிறுத்திவிட்டு அதனை உண்ணத் தொடங்கினாள்.( ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 2, பாகம் 5, பக்கம் 188, அறிவிப்பு எண்: 1281)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் (பிறரிடம்) வேலை வாங்கும்போது, வேலை செய்பவர்களின் வசதியையும் கருத்தில் கொள்பவர்களாக இருந்தார்கள். டாக்டர் இத்தர் தீன் சாஹிப் கூறுகிறார்கள்:

அப்போது குழந்தையாக இருந்த ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்ஹாக் சாஹிப் (ரலி) அவர்கள் எங்கோ வெளியே சென்றுவிட்டார்கள். ஹஸ்ரத்

மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இத்தகவல் கிடைத்ததும், அன்னார் (அலை) கவலையடைந்து உடனடியாக, தமது ஊழியரை போர்டிங் ஹவுஸிற்கு அனுப்பி, மிக வேகமாக ஓடக்கூடிய விடுதி மாணவர்களை அழைத்து வரச் சொன்னார்கள். அங்கு படித்துக் கொண்டிருந்த மாணவர்களை வரவழைத்தார்கள். அதன்படி, அந்நேரத்தில் விடுதியின் கண்காணிப்பாளராக இருந்த மதிப்பிற்குரிய சகோதரர் அப்துர் ரஹீம் சாஹிப் நவ்முஸ்லிம் அவர்கள், என்னையும், மூன்று நான்கு சிறுவர்களையும் அனுப்பி வைத்தார்கள்; மேலும், அந்தக் குழுவுக்கு தலைவராக என்னை நியமித்தார்கள். நாங்கள் ஹுஸூரிடம் சென்றபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் மிகுந்த கனிவோடு, உங்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுவிட்டது; நான் உங்களை அழைத்துள்ளேன்; ஒரு பணிக்காக நீங்கள் செல்ல வேண்டியிருக்கும். உங்களது தேடுதலில் தாமதம் ஏற்படலாம், உங்களுக்கு பசியும் எடுக்கலாம் என்று கூறி இதற்காக அன்னார் (அலை) எனக்குப் பல ரொட்டிகளைக் கொடுத்து, இவை ரொட்டிகள் ஆகும் என்றார்கள். அத்துடன், சமைக்கப்பட்டிருந்த பருப்புக் குழம்பையும் ஹுஸூர் (அலை) அவர்களே கொண்டு வந்து எங்களுக்கு கொடுத்தார்கள். ஏனெனில் நாங்கள் தேடிச் செல்ல இருந்தோம்; வழியில் தேவைப்படலாம் என்பதால்.

எவ்வாறிருப்பினும், நாங்கள் புறப்படுவதற்கு ஆயத்தமானபோது, மதிப்பிற்குரிய ஷேக் யஃகூப் அலீ சாஹிப் இர்ஃபானி ஸாஹிப் (ரலி) அவர்கள், ஜனாப் மீர் சாஹிபை அழைத்துக் கொண்டு அதே கணத்தில் அங்கு வந்து சேர்ந்தார்கள்; அவர் கிடைத்துவிட்ட காரணத்தால் நாங்கள் செல்லவில்லை. இருப்பினும், ஹுஸூர் (அலை) அவர்கள் தமது தொண்டர்களிடம் கொண்டிருந்த அந்த பரிவு இதன் மூலம் வெளிப்படுகிறது. (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 3, பாகம் 3, பக்கம் 346, அறிவிப்பாளர்: ஹஸ்ரத் டாக்டர் அத்ருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள்)

காதியானை அடுத்துள்ள காதிராபாத் கிராமத்தில் வசித்து வந்த பாகோ சாஹிபின் மகனான ஹஸ்ரத் முஹம்மது தீன் சாஹிப் அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்: பலமுறை ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் தமது வீட்டிலிருந்து உணவு போன்றவற்றை உடன் எடுத்துக் கொண்டு வந்து, எங்களது கிராமத்து பள்ளிவாசலில் வைத்து உண்பார்கள்; மேலும் எங்களுக்கும் அதனை வழங்குவார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 2, பக்கம் 378, அறிவிப்பாளர்: ஹஸ்ரத் முஹம்மதீ (முஹம்மத் தீன்) ஸாஹிப் (ரலி) அவர்கள்)

மனைவியின் கடனையும் திருப்பிச் செலுத்துவது அவசியமாகும்.

கடந்த குத்பாவில் நான் ஒரு சம்பவத்தை எடுத்துரைத்திருந்தேன்: லங்கரின் செலவு அதிகரித்துவிட்டபோது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் நகைகளை விற்று அந்தச் செலவை நிறைவு செய்தார்கள் என்று. இது குறித்து கடந்த வாரம் என்னிடம் ஒருவர் கேள்வி எழுப்பினார்; அது என்னவென்றால், இதன் பொருள், தேவை ஏற்படும் பட்சத்தில் மனைவியின் ஆபரணங்கள் கணவனின் பயன்பாட்டிற்கு வரலாமா? அதனைச் செலவிடலாமா? என்பதுதான் அக்கேள்வி. எனவே இது குறித்து தெளிவுபடுத்த வேண்டியது என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் (அவ்வாறு செய்யும்போது) ஒரு கடனாகவே பெற்று வந்தார்கள். மேலும் அதனைத் திரும்பவும் செலுத்தி வந்தார்கள்.

இது குறித்து மற்றோர் அறிவிப்பும் உள்ளது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்: ஹஸ்ரத் ஹாமித் அலி சாஹிபின் மனைவியான ரஸூல் பீபி சாஹிபா அவர்கள் எடுத்துரைத்ததாவது; பஞ்சம் ஏற்பட்டபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் அவர்களிடம் பணம் கடனாகப் பெற்றார்கள்.

முந்தைய உதாரணத்திலும் கூட கடன் அல்லது அடமானம் பற்றிய விஷயம்தான் இருந்தது. அந்த அடமானம் மீட்கப்பட்ட போது, ஹுஸூர் அவர்களே அதற்கான தொகையைச் செலுத்தியிருந்தார்கள்.

எவ்வாறிருப்பினும், அவர்கள் கூறுகிறார்கள்: பணத்தைக் கடனாகப் பெற்று, கோதுமை வாங்கி வீட்டுச் செலவை நிறைவு செய்தார்கள்; அதேபோல் லங்கரின் செலவையும் நிறைவு செய்தார்கள். இது வீட்டுச் செலவிற்காக மட்டும் இருக்கவில்லை; ஏனெனில், அன்னாரது வீட்டிலிருந்தே லங்கருக்காகப் பெருமளவு உணவுகள் சமைக்கப்பட்டு வந்தன. அதன் பின்னர், அன்னார் சௌத்ரி ருஸ்தம் அலி சாஹிபிடமிருந்து ஹாஃபிஸ் ஹாமித் அலி சாஹிப் மூலமாக ஐநூறு ரூபாயும், சில நெய் டப்பாக்களையும் வரவழைத்தார்கள். பணம் வந்ததும், ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் அவர்களின் கடனை அன்னார் திருப்பிச் செலுத்திவிட்டார்கள்.'

அவர்கள் கூறுகிறார்கள்: ஹாஃபிஸ் சாஹிப் (ரலி) அவர்கள் பணப் பைகளை மூட்டை மூட்டையாகக் கொண்டு வருவதை நான் பலமுறை பார்த்திருக்கிறேன்; அந்நாட்களில் பஞ்சம் ஏற்பட்டிருந்ததால் தேவை இருந்தது. அவைகளைப் பாதுகாக்கும் பணியினை இரவில் நான் செய்ய வேண்டியிருந்தது; அவை மக்களின் தரப்பிலிருந்து வந்த கடனாகவும் உதவியாகவும் இருந்தன. (ஸீரத்துல் மஹ்தி, தொகுதி 2, பாகம் 4, பக்கம் 117, அறிவிப்பு எண்: 1145)

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் அம்மா ஜானாக இருந்தாலும் சரி! அல்லது வேறு யாரிடமிருந்து கடனாகப் பெற்றாலும் சரி! அன்னார் (அலை) அதனைத் திரும்பச் செலுத்தி வந்தார்கள்.

ஹஸ்ரத் பாபு குலாம் முஹம்மது சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: காதியானில் சில நேரங்களில் கிராமத்துப் பெண்மணிகள் அவர்களின் கை முழுக்க மாட்டுச் சாணம் இருக்கும்; ஆடைகளும் அழுக்காக இருக்கும் - அத்தகையவர்கள் ஹுஸூரின் சமூகத்தில் ஆ ஜ ரா கி, மிர்ஸா ஜி! சிறுமி நோய்வாய்ப்பட்டுவிட்டாள்; அவளுக்கு நினைவு திரும்பவில்லை; கடுமையான காய்ச்சல் உள்ளது என்று கூறுவார்கள். பின்னர் தங்களது கைகளை நோக்கி சைகை செய்து, பாருங்கள்! நாங்கள் கைகளைக் கூடக் கழுவாமல் வந்துவிட்டோம் என்பார்கள். ஒருமுறை நடந்த சம்பவம்; ஒரு பெண்மணி, அவளது கைகள் முழுக்க சாணமும் அழுக்கும் இருந்தன. அவள் தம் வேலையைச் செய்து கொண்டிருந்தபோது ஹுஸூரிடம் வந்திருப்பாள். தனது மகள் நோய்வாய்ப்பட்டுள்ளாள்; கடுமையான காய்ச்சல் உள்ளது; முற்றிலும் நினைவின்றி இருக்கிறாள் என்று வேண்டினாள். அன்னார் (அலை), நீ ஏதேனும் பாத்திரம் கொண்டு வந்துள்ளாயா? என்று கேட்டார்கள். அவள் சாணம் படிந்த கைகளோடு ஒரு மண் கிண்ணத்தை ஹுஸூரிடம் எடுத்து வைத்தாள். ஹுஸூர் (அலை) அவர்கள் அந்தக் கிண்ணத்தைப் பெற்று, அதனை கேவ்ரா நீரினால் நிரப்பினார்கள். மேலும் சுமார் ஐந்து ரத்தி (ஒரு சிறிய அளவு) கஸ்தூரியைக் கொடுத்து, இரண்டு முறை அரை கிண்ணம் வீதம் இந்த மருந்தைக் கொடுத்துவிடு! என்று கூறினார்கள். மேலும், சிறுமியின் நிலை எவ்வாறு உள்ளது? என்பதை எனக்குத் தெரியப்படுத்து என்றும் கூறினார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 249, அறிவிப்பாளர்: ஹஸ்ரத் பாபூ குலாம் முஹம்மது ஸாஹிப் (ரலி) அவர்கள்)

ஏழைகளிடமும் கூட இத்தகைய மகத்தான நன்னடத்தையையும் கொடைத்தன்மையையும் அன்னார் (அலை) வெளிப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் ஷேக் மஹ்மூத் நஸீப் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை எனக்கு ஒரு தேவை ஏற்பட்டபோது, நான் ஹஸ்ரத் சாஹிபிடம் பத்து ரூபாய் கடனாக அனுப்பி வைக்குமாறு எழுதினேன்; நான் அதனை இரண்டு தவணைகளாகத் திருப்பிச் செலுத்திவிடுகிறேன் என்றும் குறிப்பிட்டிருந்தேன். அன்னார் அதனை அனுப்பி வைத்து விட்டார்கள். (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 5, பக்கம் 446, அறிவிப்பாளர்: ஹஸ்ரத் ஷேக் முஹம்மது நஸீப் ஸாஹிப் (ரலி) அவர்கள்)

**மேலும் எவ்வாறிருப்பினும், இதுவோ அன்னாரின் வழக்கமாக இருந்தது. அதாவது அன்னார் (அலை) ஒருபோதும் மறுப்பு தெரிவிப்பது கிடையாது.** மேலும், அன்னார் (அலை) அதனைத் திரும்பக் கேட்பதும் இல்லை என்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். மாறாக, யாரேனும் அதனைத் திரும்பக் கொடுத்தால், அவரிடம், இல்லை, எமது செல்வமும் உங்களது செல்வமும் ஒன்றுதான்; நீங்கள் உங்களிடமே இதை வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறுவார்கள். இதுவே அன்னாரது பழக்கமாக இருந்தது. (ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலீ ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்களின் நூல், ஸீரத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், பாகம் 3, பக்கம் 307)

உணவில் பரக்கத் ஏற்பட்ட ஒரு சம்பவமும் காணக் கிடைக்கிறது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்:

மியான் அப்துல்லாஹ் சாஹிப் சனோரி (ரலி) அவர்கள் கூறினார்கள்; ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சில விருந்தினர்களுக்கு விருந்தளிக்க ஏற்பாடு செய்து, அவர்களுக்காக வீட்டில் உணவு சமைக்கச் செய்தார்கள். ஆனால், சரியாக உணவு உண்ணும் நேரம் வந்தபோது, அதே அளவிற்கு இன்னும் சில விருந்தினர்கள் வந்து சேர்ந்தனர்; மஸ்ஜித் முபாரக் விருந்தினர்களால் நிறைந்துவிட்டது. அது ஒரு சிறிய பள்ளிவாசலாக இருந்தது. ஹுஸூர் (அலை) அவர்கள் உள்ளே ஆள் அனுப்பி, இன்னும் பல விருந்தினர்கள் வந்துவிட்டார்கள்; உணவை அதிகமாக அனுப்பி வையுங்கள் என்று கூறினார்கள்.

அன்னாருடைய உணவு விரிப்பிற்கு ஒருவர் வந்த பிறகு, சிலர் மட்டும் உண்பதும் மற்றவர்களுக்கு அன்னார் (அலை) கொடுக்காமல் இருப்பதும் சாத்தியமில்லாத ஒன்றாகும். இது அன்னாரது இயல்புக்கு மாறானதாகும்; அன்னாரது கொடைத்தன்மைக்கு எதிரானதாகும். எப்படியும் அன்னார் (அலை) அனைவருக்கும் உணவு வழங்கியே தீருவார்கள்.

இதன் காரணமாக, ஹஸ்ரத் பீபி சாஹிபா அதாவது, ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸாஹிபை உள்ளே அழைத்து, உணவு மிகவும் கொஞ்சமாகவே உள்ளது. தாங்கள் முதலில் குறிப்பிட்டிருந்த அந்தச் சில விருந்தினர்களுக்காக மட்டும்தான் இது சமைக்கப்பட்டது; மற்ற உணவுகளை ஏதோ ஒருவாறு சமாளித்து ஏற்பாடு செய்துவிடலாம். ஆனால் ஸர்தா சோறு (இனிப்புச் சோறு) மிகக் குறைவாக உள்ளது. அதற்கு என்ன செய்வது என்று கேட்டார்கள். பின்னர் அம்மா ஜான் அவர்களே தாமாக முன்வந்து, நான் ஸர்தா சோறை அனுப்பி வைக்காமல் மற்ற உணவுகளை (மட்டும்) அனுப்புகிறேன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள், இல்லை, இது முறையல்ல; நீ அந்த ஸர்தா சோறு பாத்திரத்தை என்னிடம் கொண்டு வா என்று கூறினார்கள். அதன்படி, ஹுஸூர் (அலை) அவர்கள் அந்தப் பாத்திரத்தின் மீது ஒரு கைக்குட்டையைப் போட்டார்கள்; பின்னர் அந்தக் கைக்குட்டையின் கீழாகத் தமது கையை நுழைத்து, தமது விரல்களை ஸர்தா சோறுக்குள் வைத்தார்கள். அதன் பிறகு, இப்போது அனைவருக்குமான உணவை எடுங்கள்; அல்லாஹ் பரக்கத் செய்வான் என்று கூறினார்கள். அதன்படியே, மியான் அப்துல்லாஹ் சாஹிப் கூறுகிறார்கள்:

ஸர்தா (எனும் இனிப்பு) சாதம் அனைவருக்கும் வழங்கப்பட்டது; அனைவரும் அதனை உட்கொண்டனர்; அதற்குப் பிறகும் கூட அதில் மீதமிருந்தது. மியான் அப்துல்லாஹ் சாஹிப் அறிவிக்கிறார்கள்: வீட்டில் நடந்த இந்த

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்....

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 20 - 27 AUG 2026 Issue No. 34& 35

ACT. MANAGER
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) **அவர்களின்**

## ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் - 2013

**(அறிக்கை அப்துல் மஜீத் ஸாஹிப் தாஹிர்)**

**அக்டோபர் 19, 2013 சனிக்கிழமை**

**ஆமீன் நிகழ்ச்சி**

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) மஸ்ஜித் பைத்துல் ஹுதா'விற்கு வருகை தந்தார்கள்; மேலும், ஆமீன் நிகழ்ச்சியை நடத்தினார்கள். ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கீழ்கண்ட சிறுவர், சிறுமிகளை திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை ஓதச் செய்து, இறுதியில் துஆ செய்தார்கள். இவ்வாறு நற்பேறு பெற்ற அந்த சிறுவர், சிறுமிகளுக்கு இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் பாக்கியம் கிடைத்தது:

அஸீஸம் பிலால் ஹஸன், தாஹா அஹ்மத், ராவீல் சௌத்ரி, இம்ரான் அஹ்மத், ஷெஹ்ஸாத் அஹ்மத், ஃபாரான் அஹ்மத், ஆலி ஷான், ஸய்யிது முஜ்தபா ஷா, ஜலீலுர் ரஹ்மான், Rabeet நிஸார், ஸீஷான் ஷாஹித்.

அஸீஸா ஷஃபீஃகுர் ரஹ்மான், ஸபீஹுர் ரஹ்மான், வர்தா அஹ்மத், ஆயிஷா சௌத்ரி, ஷாஃயிஸ்தா மஹ்மூத், நமூத் உஸ் ஸஹர், மரியம் சிந்தூ, தோஹா தாரிக், ஷனா தாஜ், நாதியா மரியம், தாருல் ரஹ்மத், ஸமாவியா நுஸ்ரத், ஷஹ்னாஸ் ஜமீர்.

இதன் பிறகு, ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) இரவு 9 மணிக்கு மஃக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளைச் சேர்த்துத் தொழுகை நடத்தினார்கள். தொழுகைக்குப் பிறகு, ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தங்களின் இல்லத்திற்கு திரும்பினார்கள்.

**20 அக்டோபர் ஞாயிற்றுக்கிழமை 2013**

ஹுஸுர் அன்வர் (அய்யதல்லாஹ்) காலை 5:10 மணிக்கு மஸ்ஜித் பைத்துல் ஹுதாவுக்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகைக்குப் பிறகு, ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது இல்லத்திற்குத் திரும்பினார்கள்.

காலையில், ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அலுவலகத் தபால்கள் மற்றும் அறிக்கைகளைப் பார்வையிட்டு வழிகாட்டுதல்களை வழங்கினார்கள்.

**தனிப்பட்ட மற்றும் குடும்ப சந்திப்புகள்**

நிகழ்ச்சி நிரலின்படி, காலை 11 மணிக்கு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) தமது அலுவலகத்திற்கு வருகை தந்தார்கள்; மேலும், குடும்ப சந்திப்புகள் துவங்கியது. இன்றைய காலையின் இந்த அமர்வில், மொத்தம் 48 குடும்பங்களைச் சேர்ந்த 179 உறுப்பினர்கள் தமது அன்பிற்குரிய எஜமானரைச் சந்திக்கும் நற்பேறு பெற்றனர். சந்திப்பு நிகழ்த்திய இந்தக் குடும்பங்கள் சிட்னியின் மூன்று ஜமாஅத்துகளான Black Town, Marsden Park Utßm Mount Druitt ஆகிய பகுதிகளிலிருந்து வந்திருந்தன. இவர்கள் அனைவரும் தமது அன்பிற்குரிய தலைவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். மேலும், துஆக்களுக்கான விண்ணப்பங்களை முன்வைத்து, ஏராளமான துஆக்களைப் பெற்றுக் கொண்டனர். ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) கல்வியில் சிறந்து விளங்கும் சிறுவர், சிறுமிகளுக்குப் பேனாக்களையும், சிறிய வயதுக் குழந்தைகளுக்கு சாக்லேட்டுகளையும் அன்பளிப்பாக வழங்கினார்கள்.

சந்திப்புகளின் இறுதியில்,மரியாதைக்குரிய மஹ்மூத் அஹ்மது ஷாஹித் சாஹிப் (அமீர் மற்றும் முபல்லிஃக் இன்சார்ஜ் ஆஸ்திரேலியா) அலுவலகச் சந்திப்பை நிகழ்த்தினார். பல்வேறு அலுவலக விஷயங்கள் குறித்து ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களிடம் இருந்து வழிகாட்டுதல்களைப் பெற்றார்.

மதியம் 2:30 மணி வரை இந்தச் சந்திப்புகள் தொடர்ந்தன. அதன் பிறகு, ஹுஸுர் அன்வர் அவர்கள் 'மஸ்ஜித் பைத்துல் ஹுதா'விற்கு வருகை தந்து, ளுஹர் மற்றும் அஸர் தொழுகைகளைச் சேர்த்துத் தொழ வைத்தார்கள். இதன் பிறகு, ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்குத் திரும்பிச் சென்றார்கள்.

**ஹுஸுர் அன்வர் அவர்களுடன் தேசிய மஜ்லிஸே ஆமிலா குத்தாமுல் அஹ்மதிய்யா ஆஸ்திரேலியாவின் சந்திப்பு**

மாலை 6:15 மணிக்கு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) மஸ்ஜித் பைத்துல் ஹுதா'விற்கு வருகை தந்தார்கள். அங்கு நிகழ்ச்சி நிரலின்படி, ஆஸ்திரேலிய குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தேசிய மஜ்லிஸே ஆமிலாவிற்கான ஹுஸுர் அன்வர் அவர்களுடனான சந்திப்பு தொடங்கியது. ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் துஆ செய்து கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். எத்தனை மஜ்லிஸ்கள் உள்ளன?அவை அனைத்தும் மாதாந்திர அறிக்கைகளை அனுப்புகின்றனவா? பின்னர் அந்த அறிக்கைகள் மீதான கருத்துரைகள் அந்த மஜ்லிஸ்களுக்குத் திரும்ப அனுப்பப்படுகின்றனவா? என்று ஹுஸுர் அன்வர் அவர்கள் முஃதமித் எனும் பொதுச் செயலாளரிடம் கேட்டறிந்தார்கள்.

அதற்கு, முஃதமித் தமது அறிக்கையைச் சமர்ப்பித்து, 'எங்களிடம் 13 மஜ்லிஸ்கள் உள்ளன. அனைத்து மஜ்லிஸ்களும் தங்கள் அறிக்கைகளை அனுப்புகின்றன;அந்த அறிக்கைகள் மீது கருத்துரைகளைத் திரும்ப அனுப்புகிறாா்' என்று முஃதமித் கூறினார்.

ஹுஸுர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: 'ஸத்ர் குத்தாமுல் அஹ்மதிய்யாவும் இந்த அறிக்கைகளைப் படிக்க வேண்டும். அவர் தனது கருத்துரைகளையும் அனுப்ப வேண்டும். மஜ்லிஸ்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? எங்கு அவர்களது பணியில் குறைபாடு உள்ளது? நிகழ்ச்சிகளை நடத்துவதில் எங்கு தொய்வு ஏற்பட்டுள்ளது? என்பது பற்றி ஸத்ர் ஸாஹிபிற்குத் தெரிந்திருக்க வேண்டும்' என்று கூறினார்கள்.

நாயிப் ஸத்ர் அவல் மற்றும் முஹ்தமிம் மால் ஆகியோர் தங்களது அறிக்கையைச் சமர்ப்பித்து, 'குத்தாமுல் அஹ்மதிய்யா ஆஸ்திரேலியாவின் வருடாந்திர வரவுசெலவுத் திட்டம் (Budget) 2,10,000 டாலர்களாக இருந்தது. ஆனால் அல்லாஹ்வின் அருளால் எங்களது வசூல் 2,13,000 டாலர்களுக்கும் அதிகமாக ஆகியுள்ளது' என்று கூறினர்.

ஹுஸுர் அன்வர் அவர்கள் வினவியபோது, முஃதமிம் மால் கூறினார்: வருமானத்தின் அடிப்படையில் காதிம்களில் பெரும்பான்மையான நபர்கள் தவறாமல் சந்தா செலுத்துகிறார்கள். சுமார் 40 காதிம்கள் மட்டுமே இதுவரை சந்தா செலுத்தவில்லை' என்று தெரிவித்தார். மேலும், முஃதமிம் மால் கூறினார்: மால் துறையின் பதிவேட்டின்படி 778 சந்தா செலுத்தும் காதிம்கள் உள்ளனர்.

முஃதமிம் தஜ்னீத் செயலாளரிடம் ஹுஸுர் அன்வர் அவர்கள், 'உங்கள் மொத்த தஜ்னீத் எண்ணிக்கை என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவர், எங்களது தஜ்னீத் எண்ணிக்கை 830 ஆகும் என்று தெரிவித்தார். அதற்கு, 'இதன் பொருள், எந்த காதிம்கள் இன்னும் சந்தா செலுத்தவில்லையோ அவர்கள் தஜ்னீதில் சேர்க்கப்பட்டுள்ளனர்; ஆனால் இன்னும் சந்தா அமைப்பில் இடம் பெறவில்லை' என்று ஹுஸுர் அன்வர் அவர்கள் கூறினார்கள்.

இரண்டாம் பிரிவு நாயிப் ஸத்ர் கூறினார்: ஸத்ர் ஸாஹிப் அவர்கள் ஒப்படைக்கும் பல்வேறு பணிகளை நான் செய்து வருகிறேன். தற்போது வருடாந்திர ஜல்ஸா மற்றும் ஹுஸுர் அன்வர் அவர்களின் வருகை தொடர்பான சில பொறுப்புகளை நிறைவேற்றி வருகிறேன். கித்மதே கல்க் செயலாளர் தனது அறிக்கையைச் சமர்ப்பித்து, எங்களது 337 காதிம்கள் ரத்த தானத்தில் பங்கேற்று ரத்தம் கொடுத்துள்ளனர் என்று தெரிவித்தார்.

இதற்கு ஹுஸுர் அன்வர் அவர்கள் கூறியதாவது: ரத்த தான முகாம்களை அண்டை வீட்டார்கள் போன்ற பிற மக்களும் பங்கேற்கும் வகையில் ஏற்பாடு செய்யுங்கள். இங்கிலாந்தில் அண்டை வீட்டாரும் வந்து பங்கேற்கும் வகையில்தான் ஏற்பாடு செய்கிறார்கள்.அதற்கு மருத்துவமனைகளின் ஆம்புலன்ஸ்களும் அவர்களின் குழுக்களும் வருகின்றன; இதன் மூலம் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகமும் கிடைக்கிறது.மேலும், மக்கள் சேவையின் இந்தத் திட்டங்களை உங்களுடன் மட்டும் சுருக்கிக் கொள்ளாதீர்கள்; மற்றவர்களையும் அதிக எண்ணிக்கையில் சேருங்கள். நிகழ்ச்சி உங்களுடையதாக இருக்கும், ஊடகக் கவரேஜ் உங்கள் பெயரிலேயே இருக்கும். (தொடரும்......)

தமிழாக்கம்

முரப்பி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *  * * * * * *

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad